# தமிழரசு

16-11-1990 ரூ.1






தோற்றம்:
14.11.1889

மறைவு:
27.5.1964

# இந்த இதழில்...


உடுமலைப்பேட்டையில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ... 2

பாவேந்தரின் மொழியுணர்ச்சி
—மாண்புமிகு சட்டப்பேரவைத்தலைவர் திரு. மு. தமிழ்க்குடிமகன் ... 4

சென்னையில் மழைவெள்ளம்: பாதிக்கப்பட்டோருக்கு அரசு உதவி ... 8

எடுத்த காரியம் யாவினும் வெற்றி
—மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... 9

பதிவுத்துறை அமைப்பும் பணிகளும்
—மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன் ... 12

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்
—மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு ... 15

காஞ்சியில் முப்பெரும் விழா ... 17

தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவு ... 20

கூட்டுறவு ஒரு கலங்கரை விளக்கு ... 23

இதயத்தை வென்றவர்!
—அறிஞர் அண்ணா ... 24

கீழ் பவானி பாசன மேம்பாட்டுத் திட்டம் ... 26

இராமநாதபுரம் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் ... 33

தீரர் மருதிருவருக்குத் திருப்பத்தூரில் நினைவகம்
—எஸ்.எஸ். தென்னரசு எம்.எல்.ஏ. ... 34

நீலகிரியில் நிவாரணப் பணிகள் ... 41



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

ஐப்பசித் திங்கள் - 30

மலர்: 21 இதழ்: 10

16-11-1990


சென்னை கிண்டி நேரு சாலைச் சந்திப்பில் உள்ள பண்டித நேரு திருவுருவச் சிலைக்கு மேதகு ஆளுநர், மாண்புமிகு முதல்வர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் மாலையணிவித்தார்கள். (14.11.90)





# சென்னையில் மழை வெள்ளம் பாதிக்கப்பட்டோருக்கு அரசு உதவி

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு தலா ரூ.500 வீதமும், வெள்ளம் தேங்கிய குடிசைகளுக்கு தலா ரூ.250 வீதமும் என ரூ.2 கோடி செலவில் குடிசை வாழ் மக்களுக்கு உதவிகள் வழங்கிட முதல்வர் கலைஞர் அவர்கள் உத்திர விட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டில், அண்மையில் பத்து நாட்களுக்கு மேலாகத் தொடர்ந்து பெரு மழை பெய்தது. ஆறு ஏழு நாட்கள் அடை மழையாக இருந்தது.

சென்னை மாநகரம் முழுவதும் வெள்ளம் சூழ்ந்தமையால் குடிசை வாசிகளின் அன்றாட வாழ்க்கையும், சாலைப் போக்குவரத்தும் பெரிதும் பாதிக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட குடிசை வாசிகளையெல்லாம் அரசும், மாநகராட்சியும் ஆங்காங்குப் பள்ளிகள், கல்யாண மண்டபங்கள் முதலான இடங்களில் பாதுகாப்பாகத் தங்க வைத்து அவர்களுக்கு உணவு வழங்கின.

முதல்வர் கலைஞர் அவர்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார்கள். சுவர் இடிந்து விழுந்ததில் உயிர் இழந்தவர்கள் குடும்பங்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.27 ஆயிரம் நிதியுதவி வழங்கினார்கள்.

அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் ஆங்காங்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று பார்த்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறியதுடன் தேவையான உடனடி நிவாரணப் பணிகளுக்கும் ஆவன செய்தனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கெல்லாம் தலா 5 கிலோ இலவச அரிசி வழங்கப்பட்டது. வேட்டி புடவைகளும் கொடுக்கப்பட்டன.

நியாய விலையில் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்டு வந்த 12 கிலோ அரிசி வெள்ளப்பாதிப்பையொட்டி 20 கிலோவாக உயர்த்தப் பட்டது.

மாநகரெங்கும் பாதிக்கப்பட்ட சாலைகளெல்லாம் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப் பட்டுச் செப்பனிடப்பட்டு வருகின்றன.







# பாவேந்தரின் மொழியுணர்ச்சி

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர்

டாக்டர் மு. தமிழ்க்குடிமகன்

ரசூல் கம்சுதாவ் எனும் உருசிய நாட்டுக் கவிஞனின் தாய்மொழி அவார். அம்மொழியின் மீது அளவு கடந்த காதல் கொண்டவன் அவன். அவன் குறிப்பிட்டான்:

'என்னுடைய அவார் மொழி நாளைக்கு அழிந்துவிடும் என்ற நிலை ஏற்படுமானால், நான் இன்றைக்கே அழிந்து விடுவேன்!' என்று.

அயர்லாந்து நாட்டு விடுதலை வீரனான டிவேலராவுக்கும் இக்கட்டானதொரு சூழல் நேர்ந்தது. மொழியைப் பேசினால் சிறையில் அடைப்போம் என்று ஆட்சியாளர் மிரட்டினர். அந்த நிலையிலும் —

'If I am asked to choose between the language without freedom and freedom without language, I shall certainly choose the former' என்றான்.

'மொழி பேச முடியாத வெட்டி விடுதலையை விட என் மொழியைப் பேச வாய்ப்பளிக்கும் சிறைவாழ்வே மேல்' என்றான்.

மொழியுணர்ச்சியில், இவர்களையெல்லாம் விஞ்சியவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் என்பதை யாரும் மறக்க முடியாது.

தமிழின் தொன்மை உலகத்தாரால் இன்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அதை பாரதிதாசன் குறிப்பிடும்போது,

''திங்களொடும் செழும்பரிதி
தன்னோடும், விண்ணோடும்,
உடுக்களோடும்
மங்குகடல் இவற்றோடும்
பிறந்த தமிழுடன் பிறந்தோம்!''

என்கிறார். இயற்கைப் பொருள்கள் இயங்கத் தொடங்கியபோதே தமிழ் மக்கள் மொழியாகி விட்டது எனும் பெருமிதம் இங்கே தொனிக்கிறது.

தமிழின் தன்மையை, ஆற்றலைப் பாவேந்தரை விட வேறு யார் அழகாகச் சொல்லிவிடமுடியும்?

தண்ணொளி தரும் நிலவாக, சமூகத்தின் விளைவுக்கு நீராக, கமழும் மணமாக, வாழ்வுக்கு நாம் நிறுவிய ஊராக, மயக்கும் மதுவாக, உரிமைச் செம்பயிருக்கு வேராகத் தமிழ் திகழ்கின்றது.

இளமைக்குப் பாலாக, புகழ்மிக்க புலவர்க்கு வேலாக, நம் உயர்வுக்கு வானாக, நம் அயர் வினைப் போக்கும் புத்துணர்ச்சி தரும் தேனாக, அறிவுக்குத் தோளாக, விளங்குவது தமிழ் என்று பாவேந்தர் எப்படியெல்லாம் தமிழின் ஆற்றலைப் புகழ்கின்றார்?

போனால் வாராதது உயிர். எனினும் உயிரினும் மேலானதொன்றுமில்லை எனும் உலகியல் உண்மையை மனத்திற்கொண்டுதான் 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்றார் வள்ளுவர். பாவேந்தர் இந்தக் கோட்பாட்டில் மிகவும் அழுந்தி நிற்கிறார்.

'நல்லுயிர் உடம்பு செந்தமிழ் மூன்றும்
நான் நான் நான்'

என்று மார்தட்டுகிறார்.

'தமிழ் எங்கள் உயிர் என்பதாலே - வெல்லும்
தரமுண்டு தமிழுக்கு இப்புவி மேலே'

என்கிறார்.

கனியின் சுளையும், கழையின் சாறும், பனி மலர்த் தேனும், காய்ச்சிய பாகின் சுவையும், ஆவின் பாலும், தெங்கின் இளநீரும் இனியன என்பேன், எனினும் தமிழே என்னுயிர் என்பேன்' என்றார்.

சோறு, கறி, மிளகின் சாறு, கிழங்கு வகை, தின்பண்டங்கள் எல்லாம் தமிழா! உன்னை வளர்ப்பன எனினும், உயிரை, உணர்வை வளர்ப்பது தமிழே என்கின்றார்.

தமிழை உயிராகப் போற்றும் பாவேந்தரின் மொழியுணர்ச்சியை யார் குறைத்து மதிப்பிட முடியும்?

தமிழை உயிராகக் கருதியதால்தான் தமிழுக்காக உயிரையும் தரக்கூடிய உணர்ச்சியைப் பாவேந்தர் புலப்படுத்துகிறார்.

'செந்தமிழே உயிரே! நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக்களித் தேனே!

என்று கூறிவிட்டு,

செந்தமிழ்க்கே தீமை வந்த பின்னும்-இந்தத்
தேகம் இருந்தொரு லாப முண்டோ!'

என்று கொதிக்கும் போது தமிழின் வாழ்வுக்காக எதையும் இழக்க முன்வரும் அவரது மொழிப் பற்றை, மொழியுணர்ச்சியைத்தான் காண முடிகிறது.

'தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்' என்று கூறுகிறார். தமிழுக்குப் பகையாவாரை வீழ்த்துவதில் எதிர்த்துப் போரிடுவதில் பாவேந்தர் காட்டும் வேகம் எல்லையற்றது;

தமிழின் இனிமையைப் பாவேந்தர் அருமையாகப் புலப்படுத்துகிறார். தென்றல் புறஇன்பம் அளித்தால், தமிழ் அக இன்பம் அளிப்பது என்கிறார்.

'இனிமைத் தமிழ் மொழி எமது - எமக்
கின்பம் தரும்படி வாய்த்தநல் லமுது'
என்று கூறி மகிழ்கிறார்.

சாதி மதங்கடந்து கலப்புமணம், காதல்மணம், விதவை மறுமணம் எல்லாம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தினாலும், மனைவி தமிழ் அறிந்தவளாக இருக்கவேண்டுமாம்;

'அழகும் இன்பமும் தழையக் கிடப்பினும்
பழகு தமிழறியாப் பாவை தமிழருக்கு
உயிரில்லா உடலன்றோ?'

எத்தனையோபேர் தமிழ் தரும் இன்பத்தைக் கூட வெகுவாகப் பாராட்டித்தான் உள்ளனர்.

'இருந்தமிழே உன்னால் இருந்தேன் - இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்'
என்பாரும் உண்டு.

ஆனால் உலகோர் அனைவரும் ஒப்புக் கொள்ளும் பெண்ணின்பத்தைக் கூடப் பின்னுக்குத் தள்ளிவிட்டுத் தமிழின்பத்துக்காகத் தவிப்பார் பாவேந்தர்.

மங்கை ஒருத்திதரும் சுகமும் - எம்
மாந்தமிழ்க் கீடில்லை கண்டீர்'

எனும் வரிகளின் அழுத்தத்தை எந்தக் கவிஞனும் விஞ்ச முடியாது.



அத்தகைய தமிழுக்குத் தொண்டு செய்வதுதான் முழுவாழ்வு எனக்கருதுபவர் பாவேந்தர்.

'தொண்டு செய்வாய் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும் - துடித்தெழுந்தே'

'தமிழுண்டு தமிழ்மக்க ளுண்டு - இன்பத்
தமிழுக்கு நாளும்செய் வோம் நல்ல தொண்டு'

என்று கூறுவதோடு,

'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை' என்றும் அடித்துக் கூறுகிறார். சாகாத பாரதியை மேற்கோள் காட்டுகிறார்.

'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்பதில் அசைக்க முடியாத அழுத்தம் படைத்தவர் பாவேந்தர்.

கோயிலில் தமிழில் வழிபாடு, நீதிமன்றத்தில் தமிழில் முறையீடு, உயர்கல்வியில் தமிழில் உரைப் பாடு, அலுவலகத்தில் ஆட்சிமொழியாகத் தமிழின் செயற்பாடு ஆகியவற்றை வற்புறுத்தும் வகையில் தான் அவரது 'தமிழியக்கம்' தோன்றுகிறது.

தமிழுணர்ச்சியென்பது தனிமனித உணர்வாக, முக்கல் முனகலாக அவருக்குள்ளேயே எழுந்து அழிந்து விடாமல் இவ்வுணர்ச்சி, இயக்கமாக உருப்பெறவேண்டும் என்று கருதியவர் பாவேந்தர்.

பலரும் இந்த உணர்ச்சியின்றிச் செயலாற்றுகின்றனரே என்று அவர் அடைகின்ற வருத்தம் பெரியது.

கரும்புதந்த தீஞ்சாறே,
கனிதந்த நறுஞ்சுளையே
கவின்செய் முல்லை

அரும்புதந்த வெண்ணகையே
அணிதந்த செந்தமிழே
அன்பே, கட்டி

இரும்புதந்த நெஞ்சுடையார்
துறைதோறும் நின்னெழிலை
ஈட ழித்து

வரும்புதுமை நினைக்கையிலே
நெஞ்சுபதைக் கும்சொல்ல
வாய்ப தைக்கும்.'

தமிழ் வாழ்வுதான் தன் வாழ்வு; தமிழுக்கு ஏதாவது நேர்ந்தால் தனக்கும் வாழ்வில்லை என்று தெளிவு படுத்துபவர்,

''நைந்தா யெனில் நைந்து போகும் என்வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்கும் தானே!''

என்று நெஞ்சுருகக் கூறுகிறார்.

எழுத்தில், பேச்சில், அலுவலக மடல் பரிமாற்றத்தில், பெயரில், விளம்பரத்தில் தமிழ் கோலோச்ச வேண்டும் எனும் தணியாத வேட்கை அவர்க்குண்டு.

''வாணிகர், தம் முகவரியை
வரைகின்ற பலகையில், ஆங்
கிலமா வேண்டும்?

மாணுயர்ந்த செந்தமிழால்
வரைக என அன்னவர்க்குச்
சொல்ல வேண்டும்!''

என்று சொல்லிவிட்டு அதற்கான எடுத்துக் காட்டுகள் சிலவற்றையும் தருகிறார்.

''அறிவிப்புப் பலகையெல்லாம்
அருந்தமிழ்ச்சொல் ஆக்குவதே
அன்றி, அச்சொல்

குறைவற்ற தொடராகக்
குற்றமற்ற சொல்லாக
அமையு மாயின்

மறுவற்றுத் திகழாளோ
செந்தமிழ்த்தாய்? தமிழ்மக்கள்
மகிழ்ந்தி டாரோ?

குறியுற்ற மறவர்களே?
இப்பணியை முடிப்பதற்கோர்
கூட்டம் வேண்டும்.''

என்று அழைக்கின்றார்.

நல்ல தமிழில் எழுத முன் வாராத சுவடிக்குக் கடும் எச்சரிக்கை விடுகின்றார்.

'தமிழ்தழுவாச் சுவடியினைத்
தணல்தழுவா திராதினிமேல்
தமிழ்நா டெங்கும்'

என்று கொஞ்சம் கடுமையாகவே கூறுகிறார்.

'தமிழ்கல்வி தமிழ்நாட்டில்
கட்டாயம் என்பதொரு
சட்டம்'

செய்ய வேண்டும் என்கிறார்.

''அரசினரின் மொழியாக,
அரசியலார் மொழியாக,
அரசியல் சார்

வரிசையுறு சட்டமன்றின்
மொழியாக, வையம்அறி
மொழிய தாகத்,



திருமலிந்ததமிழ் மொழிதான்
ஆகும்வகை நம்புலவர்
சேர்ந்து தொண்டு

புரிக என வேண்டுகின்றோம்
பொழிக என வேண்டுகின்றோம்
பொன்ம ழைதான்!''

''காற்செருப்பைப் பிறனொருவன்
கழிவிடத்தில் தள்ளிடினும்
பொறாத உள்ளம்,

மேற்படுத்தும் எவற்றினுக்கும்
மேற்பட்ட தன்மொழியைத்
தமிழைத் தீயோர்

போற்றுவதற் குரியதொரு
பொதுவினின்று நீக்கிவைத்தால்
பொறுப்ப துண்டோ?''

என்று வேகம் காட்டித் தமிழுக்கு உரிய இடத்தைக் கொடுத்தே ஆகவேண்டும் என்று வாதிடுகின்றார்.

எழுத்தாளர்கள் செய்யும் தவற்றை இவரைப் போல் யாரும் படம் பிடித்ததில்லை.

''ஆங்கிலத்தில் புலவரெனில்
அரசினரின் அலுவலிலே
அமர்ந்தி ருப்பார்!

பாங்குறு செந் தமிழ்ப்புலமை
படைத்தாரேல் பள்ளியிலே
அமர்ந்தி ருப்பார்!

தீங்குற்ற இசைப்புலமை
சிறிதிருந்தால் படத்தொழிலில்
சேர்ந்தி ருப்பார்!

ஈங்கிவற்றில் ஏதுமிலார்
தமிழினிலே ஏடெழுதிப்
பிழைக்க வந்தார்.''

இவ்வளவு சொல்லியும் தமிழுக்கு ஆக்கம் விளையவில்லையெனில் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்பதுதான் பாவேந்தரின் அணுகுமுறை. அதனால் தான் அவர் புரட்சிக் கவிஞரானார்!

''கடல்போலும் எழுக! கடல்
முழக்கம்போல் கழறிடுக!
தமிழ்வாழ் கென்று?
கெடல்எங்கே தமிழின்நலம்?
அங்கெல்லாம் தலையிட்டுக்
கிளர்ச்சி செய்க!

விழிப்போரே நிலைகாண்பார்!
விதைப்போரே அறுத்திடுவார்
களைகாண்டோறும்
அழிப்போரே அறஞ்செய்வார்
அறிந்தோரே உயர்ந்திடுவார்!
ஆதல் ஆர்வம்

செழிப்போரே இளைஞர்களே,
தென்னாட்டுச் சிங்கங்காள்!
எழுக! நம் தாய்

மொழிப்போரே வேண்டுவது
தொடக்கஞ்செய் வீர்வெல்வீர்!
மொழிப்போர் வெல்க!''

தமிழின் இனிமையை உணர்ந்து, அதன் வாழ்வோடு தன் வாழ்வையும் இணைத்துக் கொண்டு, தமிழுக்குத் தொண்டு செய்து, தமிழகத்தின் அனைத்துத் துறைகளிலும் தமிழ் மேலோங்கி நிற்கவேண்டும் என்ற செயல்திட்டம் வகுத்து, அதைச் செயல்படுத்தக் கிளர்ச்சி செய்யவும் தயங்காத பாவேந்தர், அதனால் சிறைபுக நேர்ந்தாலும்

'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை - எமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை'

என்று நெஞ்சு நிமிர்த்தி நடைபோடும் பாவேந்தர்.

இந்தப் பாவேந்தர்க்கு நூற்றாண்டுவிழா. இவரது சமூக சீர்திருத்தப் படைப்புகள், காதல் பாடல்கள், வருணனைக் கவிதைகள் அனைத்துக்கும் ஊடகமாக, உள்ளொளியாக நிற்பது பாவேந்தரின் மொழியுணர்ச்சிதான். அந்த உணர்ச்சியை நாம் அனைவரும் பெற்றுத் தமிழுக்கு ஏற்றம் விளைவிப்போமாக!

***24.10.1990 அன்று, சென்னை வானொலியில் ஆற்றிய உரை***



மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள், சென்னையில் குழந்தை எழுத்தாளர் சங்கம் சார்பில் நடைபெற்ற குழந்தைகள் தினவிழாவிற்குத் தலைமை தாங்கி, குழந்தை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். (11.11.1990)

# அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்
## முதல்வர் கலைஞர் உரை

"தொழில் வளர வேண்டுமென்பதிலே அக்கறை எடுத்துக்கொண்டுள்ள இந்த அரசு தொழிலை வளர்ப்பதற்காகத் தமிழகத்திலே பின்தங்கிய பகுதிகள் என்று 105 பகுதிகளை அறிவித்தது. ஏற்கனவே மத்திய அரசு ஒவ்வொரு மாநிலத்திலும் பின்தங்கிய பகுதியை அறிவித்து, அதற்கான நிதியுதவியை அளித்து, தொழில் வளரச் செய்து வந்த நிலை இடைக்காலத்திலே மாறிவிட்ட காரணத்தால், இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன், 105 பகுதிகளைப் பின்தங்கிய பகுதிகளாக அறிவித்து, அங்கெல்லாம் தொழில் துறையிலே முன்னேற்றம் காண்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முன் வந்தது. அந்த 105 பகுதிகளில் மேலும் ஒரு பகுதியாகப் பல்லடத்தைச் சேர்க்க வேண்டும், அதைப் பின்தங்கிய பகுதியாக ஆக்க வேண்டும் என்று அமைச்சர் கண்ணப்பன் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எடுத்துச் சொன்னார் என்றாலும்கூட, அவருடைய கூற்றில் நியாயம் இருக்கிறதென்பதை அறிந்த நான், பல்லடத்தைத் தொழில் வளர்ச்சியிலே பின்தங்கிய பகுதி என்று அறிவித்துவிட்டு அதற்கான கோப்பில்கையெழுத்திட்டுவிட்டு இங்கே வந்திருக்கிறேன் என்பதை இப்பொழுதுதான் அமைச்சர் கண்ணப்பனுக்கு இந்தக் கூட்டத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு காலகட்டத்தில் ஐநூறு கோடி ரூபாய் தமிழக அரசின் பட்ஜெட் தொகையாக இருந்தது. பிறகு அது ஆயிரம் கோடி ரூபாயாக வளர்ந்தது. இன்றைய தினம் தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை-பட்ஜெட் சமர்ப்பிக்கிறோம் என்றால் அது ஏறத்தாழ நாலாயிரம் கோடி ரூபாயிலிருந்து ஐயாயிரம் கோடி ரூபாய் வரையில் வளர்ந்திருக்கிறது. அப்படி வளர்ந்துள்ள சூழ்நிலையில் ஏன் விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கையான இலவச மின்சாரம் என்ற கோரிக்கையை நிறைவேற்றக் கூடாதென்ற கேள்வி என்னை ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அந்த நாள் முதல் குடைந்து கொண்டே இருந்தது. அதுபற்றி அதிகாரிகள் மட்டத்தில் நான் பேசுகிற நேரத்திலும், பொருளாதார நிபுணர்கள் மட்டத்திலே பேசுகிற நேரத்திலும், தொழில் வல்லுநர்களிடத்தில் நான் பேசுகிற நேரத்திலும் எனக்கு வேறுபாடான கருத்துக்கள், முரண்டபாடான கருத்துக்கள் எடுத்துச் சொல்லப் பட்டன.

எழுபத்தி ஐந்து ரூபாய் என்றிருந்த அந்தக் கட்டணத்தை ஐம்பது ரூபாயாகக் குறைத்து இது ஒரு கட்டம் என்று அறிவித்து, இனிமேல் பம்பு செட் மின் இணைப்புகளுக்குக்கட்டணமே கிடையாதென்று அறிவித்திருக்கிறோம். இந்த பம்புசெட்டுக்கான கட்டணத்தை விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் இரு பகுதிகளாகப் பிரித்து ஆகஸ்ட் மாதத்தில் ஒரு பகுதி கட்டுகிறார்கள். இன்னொரு பகுதியை பிப்ரவரி மாதத்திலே கட்டுகிறார்கள். ஆகஸ்ட் மாதத்திற்குக்கட்ட வேண்டிய பணத்தைக் கட்டி விட்டவர்கள் செப்டம்பர், அக்டோபருக்குக் கூட கட்டத் தேவையில்லை. நான் அறிவித்த நாளிலிருந்து மாத்திரமல்ல, அதற்கு முன்பு இரண்டு மாதங்களுக்கு முன் தேதியிட்டே கூட அவர்கள் கட்ட வேண்டிய கட்டணத்தைக் கட்ட வேண்டிய அவசியமில்லை என்று நான் அறிவித்திருக்கின்றேன்.

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, தேசிய முன்னணி அரசு அமையுமேயானால் பத்தாயிரம் ரூபாய் வரையிலே அவர்கள் வாங்கியுள்ள கூட்டுறவுக்கடன், வங்கிக் கடன் பதினைந்தாயிரம் ரூபாய் வாங்கியிருந்தால்கூட அதில் பத்தாயிரம் ரூபாய் வரையில், ஆறாயிரம் ஏழாயிரம் வாங்கியிருந்தால் முழுமையாக என்று, தேசிய முன்னணி கட்சி ஆட்சிக்கு வருவதற்கு முன்பு தேர்தல் அறிவிப்பில் குறிப்பிட்டது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் அந்த உறுதி மொழியை நினைவில் கொண்டு பத்தாயிரம் ரூபாய் வரையிலே விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்யலாமென்று மாநிலங்களுக்குத் தாக்கீது பிறப்பிக்கப்பட்டது. அதிலும் இன்றைக்கு இந்தியாவிலே இந்த பத்தாயிரம் ரூபாய் வங்கிக் கடன், கூட்டுறவுக் கடன் இரண்டு கடனையும் தள்ளுபடி செய்து அதற்காக ஐநூறு கோடி ரூபாய் இழப்பை இன்றைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சூழ்நிலையில் முதல் மாநிலமாக இந்தியாவில் இருக்கிற மாநிலம் தமிழ்நாடு தான்- இந்த ஆட்சிதான் என்பதையும் நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்வேன்.

ஒரு நாட்டிலே வாழ்கின்ற குடிமக்களுடைய மிக முக்கியமான தேவை - அத்தியாவசியத் தேவை உணவு, உடை, உறையுள். அந்த உறையுள் ஏழைகளுக்குக் கிடைக்கவில்லை. கடந்தகால தி.மு.க. ஆட்சியில்-இந்தியாவிலேயே முதன்முதலாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசமாக கான்கிரீட் வீடுகள் கட்டித் தருகின்ற திட்டத்தை அறிவித்த ஆட்சியும் தி.மு.கழக ஆட்சிதான்- ஒரு நாற்பதாயிரம், ஐம்பதாயிரம் வீடுகளைக்கட்டத் தொடங்கி அவைகள் முற்றுப் பெற்ற அந்த காலக்கட்டத்தில் ஆட்சி கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு அந்த முயற்சி தொடரவில்லை. தொடர்ந்து, அங்கொன்றும் இங்கொன்றுமாக! ஓட்டு வீடுகளாக! நாங்கள் ஆட்சிப் பொறுப்பை மீண்டும் ஏற்ற பிறகு இப்பொழுது அந்த வீடுகள் எல்லாம்

கான்கிரீட் வீடுகளாக இலவசமாகக்கட்டித்தரப்பட வேண்டுமென்று அறிவித்து இந்த மாவட்டத்தில் மாத்திரம் இன்றைக்கு ஒரு ஐநூறு தொகுப்பு வீடுகளைத்திறந்து வைக்கிற நிகழ்ச்சி இந்த விழா விலே இணைக்கப்பட்டிருப்பதை நீங்கள் காணு கின்றீர்கள்.

தமிழ்நாடு முழுவதும், இன்றைய தினம் பல் லாயிரக்கணக்கான வீடுகள் ஆதிதிராவிட மக் களுக்கு கான்கிரீட் வீடுகள் நாற்பத்தி ஐந்தாயிரம் வீடுகள் இதுவரையிலே இந்த இருபது மாத காலத்தில் கட்டப்பட்டிருக்கின்றன. கடந்த பத் தாண்டுக் காலத்தில் எவ்வளவு என்று எண்ணிப் பாருங்கள், கேட்டுப் பாருங்கள்.

இந்தத்துறையின்- உள்ளாட்சித்துறையின் அமைச்சர் கோ.சி.மணி என்னை இரண்டு நாட் களுக்கு முன்பு சந்தித்து, ஒரே நேரத்தில் நாற்பத்தி ஐந்தாயிரம் தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டிருக் கின்றன. அதற்கு நீங்கள் ஒரு ரதயாத்திரை செய்ய வேண்டும்- வீடுகளைத் திறக்கத்தான்! இடிக்க அல்ல! திறப்பதற்கு நீங்கள் ஒரு யாத்திரை மேற் கொள்ள வேண்டும். ஒருவாரம் அல்லது பத்து நாள் சுற்றுப் பயணம் செய்து அந்த நாற்பத்தை யாயிரம் வீடுகளைப் பல்வேறு கிராமங்களில்

## அம்பேத்கர் நூற்றாண்டு

**சுயமரியாதையில்லாமல் வாழ்வதும் வாழ நினைப் பதும் மிகப்பெரிய அவமானமாகும்; ஒவ்வொருவரது வாழ்க்கைக்கும் மிக முக்கியமான ஓர் அம்சமே சுயமரியாதை! — டாக்டர் அம்பேத்கர்**

திறந்து வைக்க வேண்டுமென்று என்னிடத்திலே கேட்டுக் கொண்டார். வெல்லம் தின்பதற்கு வெறுப்பா எனக்கு? ஒத்துக் கொண்டிருக்கின்றேன். விரைவில் அந்த விழாக்கள் நடைபெறவிருக்கின்றன.

நான் முதலில் குறிப்பிட்டதைப்போல் உறை யுள்-வீடு ஏழை எளியோர்க்குத் தருகிறோம். உடை, அந்த உடையை நெய்கின்ற கைத்தறி நெசவாளர்களுடைய கஷ்டத்தைப்போக்கபல்வேறு திட்டங்களை வகுக்கிறோம். உணவு என்பது அரிசியோ, கோதுமையோ மாத்திரமல்ல. அந்த உணவிலே மிக முக்கியமான இடத்தை வகிப்பது தண்ணீர். அந்தத் தண்ணீரைப்பெறுவதற்குத்தான் இன்றைக்கு இந்த மாவட்டத்தில் பல்வேறுகுடிநீர்த் திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டு விழாக்களை இந்த நிகழ்ச்சியிலே நாம் இணைத்திருக்கின்றோம்.

அதிலே குறிப்பாக உடுமலை நகராட்சியில் நான்கு கோடியே எழுபது இலட்ச ரூபாய் செல வில் குடிநீர்த்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப் பட்டிருக்கிறது.

குடிதண்ணீர்த் திட்டம் மார்ச் மாதம் 92-ஆம் ஆண்டு வேலைகள் எல்லாம் முடிவுற்று, அந்தத் தண்ணீரை உடுமலை மக்கள் பெறலாம். அந்தப் பயனை அனுபவிக்கலாம் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளாட்சி, நகராட்சி வெளியிலே உள்ள பதினோரு கிராமங்கள் உட்பட ஆறு கோடியே அறுபத்தி நான்கு இலட்சத்திற்கான திட்டம் 1993-ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலே முடி வுறும். அந்தப் பயனை பொள்ளாச்சி நகரமும், வழியிலே உள்ள பதினோரு கிராமங்களும் பெற லாம். உடுமலை, மடத்துக்குளம் ஒன்றியங்களில் ஒன்பது குடியிருப்புக்களுக்கான குடிதண்ணீர்த் திட்டம் - 41.64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உடுமலை, மடத்துக்குளம் ஒன்றியங்களில் ஒன்பது குடியிருப்புகளுக்கான திட்டம் - குடிதண்ணீர்த் திட்டம் 91-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடிவு பெறும் ரூ. 33.75 இலட்சம் தமிழக அரசின் சார் பிலும், ஊராட்சிஒன்றியங்களின்சார்பில்ரூ.11.12 இலட்சம் மொத்தம். ரூ. 44.87 இலட்சத்தின் கீழ் 157 வேலைகள் நடைபெறும்.

அவ்வப்பொழுது விரைவிலே 91-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலே இந்த 157 வேலைகளும் நிறைவேற்ற முடியும்.

ஆதிதிராவிடர்களுக்கான தொகுப்பு வீடுகள் ஐநூறு தொகுப்பு வீடுகள் 91-ஆம் ஆண்டு மார்ச்சுக்குள் முடிவடையும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாதப்பட்டி, ஜோதிபாளையம் மற்றும் 24 குடியிருப்புகளுக்கு ஒரு கோடியே முப்பத்தி ஆறு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடித்தண்ணீர்த் திட்டம் முப்பதோராயிரம் மக்கள் பயனடை வார்கள். அதுவும் விரைவிலே முடிவடையும். தாமரைப்பாறை குடிதண்ணீர்த் திட்டம் இருபத்தி ரெண்டு கிராமங்கள் பயனடையும். ஏறத்தாழ முப்பதாயிரம் பேர் அதன் மூலம் பயன்பெறு வார்கள். ஒரு கோடியே எண்பது இலட்சம் ரூபாய் மதிப்பீடு. அதுவும் விரைவிலே முடிவடையும். பூலாங்கிணறு மற்றும் 25 குடியிருப்புக்கள் ஒரு கோடியே பதினேழு இலட்சம் மதிப்பீட்டில் நிறை வேற்றப்படுகின்ற அந்தத் திட்டமும், நாற்பது ஆயிரம் மக்கள் பயனடையக் கூடியத் திட்டம்;நான் படித்த இத்தனைத் திட்டங்களுக்கும் ஆகக் கூடிய மொத்தச் செலவு 20 கோடியே 36 இலட்சம் ரூபாய். இந்தத் திட்டங்களெல்லாம் விரைவிலே நிறைவேறுவதற்கான முயற்சிகளை நாங்கள் மேற் கொள்ளுவோம் என்று உங்களுக்குத் தெரிவித்து, எல்லா வகையிலும் உங்களுக்காக, உங்களோடு, உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசு தொடர்ந்து பணியாற்ற உங்கள் ஆதரவை வழங் குங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்."

**—கோவை மாவட்டம் உடுமலைப்பேட்டையில், 30.10.90 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், ஆற்றிய சொற்பொழிவிலிருந்து.**



# எடுத்த காரியம் யாவினும் வெற்றி காண்போம்!

## — முதல்வர் கலைஞர்

**மா**ண்புமிகு அமைச்சர் பெருமக்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, செயலாளர்களே, துறைத் தலைவர்களே, மாவட்ட ஆட்சியாளர்களே, காவல்துறை தலைவர் அவர்களே, காவல்துறை துணைத் தலைவர்களே, காவல்துறை கண்காணிப் பாளர்களே, ஏனைய அதிகாரிகளே,

மாவட்ட ஆட்சியாளர்கள், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்கள் ஆகியோரின் மாநாடு 1½ ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு இன்றும் நாளையும் நடைபெறுகிறது. தமிழக மக்களின் இன்றைய சமூக, பொருளாதார பிரச்சினை களுக்குத் தீர்வு காணவும், நமது மாநிலம் தொழில் மயமாவதை விரைவு படுத்தவும், பல்வேறு திட்டங் களையும், திட்டப் பணிகளையும் நிறைவேற்றி வருகிறோம். சமூக-பொருளாதார அமைப்பில் முழு அளவில் மாற்றத்திற்கான அறைகூவல்களை ஏற்று சாமானிய மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொறுப்பில் இருக்கின்றோம்.

இலங்கை அரசின் விமானங்கள், ஆயுதப் படைகள் ஈழத் தமிழர்கள்மீது நடத்திய அட்டூழி யங்களின் காரணமாக இந்த ஆண்டு ஜூலை மாதம் தொடங்கி இம்மாதத்தின் முன்பாதி வரை யிலும், ஏறத்தாழ 1,20,000 ஈழத் தமிழர்கள் அகதிகளாக நம் நாட்டுக்கு வந்துள்ளனர். அவர் களின் உறைவிட வசதிக்கு அரசு அல்லது அரசு சார்ந்த கட்டடங்களும், தனியார் கட்டடங்களும் போதுமான அளவிற்கு இல்லாமையால் இம் மாநிலம் முழுவதிலும் 20,000 குடும்பங்களுக்கு இடவசதி செய்து கொடுப்பதற்காகக் கொட்டகை, குடில்கள் கட்டுமாறு மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். அவர்களுக்கு இட வசதி செய்து கொடுக்கும் பிரச்சினையைத் தீர்க்க இந்த ஏற்பாடு உதவியது.

''கணக்கில் முன் பணமாக'' (on account advance) மத்திய அரசிடமிருந்து தொகையைப் பெறுவதற்கு முன்னர் மாநில அரசு இதற்குச் செலவு செய்து செலவு விவரங்களையும் இந்திய அரசிடம் கொடுக்க வேண்டியுள்ளது. நாளுக்கு நாள் வந்து குவியும் அகதிகளுக்காக மாநில அரசு இதுவரையிலும் ரூபாய் பதினோரு கோடி வழங்கி யுள்ளது. மத்திய அரசு ''கணக்கில் முன்பண மாக'' ரூபாய் ஏழு கோடி வழங்கியுள்ளது.

மாவட்ட ஆட்சியாளர்கள், காலத்தின் தேவை யறிந்து விரைந்து செயல்பட்டு அவர்களுக்கு இட வசதி, குடிநீர் வசதி, துப்புரவு வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி ஆகியவற்றைச் செய்து கொடுத் துள்ளனர் என்பது மனதிற்கு ஆறுதல் வழங்கு வதாக உள்ளது. ஆதரவற்ற அகதிகளையும்கூட சுரண்டக்கூடிய சமூக விரோத சக்திகள், இடைத் தரகர்கள் ஆகியோரின் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்திட விழிப்புடன் கண்காணிக்க வேண்டியது அவசியமாகிறது.

நமது தமிழகம் பொதுவாக அமைதிப் பூங்கா வாகத் திகழும் மாநிலமாகும். சட்டம்-ஒழுங்கு நிலைமை தொடர்ந்து நேர்த்தியாகவும், கட்டுப் பாட்டுக்குள்ளும் இருந்து வருகிறது. இங்கொன் றும் அங்கொன்றுமாக வன்முறைகள், வகுப்பு மோதல்கள், சமய காழ்ப்புணர்வு தகராறுகள் விரும்பத்தகாத நிகழ்ச்சிகளை உருவாக்குவதை அணையிட்டுத் தடுத்திட அரசு விரைந்து செயல் படுவதை நடுநிலையாளர் பாராட்டவே செய் கின்றனர்.

**மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை. (9.11.1990)**

சட்டம்-ஒழுங்கு-அமைதி குலைவுக்கான பிரச்சினை எதையும் யாரும் தோற்றுவிக்க முடியாமல் தொடர்ந்து விழிப்புடன் இருத்தல் வேண்டும். மாவட்ட நிர்வாகங்கள், ஒரு சமயத்தைச் சார்ந்த மக்கள் அடுத்த சமயத்தைச் சார்ந்த மக்களின் வழிபாட்டு இடங்கள் வழியாக ஊர்வலம் செல்வதற்கு அனுமதி வழங்குவதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். வகுப்புவாத உணர்வுகளைத் தூண்டும் நோக்குடன், சினமூட்டுகின்ற வகையில் அமைந்த சுவரொட்டிகள், அல்லது சுவரில் எழுதி வைத்தல், அல்லது துண்டுப் பிரசுரங்கள் அல்லது கைப்பிரதிகளை வழங்குதல் போன்றவை உறுதியாகத் தடை செய்யப்பட வேண்டும். வகுப்புவாத வன்முறைகளை உரிய முறையில் விரைந்து தடுக்கவும், கட்டுப்படுத்தவும், கிராம அளவிலும், மாவட்ட அளவிலும் அமைதிக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். அக்குழுக்களில் கட்சிச் சார்பற்ற முறையில் எல்லாக் கட்சியினரும், வகுப்பினரும் இடம் பெறும் வகையில் மாவட்ட நிர்வாகம் உடனடியாகச்செயல்பட வேண்டும்.

இராம ஜென்ம பூமி-பாபர் மசூதி கருத்து வேறுபாடு தமிழ்நாட்டிலும் சிறிய அளவில் பாதிப்பை உருவாக்க முயன்றது. ஆனால் அது முன் எச்சரிக்கையாக தடுக்கப்பட்டு விட்டது. எனினும் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், காவல் துறைக் கண்காணிப்பாளர்களும், தத்தம் மாவட்டங்களில் இன்னமும் போதுமான முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது அவசியம்.

கள்ளச்சாராயம் அருந்தி, உயிருக்கே தீங்கைத் தேடிக் கொள்ளல், அரசுக்குச் சேர வேண்டிய வருவாய் சமூக விரோதக் கும்பலிடம் சேருதல் முதலியவற்றை தடுத்திட மலிவு விலை மது கொண்டு வரப்பட்டது.

அரசின் பல்வேறு வளர்ச்சி-நல நடவடிக்கைத் திட்டங்களுக்கு நிதி அளிப்பதற்கு இதன் மூலம் கிடைக்கும் வருவாய் மிகவும் தேவைப்படுகிறது. கள்ளச்சாராயம்/போலி மது வகைகள் தலையெடுக்காமல் அறவே ஒழிக்க தீவிர கண்காணிப்பும், வருவாய்த்துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் ஆகியோரிடையே நெருங்கிய ஒத்துழைப்பும், வேலியே பயிரை மேயாத நிலையும் மிக மிகத் தேவை. 1989-90-இல் ரூபாய் 301 கோடியாக இருந்த ஆயத் தீர்வை வருவாய் 1990-91-ஆம் ஆண்டில் ரூபாய் 480 கோடி (ரூபாய் நானூற்று எண்பது கோடி) அளவிற்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றியமையாப் பொருள்கள் யாவும் சமூகத்தின் நலிந்த பிரிவினரது சக்திக்கேற்ற விலையில், அவர்களுக்கு எளிதில் கிடைக்க வேண்டும். இந்த நோக்கத்தோடு, பொதுப் பங்கீட்டு முறையை மிகத் திறமையாகவும், தங்கு தடையின்றியும் செயல்படச் செய்வதற்கு இந்த அரசு மிக உயர்ந்த முன்னுரிமை

**இன்றியமையாப் பொருள்கள் யாவும் சமூகத்தின் நலிந்த பிரிவினரது சக்திக்கேற்ற விலையில், அவர்களுக்கு எளிதில் கிடைக்க வேண்டும். இந்த நோக்கத்தோடு, பொதுப் பங்கீட்டு முறையை மிகத் திறமையாகவும், தங்கு தடையின்றியும் செயல்படச் செய்வதற்கு இந்த அரசு மிக உயர்ந்த முன்னுரிமை அளிக்கிறது.**

அளிக்கிறது. பொதுவாக, தமிழ்நாட்டில் பொதுப் பங்கீட்டு முறை மிக நன்றாகச் செயல்பட்டு வருகிறது. குடும்ப அட்டைதாரர்களுக்கு அதிகபட்சம் 12 கிலோ அரிசியும், விரும்பினால் ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் கூடுதலாக 8 கிலோ பச்சரிசியும் வழங்கப்படுகிறது. பிற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது நமது மாநிலத்தில் மட்டுமே நியாய விலைக் கடைகளில் அரிசி விலை குறைவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. என்றாலும், பொதுப் பங்கீட்டு ஏற்பாட்டில், எடைகள் குறைதல், பொருட்களை உரியவாறு உரிய நேரத்தில் வழங்காமை, தரம் குறைந்த பொருட்கள் போன்ற குறைகள் குறித்து தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

அரிசியைப் பொறுத்தவரை, 1990-ஆம் ஆண்டு சம்பா பருவத்தில் எய்திய சாதனைக் கொள்முதல் வாயிலாகவும் மத்திய அரசு இம் மாநிலத்திற்குக்கூடுதல் ஒதுக்கீடு அளித்துள்ளதாலும் அரிசி இருப்பு நிலைமை நிறைவளிப்பதாக் உள்ளது. சர்க்கரையைப் பொறுத்தவரையில், இம்மாநிலத்திற்கான ஒதுக்கீட்டை உயர்த்துமாறு, மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மத்திய அரசின் தற்போதைய சர்க்கரை ஒதுக்கீட்டில் குடும்ப அட்டை ஒன்றுக்கு இரண்டு கிலோவரை வழங்க முடிகிறது. மாதம் ஒன்றுக்கு 30,000 மெட்ரிக் டன் கோதுமை மத்திய அரசு ஒதுக்குகிறது. ஆனால் மாதம் ஒன்றுக்கு 10,000 முதல் 12,000 மெட்ரிக் டன் அளவுக்கே நாம் கோதுமையைப் பயன்படுத்துகிறோம்.

அண்மையில், வழக்கமான அரைவைத் திட்டத்தின்கீழ் கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்கிற குறைந்த விலையில் மைதா, ரவை வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தொடக்கத்தில் இத்திட்டம் சென்னை மாநகரில் செயல்படுத்தப்படும். பின்னர், ஏனைய்ப் பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவுப்படுத்தப்படலாம். பாமாயிலைப் பொறுத்தவரையில் நம் மாநிலத்தின் தேவை 13,000 மெட்ரிக் டன்னாக இருக்க, மத்திய அரசு, அக்டோபர் மாதத்திற்காக 10,000 மெட்ரிக் டன் பாமாயில் மட்டுமே ஒதுக்கியுள்ளது. மத்திய அரசு வழங்கியுள்ள மண்ணெண்ணெய் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்கான தேவையைச் சரிக்கட்டப் போதுமானதாக உள்ளது. பொதுப் பங்கீட்டு ஏற்பாட்டைச் செவ்விய முறையில் கண்காணிக்க மாவட்ட, வட்ட அளவில் கண்காணிப்புக் குழுக்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. போலி குடும்ப அட்டைகளை ஒழித்துக் கட்டுவதற்கும், இன்றியமையாப் பொருட்களைப் பதுக்காமல் இருப்பதற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முனைப்பாக செயல்பட வேண்டும்.

இன்றியமையாப் பொருட்களின் விலைகளை நியாயமான அளவில் இருக்குமாறு வைத்து வருவது,

> **இன்றியமையாப் பொருட்களின் விலைகளை நியாயமான அளவில் இருக்குமாறு வைத்து வருவது, அரசின் முன்னுரிமைத் திட்டங்களில் ஒன்றாகும்.**

அரசின் முன்னுரிமைத் திட்டங்களில் ஒன்றாகும். வெளி அங்காடிகளில் இன்றியமையாப் பொருட்களின் விலைகளை மாநில அரசு தொடர்ந்து கண்காணித்து வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களுடைய மாவட்டங்களில், நிலவுகிற விலைகள் பற்றி மிக விழிப்பாகக் கண்காணித்து வருமாறு ஏற்கனவே கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். வெளி அங்காடியில் இன்றியமையாப் பொருட்களுக்குப் பற்றாக்குறை ஏதும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது மன நிறைவு அளிப்பதாக உள்ளது.

முந்தைய ஆண்டோடு ஒப்பிடுகையில் அரிசி, சர்க்கரை, சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் மிகவும் குறைவாக உள்ளன. விலைவாசியைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துவர, இன்றியமையாப் பொருட்களுக்குரிய பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளையும் தீவிரமாக செயல்படுத்துமாறு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பெட்ரோல், டீசல் ஆகியவற்றுடன் மண் எண்ணெய், ஏனைய அந்நியப் பொருட்களைக் கலப்படம் செய்கின்ற பிரச்சினை மத்திய, மாநில அரசுகளின் கவனத்திற்கு வந்துள்ளது. வளைகுடா பிரச்சினையின் காரணமாக இந்தப் பிரச்சினை பெரிதாகியுள்ளது. மத்திய அரசு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் ஆணை ஒன்றைப் பிறப்பித்துள்ளது. இந்த ஆணையை உரிய வகையில் செயல்படுத்துவதானது மோட்டார் எரிபொருள்/அதிவேக டீசல் ஆகியவற்றுடன், மண் எண்ணையையும் ஏனைய அந்நியப் பொருட்களையும் கலப்படம் செய்கின்ற பிரச்சினையைத் தீவிரமாக தடுத்து நிறுத்த உதவும் என நம்பப்படுகிறது.

வளைகுடாப் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட நெருக்கடியையும், அதன் விளைவாக எண்ணெய் விலைகளில் உயர்வு ஏற்பட்டதையும் கருதிப் பார்த்து, எரிபொருள் பயன்படுத்துவதில் மிகவும் சிக்கனமாக இருக்க வேண்டியது அவசியம் ஆகும். மாவட்ட ஆட்சியாளர்கள், தங்கள் கட்டுப்பாட்டின் கீழுள்ள வண்டிகளை நியாயமான முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும். எந்த ஒரு சூழ்நிலையிலும் எரிபொருள் ஒதுக்கீட்டளவு (குறைக்கப்பட்ட ஒதுக்கீட்டளவு) அதிகமாகக் கூடாது. எரிபொருளை மிச்சப்படுத்துவதுடன், எல்லா வண்டிகளையும் உரியவாறு பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சிறந்த பம்ப் செட்டுகளை வாங்குவதன் மூலம் டீசல் பயன்படுத்துவதைக் குறைப்பதற்கு உழவர்களுக்கு ஆலோசனை கூறப்பட வேண்டும். அதே போல போக்குவரத்து நிறுவனங்களிலும் எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின், குறிப்பாக ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மகளிர் ஆகியோரின் நலனுக்கு அரசு உயரிய முக்கியத்துவம் கொடுத்துள்ளது. இந்த அரசு செயல்படுத்தும் பல்வேறு நல வளர்ச்சித் திட்டங்கள் மூலமாகப் பலர் பயனடைந்துள்ளனர். ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்குக் கல்வி கற்கவும், வேலை வாய்ப்பு அளிக்கவும் உரிய பல்வேறு வசதிகளையும், செயலாக்கங்களையும் அளிப்பதன் மூலம் அவர்களுடைய சமூக அளவிலான முன்னேற்றத்தையும் ஏற்படுத்தத் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திட்டமிட்டவாறு, இலக்குகள் எய்தப் பெறுகின்றனவா என்பதை இவற்றைச் செயல்படுத்தும் மாவட்ட ஆட்சியாளர்களும், ஏனைய அதிகாரிகளும் உறுதி செய்ய வேண்டும். சிறப்புக் கூறு திட்டத்தின்கீழ், அரசு நடப்பாண்டில் ஏறத்தாழ 232 கோடி ரூபாய் செலவிடும்.

இதேபோல், நிதிநிலை அறிக்கையில் நான் தெரிவித்தவாறு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகியோரின் மேம்பாட்டிற்காக பல்வேறு நல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் திட்டம், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகியோர் அனைவருக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

மகளிர் நலனுக்காக, இந்த ஆண்டில், பல முக்கியமான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. வேலைவாய்ப்புகளில் 30 சதவிகித இட ஒதுக்கீடு, 1956-ஆம் ஆண்டு இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின்கீழ் பெண்களுக்குச் சம சொத்துரிமை அளித்தல் ஆகியவற்றுடன் மகளிர் மேம்பாட்டிற்கான பல்வேறு திட்டங்களின் செயல்பாட்டில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்திற்காக, கடந்த ஆண்டில் 7.40 கோடி ரூபாயும், இந்த ஆண்டில் இதுவரை பத்து கோடி ரூபாயும் ஆக மொத்தம் 17.40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1989-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் 1990-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் நாள் வரை இந்தத் திருமண உதவி தலா ஐயாயிர ரூபாய் பெற்று பயனடைந்த ஏழைப் பெண்களின் எண்ணிக்கை 29,925 ஆகும். இதுவரை ரூ.14.96 கோடி செலவிடப்பட்டுள்ளது.

> **சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின், குறிப்பாக ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மகளிர் ஆகியோரின் நலனுக்கு அரசு உயரிய முக்கியத்துவம் கொடுத்துள்ளது.**

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு 4 கோடி ரூபாயும், இந்த ஆண்டு 4 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, 1989-ஆம்

(37 — ஆம் பக்கம் பார்க்க)



# பதிவுத் துறை அமைப்பும் பணிகளும்


மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்

**திரு. நாஞ்சில் கி. மனோகரன்**


நம் தமிழகத்திலுள்ள பழம்பெரும் துறைகளில் பதிவுத் துறையும் ஒன்றாகும். இத்துறை 1864-ஆம் ஆண்டு துவக்கப்பெற்றது. இத்துறை கடந்த ஆண்டு தனது 125-வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடி சிறப்புப் பெற்றுள்ளது. தமிழக அரசுக்கு வருவாய் ஈட்டித் தரும் முக்கியத் துறையான இத்துறை மட்டும் கடந்த ஆண்டு ரூ.261.36 கோடி வருவாயை ஈட்டித் தந்துள்ளது.

மனிதன் தோன்றியது முதல் மறையும் வரை உள்ள பல்வேறு காலகட்டங்களில் மனித வாழ்வில் ஏற்படும் முக்கிய நிகழ்ச்சிகளான திருமணம், பிறப்பு, இறப்பு, சங்கம் அமைத்தல், பொருளாதார முன்னேற்றத்திற்குச் சீட்டுப் போடுதல், நிறுவனங்கள் அமைத்துத் தொழில்கள் தொடங்கப் பதிவுகள் ஆகியவை இத்துறை மூலம் செய்யப்படுகின்றன. சொத்துக்கள் சம்பந்தமான ஆவணங்களைப் பதிந்து, அவற்றைப் பாதுகாத்து, பொது மக்கள் வேண்டும்பொழுது அதன் நகல்களையும் அதற்கான வில்லங்கச் சான்றுகளையும் வழங்கி, பொது மக்களுக்குத் தங்கள் சொத்துக்களின் மீதுள்ள உரிமையை நிலைநாட்ட உதவுவது இத்துறையின் அடிப்படைப் பணியாகும்.

இத்துறையில் கீழ்க்கண்ட சட்டங்கள் அமல் படுத்தப்படுகின்றன.

1. 1908-ம் ஆண்டு பதிவுச் சட்டம்
2. 1899-ம் ஆண்டு முத்திரைச் சட்டம்
3. 1961-ம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டம்
4. 1982-ம் ஆண்டு சீட்டுநிதிச் சட்டம் (மத்தியச் சட்டம்)
5. 1975-ம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம்
6. 1955-ம் ஆண்டு இந்து திருமணச் சட்டம்
7. 1954-ம் ஆண்டு சிறப்பு திருமணச் சட்டம்
8. 1886-ம் ஆண்டு பிறப்பு இறப்பு மற்றும் திருமணச் சட்டங்கள்.
9. 1936-ம் ஆண்டு பார்சி திருமணம் மற்றும் திருமண முறிவுச் சட்டம்
10. 1872-ம் ஆண்டு இந்திய கிருஸ்துவ திருமணச் சட்டம்.
11. 1961-ம் ஆண்டு வரதட்சிணை ஒழிப்புச் சட்டம்.
12. 1932-ம் ஆண்டு இந்திய கூட்டாண்மைச் சட்டம்
13. 1972-ம் ஆண்டு விற்பனையில்லாத நிறுவனச் சட்டம்.

**நிர்வாக அமைப்பு**

இத்துறை இந்திய ஆட்சிப்பணி அலுவலரைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இவருக்கு உதவியாகத் தலைமையிடத்தில் கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு), கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி), சட்ட அலுவலர், கூடுதல் சீட்டுப் பதிவாளர், நேர்முக உதவியாளர் (பொது), நேர்முக உதவியாளர் (சீட்டு), நேர்முக உதவியாளர் (கணக்கு) மற்றும் காவல்துறைக் கண்காணிப்பாளர் போன்ற அதிகாரிகள் பணிபுரிகிறார்கள்.

இத்துறை சென்னை, வேலூர், மதுரை, திருச்சி, கோவை ஆகியவற்றைத் தலைமையிடமாகக் கொண்ட ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் ஒரு துணைப் பதிவுத் துறைத் தலைவர் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. ஒவ்வொரு துணைப் பதிவுத் துறைத் தலைவருக்கும் உதவியாக இரு உதவிப் பதிவுத் துறைத் தலைவர்கள் பணி புரிகின்றனர். சென்னை மண்டலம் நடப்பு ஆண்டில் உருவாக்கப்பட்டு, அண்மையில் செயல்படத் துவங்கியுள்ளது. இத்துறை 46 பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பதிவு மாவட்டமும் ஒரு மாவட்டப் பதிவாளரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது.

இத்துறையில் பதிவு செய்யப்படும் ஆவணங்களை நூறு சதவிகிதத் தணிக்கை மேற்கொள்ள, 26 தணிக்கை மாவட்டப் பதிவாளர்கள் பணி புரிகின்றனர்.

இத்துறையில் 574 சார்பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகத் திலும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சார்பதிவாளர்கள் பணிபுரிகின்றனர்.

**சாதனைகள்:**

**வழிகாட்டிப் பிரிவு (Guideline Cell)**

ஆவணங்களுக்கு வழிகாட்டி மதிப்பின் மீது முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. வழிகாட்டி மதிப்பு சரியானதாக, நிலவும் சந்தை மதிப்பு அடிப்படையில் திருத்தி அமைக்கப்பட்டால்தான் அரசின் வருவாய் அதிகரிக்க வாய்ப்புண்டு. ஆகவே அரசு எண் 387, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 26.5.89-ன் படி ''வழிகாட்டிப் பிரிவு'' என்ற அமைப்பு ஒரு கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

வழிகாட்டி மதிப்பு வளர்ச்சி சதவிகிதம், பூகோள ரீதியான இடங்களின் அமைப்பு, ஏற்கெனவே விற்கப்பட்டுள்ள மதிப்புப் புள்ளி விவரங்கள், தெருக்களின் அகலம், இடங்கள் பயன்படும் தன்மை விசாரணை மூலம் பெறப்படும் மதிப்பு விவரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் திருத்தி அமைக்கப்படுகிறது.

ஆண்டுதோறும் வழிகாட்டி மதிப்பு நிர்ணயம் செய்ய அரசாணையில் வழிவகை செய்யப்பட்டுள்ளதால், ஏற்கெனவே 1990-91-ஆம் ஆண்டுக்கான மதிப்பீடு ''மதிப்பு நிர்ணயக் குழுவால்'' ஒப்புதல் வழங்கப்பட்டு 1.4.90 முதல் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டுதோறும் கூடுதலாக ரூ.20/- கோடி வருவாய் வர வாய்ப்புள்ளது.

**புலனாய்வு பிரிவு: (Intelligence Cell)**

அரசாணை எண் 390, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை - நாள் 26.5.89-ன் படி பதிவுக்கு வரும் ஆவணங்களில், கட்டடத்தின் உண்மை அளவு மற்றும் விவரங்கள் குறைத்தும் மறைத்தும் காட்டி அரசுக்கு இழப்பை ஏற்படுத்துவதைத் தவிர்க்கும் பொருட்டு, ஒரு கூடுதல் பதிவுத் துறைத் தலைமையின் கீழ் நான்கு மாவட்டப் பதிவாளர்களுடன் ''புலனாய்வுக் குழு'' உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பணியை மேற்படி 5 அலுவலர்களைக் கொண்டு நிர்வகிக்க இயலாத காரணத்தால் 26 தணிக்கை மாவட்டப் பதிவாளர்களும், 46 நிர்வாக மாவட்டப் பதிவாளர்களும், துணைப் பதிவுத் துறைத் தலைவர்களும் இரு உதவி செயற்பொறியாளர்களும் இப்பணிக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வகை ஆவணங்கள் ஆண்டுக்கு 60,000 பதிவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. வருவாய் ஆண்டுக்கு ரூ.5 கோடி கூடுதலாக வரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனவரி '90 முதல், ஆகஸ்ட்டு '90 வரை இத்திட்டத்தின் கீழ் கண்டுபிடிக்கப்பட்ட இழப்புத் தொகை ரூ.3.54 கோடி. வசூல் செய்யப்பட்டது ரூ.2.23 கோடி. இக்காலத்தில் பார்வையிட்ட கட்டட ஆவணங்கள் 58,235 ஆகும்.

**ஆவண எழுத்தர்கள் மற்றும் நகல் எழுத்தர்கள் தேர்வு**

1983-ஆம் ஆண்டு முதல் ஆவணங்களை எழுத ஆவண எழுத்தர்கள் உரிமமும் ஆவண நகல்களை எழுத நகல் எழுத்தர்கள் உரிமமும் அளிக்கப்பட்டன. தற்போதைய தேவையைப் பூர்த்தி செய்யவும் படித்த இளைஞர்களுக்குச் சுய வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்திலும் 1990-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு 12-ஆம் தேதி புதியதாகத் தேர்வு நடத்தப்பட்டு, தேர்வில் 4,336 நபர்கள் ஆவண எழுத்தர்களாகவும், 6,866 நபர்கள் நகல் எழுத்தர்களாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் ரூ.28.23 கோடி விவசாயக் கடன் தள்ளுபடி

**கூட்**டுறவு வங்கிகள் மூலம் 44 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் வேளாண் கடன் தள்ளுபடித் திட்டத்தின்கீழ் ரூ.13.70 கோடி தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது.

நாட்டுடமையாக்கப்பட்ட வணிக வங்கிகளின் மூலம் 43 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.14.53 கோடி விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் 87 ஆயிரம் பேருக்கு ரூ.28.23 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

ஆத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு ரூ.204.55 இலட்சமும், வத்தலக் குண்டு ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு ரூ.124.22 இலட்சமும், திண்டுக்கல் பகுதிகளில் ரூ.153.32 இலட்சமும், குஜிலியம்பாறை பகுதிகளில் ரூ.203.54 இலட்சமும், கொடைக் கானல் பகுதிகளில் ரூ.250.52 இலட்சமும், நத்தம் பகுதிகளில் ரூ.142.34 இலட்சமும், நிலக் கோட்டைப் பகுதிகளில் ரூ.196.71 இலட்சமும், ஒட்டன்சத்திரம் பகுதிகளில் ரூ.360.60 இலட்சமும், பழனி பகுதிகளில் 253.05 இலட்சமும், ரெட்டியார்சத்திரம் பகுதிகளில் 206.47 இலட்சமும், சாணார்பட்டி பகுதிகளில் ரூ.88.46 இலட்சமும், தொப்பம்பட்டி பகுதிகளில் ரூ.233.78 இலட்சமும், வட மதுரை பகுதிகளில் ரூ.133.70 இலட்சமும், வேடசந்தூர் பகுதிகளில் ரூ.263.79 இலட்சமும், இம் மாவட்டத்தில் உள்ள அனைத்து வங்கிகளின் மூலம் விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்படவுள்ளது என திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்ட ஆட்சியர் திரு சக்திகாந்த தாஸ், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு 10.10.90 முதல் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு மனுச் செய்பவர்களுக்கு உரிமங்கள் வழங்கப்படும். இதனால் 11,202 நபர்களுக்குச் சுய வேலை வாய்ப்பு ஏற்படுகிறது.

**சீட்டு விழிப்புக் குழு:**

பதிவு செய்யப்படாமல் நடைபெறும் சீட்டுகளைக் கண்டுபிடிக்கவும், சீட்டுச் சந்தாதாரர்கள் தெரிவிக்கும் புகார்களை விசாரிக்கவும், சீட்டுத் தொகை சரியான முறையில் பட்டுவாடா செய்வதைக் கண்காணிக்கவும் கூடுதல் சீட்டுப் பதிவாளர் தலைமையில் சீட்டு விழிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு திடீர் சோதனைகள் மூலம் 80 துணைவிதிகள் பதிவு செய்யப்படாததைக் கண்டுபிடித்து அரசுக்குப் பதிவுக் கட்டண இழப்பு ரூ.63,120/- கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பிணையமாக ரூ.50 இலட்சம் அரசுக்குச் செலுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**வருவாய்:**

அரசுக்கு, கடந்த 5 ஆண்டுகளில் இத்துறையின் மூலம் பதியப்படும் சுமார் 10 இலட்சம் ஆவணங்கள் மற்றும் இதர நடவடிக்கைகள் மூலம் கீழ்க்கண்டவாறு வருவாய் ஈட்டித்தந்துள்ளது.

| வ.எண் | ஆண்டு | அடைந்த வருவாய் (கோடியில்) |
|---|---|---|
| 1. | 85-86 | ரூ.122.15 |
| 2. | 86-87 | " 142.17 |
| 3. | 87-88 | " 164.12 |
| 4. | 88-89 | " 199.24 |
| 5. | 89-90 | " 261.36 |
| 6. | 90-91 | |
| | 31.8.90 முடிய | " 114.46 |

கடந்த 5 ஆண்டுகளில் இரு மடங்காக இத்துறையின் வருவாய் உயர்ந்துள்ளது. இத்துறையில் பணிபுரியும் அலுவலர்களின் விடாமுயற்சியினால் இவ்வாண்டு ரூ.339 கோடி வருவாய் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இந்திய முத்திரைச் சட்ட பிரிவு 47(ஏ)-ன் கீழ்** வருவாய் வழிகாட்டி கண்ட மதிப்பினை ஏற்றுக் கொள்ளாத கட்சிக்காரர்கள் சந்தை மதிப்பினை நிர்ணயிக்க தனித்துணை ஆட்சியரை (முத்திரை) அணுகுகின்றனர். தமிழ்நாட்டில் 11 தனித்துணை ஆட்சியர்கள் 44 வட்டாட்சியர்கள் மூலம் சந்தை மதிப்பு நிர்ணயப்பணி நடைபெற்று வருகிறது. நடப்பு நிதியாண்டில் 31.8.90 வரைரூ.183.46 இலட்சம் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

பதிவுத் துறையின் 125-ஆவது ஆண்டின் நினைவினை ஒட்டி, துறையின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகம் சாந்தோம் நெடுஞ்சாலையில் கட்ட, தமிழக அரசு அரசாணை எண் 558, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, நாள் 27.9.90 மூலம் அனுமதி

# கூட்டுறவுப் பணியில் தமிழகமே முன்னோடி

**கூட்டுறவு ஒன்றியம் என்பது-கூட்டுறவுக் கல்வியையும், கூட்டுறவுப் பிரச்சாரத்தையும் பரப்பி, மக்களின் சிந்தனையைத் தூண்டுவதுதான்.**

**இந்தியாவிலேயே ஏழை எளிய மக்கள் பயனடையும் வகையில், கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடனை ரத்து செய்வதில் தமிழகம்தான் முன்னோடியாகச் செயல்படுகிறது என்பதைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.**

**நவீன முறையில் இந்தக் கூட்டுறவுக் கல்வியை எப்படிச் சாதாரண மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் மேலும் எளிதில் எடுத்துச் சொல்வது என அரசு ஆலோசனை செய்துவருகிறது.**

**மாண்புமிகு உணவு/கூட்டுறவுத்துறை அமைச்சர்**
**— திரு. பொன். முத்துராமலிங்கம்**

வழங்கியுள்ளது. இது பதிவுத் துறையின் வரலாற்றில் பெருமைக்குரிய சாதனையாகக் கருதப்படுகிறது.

**ஊர்திகள்**

இவ்வாண்டு சீட்டு விழிப்புக் குழுவிற்காக ஒரு புதிய ஜீப் தமிழக அரசினால் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பதிவுறாச் சீட்டுகளை அதிக அளவில் கண்டிபிடிக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

வரும் நிதி ஆண்டில் திருநெல்வேலி பதிவு மண்டலத்தை ஏற்படுத்தும் திட்டமும், அரியலூர் சேலம் பதிவு மாவட்டங்களைப் பிரித்து பெரம்பலூர் ஆத்தூர் பதிவு மாவட்டங்களாகத் தோற்றுவிக்கும் திட்டமும், வழிகாட்டிப் பதிவேடுகள் தயாரிப்பதற்குக் கள அலுவலர்களை நியமிக்கும் திட்டமும், சார்பதிவகங்களில் உள்ள வேலைப் பளுவினைக் கருத்திற்கொண்டு கூடுதல் எழுத்தர்களை நியமிக்கும் திட்டமும், நகராட்சிகளில் பணிபுரியும் சார்பதிவாளர்களை மாவட்டப் பதிவாளர்களாக மாவட்டப் பதிவாளர்கள் நிலைக்கு மேம்படுத்தும் திட்டமும் அரசு பரிசீலனையில் இருந்து வருகின்றன. இத்திட்டங்கள் செயல்படுத்துவதன் மூலம் பதிவுத் துறை நிர்வாகம் சீர்படுவதுடன் அரசிற்குக் கூடுதலாக வருவாய் ஈட்டித்தர வாய்ப்புள்ளதென எதிர்பார்க்கப்படுகிறது.



# பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

## திரு. கே.என். நேரு

**1988-89**-இல் 5,425 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. 989-90-இல் 6,726 பால் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கங்களாக அதிகரித்துள்ளன. இதனால் 1990-இல் 17.4 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள்.

**பால் உற்பத்தி**

1988-89-இல் நாளொன்றுக்கு 10.1 இலட்சம் லிட்டராக இருந்த பால் உற்பத்தி, 1989-90 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 12.8 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டில் அதிகமாக நாளொன்றுக்கு 2.7 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி பெருக்கப்பட்டுள்ளது.

**பால் விற்பனை**

1988-89-இல், பால் விற்பனை சென்னையில் நாளொன்றுக்கு 5.3 இலட்சம் லிட்டராக இருந்தது. இது தற்சமயம் நாளொன்றுக்கு 7.0 இலட்சம் லிட்டராக உச்சகட்ட விற்பனையை அடைந்துள்ளது இதுபோல, மாவட்டங்களில் பால்விற்பனை 1988 ஆம் ஆண்டு நாளொன்றுக்கு 4.4 இலட்சம் லிட்டராக இருந்தது, உச்சகட்டமாக 5.3 இலட்சம் லிட்டராக நாளொன்றுக்கு உயர்ந்துள்ளது.

**பால் பொருட்கள் உற்பத்தி**

1988-89-இல் பால் பவுடர் உற்பத்தி 4,849 டன்களாக இருந்தது. இதற்கு மாறாக தற்போது 1989-90-இல் 8,643 டன் பால் பவுடர் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதைப்போல வெண்ணெய் உற்பத்தி முந்தின ஆண்டு 4,140 டன்களாக இருந்து, 6,832 டன்னாக உற்பத்தி உயர்ந்துள்ளது.

முந்தின ஆண்டில் 4,610 டன்னாக இருந்த பால்பவுடர் விற்பனை 1989-90-இல் 6,518 டன்னாக உயர்த்தப்பட்டு உள்ளது. இதைப்போல 1988-89-இல் 1,761 டன்னாக இருந்த வெண்ணெய் விற்பனை 1989-90-இல் 3,089 டன்னாக அதிகரித்துள்ளது.

**பால் பதனிடும் கொள்திறன்**

1988-89-இல் நாளொன்றுக்கு 13.13 இலட்சம் லிட்டராக இருந்த பால் பதனிடும் கொள்திறன்



## அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

★ **வேளாண்மைக் கடன் நிவாரணத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் ரூ.478 கோடி நிவாரணம் அளிக்கப் பட்டு 17 இலட்சம் பேர்கள் பயனடைந்துள்ளனர் என்று தமிழக அரசு அறிவித்தது. (4.9.90)**

★ மனோன்மணீயம் சுந்தரனார் பெயரில் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள அபிஷேகப்பட்டியில் புதிய பல்கலைக் கழகத்தை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அவ்வமயம் ரூ.2 கோடி செலவில் கட்டப்படும் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு நலத்திட்ட உதவிகளை 14,719 பேர்களுக்கு வழங்கினார். (7.9.90)

★ சங்கரன் கோவில் வட்டாரத்தில் 88 கிராமங்களுக்கு ரூ.10 கோடியே 28 இலட்சத்து 51 ஆயிரம் செலவில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். (8.9.90)

★ சென்னை மாநகரில் பொதுமக்கள் வாங்க வசதியாக மண்ணெண்ணெய் கைவண்டிகளைத் தெருக்கள் வாரியாக நிறுத்தி வைக்கச் செய்யப்பட்டிருப்பதாக மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் தெரிவித்தார். (9.9.90)

★ இந்தியாவிலேயே முதல் முறையாக விவசாயிகளின் ரூ.10 ஆயிரம் வரையிலான கடனை ரத்து செய்த மாநிலம் தமிழகம்தான் என்று மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் அறிவித்தார். (12.9.90)

★ சென்னை மாநகரில் மேலும் 10 இடங்களில் தானியங்கி சிக்னல் அமைக்கப்படும் என்று காவல்துறை தெரிவித்துள்ளது. (13.9.90)

★ சென்னையில் 21.25 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.4 கோடி செலவில் நவீன காட்சிக் கூடங்களுடன் அமைக்கப்பட்டுள்ள பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மையத்தை, தந்தை பெரியாரின் 112-ஆவது பிறந்த தினத்தன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார். (17.9.90)

நாளொன்றுக்கு 2.74 இலட்சம் லிட்டர் அதிகரித்து, நாளொன்றுக்கு 15.87 இலட்சம் லிட்டராக முன்னேறியுள்ளது.

### கால்நடை தீவனம்

1988-89-இல் நாளொன்றுக்கு 27,000 டன் விற்பனை செய்யப்பட்ட சத்துள்ள கால்நடை தீவனம், 1989-90-இல் 33,000 டன்னாக உயர்ந்துள்ளது.

### கால்நடை செயற்கை முறைக் கருவூட்டல்

1988-89-ஐ விட 1989-90-இல் 1,10,000 கால்நடை செயற்கை முறைக் கருவூட்டல்கள் அதிகமாகச் செய்யப்பட்டுள்ளன 1988-89-இல் 5,50,000 ஆக இருந்த செயற்கை முறைக் கருவூட்டல்கள், 1989-90-ஆம் ஆண்டில் 6,61,000 ஆக உயர்ந்துள்ளன.

### பால்பெருக்குத் திட்டம்

நடப்பு ஆண்டில், தேசிய பால்வள வாரியம் ரூ.53 கோடி மதிப்பீட்டில் 8 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களும் மற்றும் இணையமும் பயனடையத்தக்க வகையில் சில திட்டங்களுக்கு அனுமதி அளித்துள்ளது. அத்திட்டங்களின் முக்கிய அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- ★ நாளொன்றுக்கு 4.00 இலட்சம் பால் பதனிடும் கொள்திறன் கொண்ட ஒரு நவீன பால் பண்ணை, சோளிங்கநல்லூரில் அமைக்கப் படும்.
- ★ நாளொன்றுக்கு 30 டன் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு பால்தூள் ஆலை, ஈரோட்டில் அமைக்கப்படும்.
- ★ நாளொன்றுக்கு 1.5 இலட்சம் பால் பதனிடும் திறன் கொண்ட ஒரு புதிய பால் பண்ணை திருச்சியில் அமைக்கப்படும்.
- ★ ஈரோடு மற்றும் சேலம் பால்பதனிடும் ஆலைகளின் தற்போதைய கொள்திறன் நாளொன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டரிலிருந்து 3.0 இலட்சம் லிட்டராக விரிவாக்கம் செய்யப்படும்.
- ★ நாளொன்றுக்கு 1.0 இலட்சம் லிட்டர் பால்பதனிடும் கொள்திறன் கொண்ட ஒரு புதிய பால்பண்ணை விழுப்புரத்தில் அமைக்கப்படும்.
- ★ கோயம்புத்தூர் மற்றும் தர்மபுரி பால் பதனிடும் ஆலைகளின் கொள்திறன் நாளொன்றுக்கு 1.0 இலட்சம் லிட்டரிலிருந்து, நாளொன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டராக விரிவாக்கம் செய்யப்படும். மற்றும் மதுரை பால்பதனிடும் ஆலையின் கொள்திறன் நாளொன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டரிலிருந்து 2.0 இலட்சம் லிட்டராக நாளொன்றுக்கு விரிவாக்கம் செய்யப்படும்.
- ★ நாளொன்றுக்கு 100 டன்உற்பத்தித்திறன் கொண்ட புதிய கால்நடை தீவன் ஆலை **மதுரையில்** அமைக்கப்படும். இது இவ்வாண்டு இறுதிக்குள்உற்பத்தியைத் தொடங்கும்.

## அம்பேத்கர் நூற்றாண்டு...

★ **ஆயிரமாயிரம் ஆண்டுகள் அடிமைகளாகத் தன்மானத்தை இழந்து இருப்பதைக் காட்டிலும், அரைநிமிடம் வாழ்வாங்கு வாழ்ந்து இறந்து** போவதே மிகச் சிறந்ததாகும்.

—டாக்டர் அம்பேத்கர்

**"நாங்கள் எல்லோருக்குமாகத்தான் அரசு நடத்துகிறோம்; எல்லாத் தரப்பு மக்களுக்கும், எல்லாக் கருத்து உடைய வர்களுக்கும்தான் அரசு நடத்துகிறோம்; ஆதரித்தோருக்கும் ஆதரிக்காதோருக்கும் சேர்த்தே அரசு நடத்துகிறோம் என்ற வகையில், எங்களுக்கு ஒரு கொள்கை யில் நம்பிக்கை இருந்தாலும் இல்லா விட்டாலும் அந்தக் கொள்கையை மற்ற வர்கள் மீது திணிக்க நாங்கள் விரும்ப வில்லை!"**

**— முதல்வர் கலைஞர்**

# காஞ்சியில் முப்பெரும் விழா

**மா**ண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 25.10.90 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மாபெரும் விழாவில் கலந்து கொண்டார்.

ரூ.176 கோடி மதிப்பீட்டில் ஆயுதப்படைக் காவலர்கள் குடியிருப்பு மற்றும் சமுதாயக்கூடம் திறப்பு விழா, ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுலா வளர்ச்சிக் கழகப் பயணியர் விடுதித் திறப்பு விழா - ரூ.11.46 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுத் திட்ட அடிக்கல் நாட்டுவிழா என நடைபெற்ற அந்த முப்பெரும் விழாவிற்கு, மாண்புமிகு ஆதி-திராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. க. சுந்தரம் அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. மு. கண்ணப்பன், திரு. எஸ். துரைமுருகன், திரு. கே.பி. கந்தசாமி, திரு. க. பொன்முடி, முன்னாள் அமைச்சர் திரு. சி.வி.எம். அண்ணாமலை, மதுராந்தகம் திரு. எஸ். ஆறுமுகம், காவல்துறை உயர் அதிகாரி திரு. பி. துரை ஆகியோரும் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது: "இந்த அரசு பொறுப்பேற்றால் ஆலயங்கள் பழுதுபார்க்கப்பட மாட்டா. ஆலயங்கள் க்ஷீணித்துப் போய்விடும். ஆலயங்களில் இருக்கின்ற ஆண்டவன்கள் ஆபத்திற்கு ஆளாவார்கள் என் றெல்லாம் 67-க்கு முன்பு சொல்லப்பட்டது. எங்கள் தலைவர் அண்ணா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற அந்தக் காலந்தொட்டும், அவருடைய மறைவிற்குப் பிறகு, அவருடைய அடியொற்றிப் பணியாற்றிய கழக ஆட்சிக் காலத்திலும், மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற இந்தக் காலக்கட்டத்திலும் நாங்கள் எல்லோருக்குமாகத் தான் அரசு நடத்துகிறோம். எல்லாத்தரப்பு மக்களுக்கும், எல்லாக் கருத்து உடையவர்களுக்கும் தான் அரசு நடத்துகிறோம். ஆதரித்தோருக்கும் ஆதரிக்காதோருக்கும் சேர்த்தே அரசு நடத்து கிறோம் என்ற வகையில், எங்களுக்கு ஒரு கொள்கையில் நம்பிக்கை இருந்தாலும், இல்லா விட்டாலும், அந்தக் கொள்கையை மற்றவர்கள் மீது திணிக்க நாங்கள் விரும்பவில்லை. அதைப் போலவே மற்றவர்களும் அவர்களுடைய கொள்கையை எங்கள் மீது திணிக்க அவர்களுக்கு உரிமை யில்லை என்ற அந்த உணர்வோடு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறோம்.

எனவேதான், காலையிலே ஏகாம்பரநாதர் ஆலயத்தின் திருப்பணி தொடக்க விழா நடை பெற்று - ஏகாம்பரநாதர் ஆலயத்தைப் போன்ற பல ஆலயங்களை மற்றும் சிற்பங்களை, காஞ்சி நகரத்தின் சிறப்புகளைக் காண வருகின்ற சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு வசதியான ஒரு விடுதியையும் மாலையிலே திறந்து வைத்து, வருகிற பயணிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய பெரும் பொறுப்பை ஏற்றிருக்கின்ற - சட்டம் ஒழுங்கு அமைதி காத்திடப் பணியாற்றும் காவல்துறை யினரும் வசதியாக வாழவேண்டும் என்பதற்காக அவர்களுக்கான குடியிருப்புக்களையும் திறந்து வைத்து-வருகின்ற மக்கள் மாத்திரமல்ல; இங்கே வாழ்கிற மக்களும் தாகத்தால் தவிக்கக் கூடாது என்பதற்காகக் குடிநீர்த்திட்டத்தையும் தொடங்கி வைக்க, அடிக்கல் நாட்டு விழாவினையும் இங்கே ஏற்பாடு செய்து, அதை நடத்துகின்ற விழாவும் இணைக்கப்பட்டு இந்த விழாக்களில் உங்களை யெல்லாம் தொடர்ந்து சந்திக்கின்ற வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.

நான் அண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு பொறுப்பேற்றுக்கொண்டு 1971-ஆம் ஆண்டு மீண்டும் முதலமைச்சராக வெற்றிபெற்று வந்தநேரத்தில், வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பினேன். திரும்பியபோது இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்களைச் சந்தித்து வெளிநாட்டுச் சுற்றுப்பயண விவரங்களைக் கூறினேன்.

அப்போது அவர்களிடத்திலே சொன்னேன் - வெளிநாடுகளிலே வளர்ந்திருக்கின்ற அளவிற்கு இந்தியாவிலே இந்தச் சுற்றுலா கலை ரீதியாக மாத்திரமல்ல; கலாச்சார ரீதியாக மாத்திரமல்ல; தொழில் ரீதியாகக்கூட வளரவில்லை என்று.

வெளிநாடுகளிலே, மேல்நாடுகளிலே இந்தச் சுற்றுலா, தொழில் ரீதியாக இன்றைக்கு வளர்ந்து

கொண்டிருக்கிறது என்று எடுத்துச் சொன்னேன். அவர்கள் மிகுந்த கவனமாகக் கேட்டார்கள்.

வெளிநாடுகளிலே - அங்கே வழங்கப்படுகின்ற அஞ்சல் அட்டைகளில்கூட அந்த நாட்டிலே உள்ள சிற்பங்கள், இயற்கைக் காட்சிகள், அதிசயங்கள்- இவைகள் இடம் பெற்றுள்ளன. அதைப்போல் நாமும் இந்தியாவில், இங்கே உள்ள பல்வேறு மாநிலங்களிலே இருக்கின்ற இயற்கைக் காட்சிகள், சிற்பங்கள், வெளிநாட்டுச் சுற்றுப்பயணிகளைக் கவரக்கூடிய காட்சிகள் - இவைகளையெல்லாம் அஞ்சல் அட்டைகளிலே, அஞ்சல் உறைகளிலே அச்சிட்டு, அவைகளைக் கடைகளிலே விற்பனைக்கு வைத்தால், அவைகளை வாங்குகின்ற மக்கள் அதை வாங்கி, வெளிநாட்டிலே இருந்து இங்கே வந்து தங்களுடைய நாட்டுக்குக் கடிதம் எழுது வதற்கு அதை வாங்கிப் பயன்படுத்துவார்களே யானால், அந்த நாட்டிலே உள்ளவர்களை அந்தப் படங்கள் கவரும். அவர்கள் இப்படிப்பட்ட இடங்களையெல்லாம் பார்க்க வேண்டும் என்ற உணர்வு-ஆர்வம் அவர்களுக்கு ஏற்படும். எனவே அந்தக் காரியங்களையெல்லாம் செய்யலாம் என்று சொன்னபொழுது, அன்னை இந்திரா காந்தி அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள்.

நான், தமிழ்நாட்டிலே சுற்றுலா வாரியம் ஒன்று அமைக்கப் போகிறேன். அதற்கு மத்திய அரசினுடைய உதவி தேவை' என்று கேட்டுக் கொண்டேன். அவர்களும் அதற்கு ஒப்புதல் அளித்தார்கள். அதை ஒட்டித்தான் அருமை நண்பர், மறைந்த நமது இயக்கத்தின் தளபதி - ஏ.வி.பி. ஆசைத்தம்பியைத் தலைவராகக் கொண்டு 71-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் சுற்றுலா வாரியம் தமிழகத்திலே தொடங்கப்பட்டது முதன் முதலாக.

சுற்றுலா மூலம் ஒரு நாட்டினுடைய வருமானம் பெருகுகிறது. பொருளாதாரம் பெருகுகிறது. நான் மேல்நாடுகளுக்குச் சென்றபோது அந்தக் காலத்தில் 1970 என்றால் 20 ஆண்டுகளுக்கு முன்பே, நான் கேள்விப் பட்டது, இத்தாலியிலே இருந்து அவர்கள் வேறு நாடுகளுக்கு இறைச்சியை அனுப்பி அவர் களுக்குக் கிடைக்கின்ற பொருளாதார வருமானத்தை விட, வெளிநாடுகளிலே இருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகள் இத்தாலிக்குள்ளே நுழைந்து ரோமாபுரி போன்ற பல்வேறு இடங்களைப் பார்த்து, சிதைந்த சிற்பங்களை, அங்கே ரோமானியர்கள் வாழ்ந்த இடங்களைக் காணுகின்ற அந்த வகையிலே மாத்திரம் கிடைக்கின்ற தொகை அதைவிட அதிகம் என்று கணக்கிட்டுச் சொன்னார்கள்.

இவைகளையெல்லாம் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியோடு நடத்திய விவாதத்திலே நான் எடுத்துரைத்த காரணத்தால், மாநில அரசு சுற்றுலா வாரியத்தை நடத்தினால் மத்திய அரசின் உதவி உண்டு - ஒத்துழைப்பு உண்டு' என்று அவர்கள் அறிவித்தார்கள். அதை ஏற்று இங்கு 71-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சுற்றுலா வாரியம்



• பகுத்தறிவு என்னும் ஒரே மருந்தால்தான் மூட நம்பிக்கை என்னும் நோயைப் போக்க முடியுமே தவிர, வேறு எந்த மருந்தாலும் போக்க முடியாது!

— அறிஞர் அண்ணா

இன்றைக்கு நல்ல முறையிலே பயன்பட்டு வரு கின்றது. பெருகிக் கொண்டிருக்கிறது.

அதைப்போலவேதான் தமிழகத்திலே பலவேறு நலத்திட்டங்கள் ஏழை எளிய மக்கள் பயனடையக் கூடிய திட்டங்களை அரசின் சார்பில் இன்றைக்கு நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

கடந்த 76-ஆம் ஆண்டுக்கு முன்புகூட நாம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது கண்ணொளித் திட்டம் என்றும், ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டம் என்றும், தொழுநோய் இரவலர் மறு வாழ்வுத் திட்டம் என்றும்- இப்படி ஏராளமான திட்டங்களை நலிந்தோர் நல்வாழ்வுக்காகத் தீட்டிச் செயல் படுத்தி இருக்கிறோம். இந்த ஒன்றரை ஆண்டுக்காலத்தில் நாம் அதைப்போன்ற பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களைத் தமிழகத்திலே பல் வேறு மாவட்டங்களிலே மிகச் சிறப்புற நலிந்தோர் மனம் மகிழ நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

செங்கை-அண்ணா மாவட்டத்தில் மாத்திரம் இந்த 1990-91 ஆகிய இந்த ஆண்டில் இதுவரை - இந்த ஆண்டு இன்னும் முழுமையாக நிதியாண்டு முடிவுறவில்லை. நிறைவு பெறவில்லை. இருந்தாலும் 90-91-இல் செங்கை-அண்ணா மாவட்டத்திலே மாத்திரம் 24 ஆயிரத்து 800 பேருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கிய ஆட்சி இன்றைய ஆட்சி என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதைப்போல முதியோர் உதவித் தொகை பெற்றவர்கள் 34 ஆயிரத்து 630 பேர்.

மூவலூர் இராமாமிர்தத்தம்மையார் அவர்களுடைய பெயரால் ஒரு அரிய திட்டத்தை, புதிய திட்டத்தை இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டத்தைச் சென்ற ஆண்டு நான் அறிவித்தேன். அந்தத் திட்டப்படி எட்டாவது வரையிலே படித்த ஒரு ஏழைப் பெண் திருமணம் ஆகாமல் இருந்தால் அந்த பெண்ணின் திருமணத்திற்கு 5,000 ரூபாய் உதவி வழங்கப்படும் என்று அறிவித்து, இந்த

ஒன்றரை ஆண்டுக் காலத்திலே ஏறத்தாழ 30 ஆயிரம் பெண்கள் அந்தப் பயனைப் பெற்றிருக்கிறார்கள். இந்த 90-91 ஆம் ஆண்டு மாத்திரம் செங்கை-அண்ணா மாவட்டத்தில் 1,445 பேர் இந்தப் பயனைப் பெற்றிருக்கிறார்கள்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவாக நலத்திட்டம். கருவுற்ற மகளிர் பேறு காலத்திற்கு முன்பு இரண்டு மாதம், குழந்தை பிறந்தபிறகு இரண்டு மாதம், சத்துணவு அவர்கள் பெற்று அந்தக் குழந்தையைச் சத்தோடுவளர்ப்பதற்காக 200 ரூபாய் என்று தரப்படுகின்ற வகையிலே இந்த '90-91-இல் மாத்திரம் இதுவரையில் 15,786 பெண்கள் செங்கை-அண்ணா மாவட்டத்திலே பயன் பெற்றிருக்கின்றார்கள்.

எனவே நலிந்தோர்கள் நான் சொன்ன கணக்கின்படி 81 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள், கிட்டதட்ட 21 கோடி ரூபாய் செலவில் இத்தகைய சிறிய சிறிய திட்டங்கள் - ஆனால் அவர்களுடைய வாழ்வுக்குத் தேவையான பெரிய திட்டங்களாக அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் 1991-இல் அல்லது 92-இல் நிச்சயமாகக் காஞ்சி புரம் மக்களுக்குக் குடிதண்ணீர் கிடைக்கக்கூடிய அளவிற்கு 11 கோடி ரூபாய் திட்டம் நிறைவேறும் என்ற நம்பிக்கையையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவலர்களுடைய குடியிருப்பை நான் இன்றைக்குத் திறந்து வைத்திருக்கின்றேன். காவலர்களுடைய வாழ்வு எப்படி அமையவேண்டும், அவர்களுடைய கடமைகளெல்லாம் எவ்வாறு ஒதுக்கப்பட வேண்டும் என்பதற்கு இந்தியாவிலே முதன்முதலாக ஒரு குழு அமைத்து அவர்களுடைய பிரச்சினைகளை ஆராய்ந்ததும், அதற்காக ஒரு போலீஸ் கமிஷனை அமைத்ததும் இந்த அரசுதான். இந்தியாவிலே வேறு எந்த ஒரு அரசும் போலீஸ் கமிஷனை அமைத்தது இல்லை. 1970-ஆம் ஆண்டிலேயே போலீஸ் கமிஷன் அமைத்து அதனுடைய பரிந்துரைகளை ஏற்று நடைமுறைப்படுத்திய அரசு இந்த அரசு.

20 ஆண்டுக் காலமாக யாரும் இதற்காக முயற்சி செய்யவில்லை. மீண்டும் நாம் வந்துதான் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும் என்று இருந்திருக்கிறது. அதைச் செய்திருக்கிறோம். அந்த ஆய்வின் அடிப்படையில், இன்னும் ஏராளமான வசதிகளைக் காவலர்களுக்குச் செய்து தரக் காத்திருக்கிறோம்.

அந்த வசதிகளைப் பெறுகின்ற காவலர்களும் தங்களுடைய கடமையை உணர்ந்து கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்றுரைத்த தலைவன் பிறந்த திரு நகரிலிருந்து அவர்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்- அதைக் காத்திட உதவுங்கள். இந்த அரசுக்கு ஒத்துழைப்புத்தாருங்கள் என்று அவர்களையும் கேட்டுக்கொண்டு அந்தக் காவலர்களை நண்பர்களாக மக்கள் மதித்து நடக்கவேண்டும்; நல்ல காரியங்களுக்கு நண்பர்களாக மதித்து நடக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

— இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்.

## படமும் செய்தியும்



மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில், டாக்டர் கலாநிதி அவர்கள் எழுதிய ''எய்ட்ஸ்'' பற்றிய நூலினை வெளியிட்டார். திரைப்பட இயக்குநர் திரு. கே. பாலச்சந்தர் அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். (28.10.90)

அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழா:

# தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவு



**மா. தேவராஜ், இ.ஆ.ப.,**
**கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்.**

சமுதாயத்தில் தேவைகளை உணர்ந்து, தனிமனித ஆதிக்கத்தைத் தகர்த்து, சுரண்டுபவர்களின் பிடியிலிருந்து விடுபட சமுதாயத்திலுள்ளஒவ்வொருவரும் ஒன்று சேர்ந்து கூடி முடிவெடுத்து தங்களின் பொருளாதாரத் தேவைகளை தங்கள் அமைப்பின் மூலமே நிறைவேற்றிக் கொள்ள உதயமெடுத்ததுதான் கூட்டுறவுப் பேரியக்கம். இக் கூட்டுறவுப் பேரியக்கம் உலகின் அனைத்து நாடுகளிலும், அனைத்துத் துறைகளிலும் படிப்படியாகப் பரவி வளர்ந்து இன்று உலகம் முழுமையும் பரந்து உயர்ந்துள்ளது.

## நுகர்வோர் கூட்டுறவு

இவ்வரிய கூட்டுறவுப் பேரியக்கத்தின் ஒரு கிளையாகத் தோன்றியதுதான் 'நுகர்வோர் கூட்டுறவு'. இதன்கீழ் மக்கள் ஒருங்கிணைந்து ஒரு கூட்டுறவுப் பண்டக சாலை அமைத்து தங்களின் தேவைகளை அப்பண்டகசாலையிடமிருந்து பெறுகின்றனர். இந்த அமைப்பின் மூலம் வாணிகம் செய்யும் வியாபாரிகள் தங்கள் விருப்பத்திற்கேற்றவாறு விலையை ஏற்றி பொருள்களைப் பதுக்கி, செயற்கைத் தட்டுபாட்டை உருவாக்கி, கறுப்புச் சந்தை கள்ள வாணிகத்தில் கொள்ளை லாபம் அடிப்பதைத் தடுத்து நிறுத்த முடியும்.

## தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவு

கூட்டுறவு இயக்கத்திற்கு இந்தியத் திருநாட்டில் தாய்த் தமிழ்நாடே முன்னோடியாக இருப்பதுபோல் நுகர்வோர் கூட்டுறவுக்கும் தமிழ்நாடே முன்னோடியாக விளங்குகிறது. 1904 ஆம் ஆண்டே திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம், சென்னை வாழ் பெருங்குடி மக்களுக்கு, இல்லத் தேவைகளை வழங்கி சேவை செய்ய, சென்னை மாநகரில் அந்நாளிலே வாழ்ந்த பெருமக்களால் தோற்றுவிக்கப்பட்டது. இச்சங்கம் 'டியுசிஎஸ்' என்று எல்லாப்பிரிவு மக்களுக்கும் நன்கு அறிமுகமாகியுள்ளது. இந்தியாவிலேயே முதலிலே தோற்றுவிக்கப்பட்ட இக்கூட்டுறவுச் சங்கத்தின் முத்திரையான ஆலமரத்திற்கு ஏற்ப நுகர்வோர் கூட்டுறவு இன்று ஆல்போல் தழைத்து இந்தியாமுழுமையும் வேர்விட்டு உயர்ந்து வளர்ந்துள்ளது.

தமிழகத்தைப் பொறுத்த மட்டில், நுகர்வோர் கூட்டுறவு மூன்று அடுக்குக் கொண்ட அமைப்பாக உள்ளது. மாநில அளவில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையமும், மாவட்ட அளவில் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும், நகர, பேரூர் அளவில் பிரதமக் கூட்டுறவுப் பண்டகச் சாலைகளும் உள்ளன.

தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவு இணையம், மாநில அளவிலும், 29 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மாவட்ட அளவிலும், 684 பிரதமக் கூட்டுறவுப் பண்டக சாலைகளும் அவற்றில் 909 கிளைகளும் நகர, பேரூர் அளவிலும் செயல்பட்டு வருகின்றன. மேலும் 2,096 பணியாளர் கூட்டுறவுப்பண்டகச்சாலைகளும் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகளும்தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன.

மகளிரால் நடத்தப்படும் கூட்டுறவுப் பண்டகச்சாலைகளும் இவற்றுள் அடங்கும். இவையன்றி 29 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகச்சாலைகள் 32 சிறப்பங்காடிகளையும், 223 சிறிய சிறப்பங்காடிகளையும், 3,400 கிளைகளையும் நடத்தி வருகின்றன. பிரதமக் கூட்டுறவுப் பண்டகச்சாலைகள் பொது மக்களுக்கும், பணியாளர் கூட்டுறவுப் பண்டகச்சாலைகள் அந்தந்த நிறுவனத்தின் பணியாளர்களுக்கும், மாணவர் கூட்டுறவுப் பண்டகச்சாலைகள் மாணவ சமுதாயத்திற்கும் அருந்தொண்டாற்றி வருகின்றன.

## தேசீயக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் ஊரக நுகர்வோர் திட்டம்

தேசீயக்கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் கிராமப் பகுதிகளில், மக்களுக்குத் தேவையான நுகர்பொருள்களைக் கிடைக்கச் செய்ய 'ஊரக நுகர்வோர் திட்டம்' என்ற பெயரில் ஒரு நிதியுதவித் திட்டத்தை 1976-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. தமிழ்நாட்டில்தான் இந்தத் திட்டம் முதன் முதலில் அமல்படுத்தப்பட்டது என்பது ஒரு சிறப்பு அம்சமாகும். இத்திட்டத்தின் கீழ் தேசீயக்கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து பங்குத்தொகை, கடன் மற்றும் மான்யமாக ரூ.17.06 கோடி ரூபாய் நிதியுதவி பெற்று அளிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று தமிழக அரசு 1978 ஆம் ஆண்டு ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் ஒரு நியாயவிலைக்கடை திறந்து கிராமத்தில் வாழும் மக்களுக்கு அத்தியாவசியப் பண்டங்களும் பிற நுகர்பொருள்களும் கிடைக்கச் செய்ய 'ஒரு கிராமம் - ஒரு கடை' திட்டத்தைச் செயல்பாட்டுக்கு ஏற்றது. இத்திட்டத்தின் கீழும் கூட்டுறவுகளே தேர்ந்தெடுக்கப்பட்டு, தஞ்சாவூர், தென்னார்க்காடு, தர்மபுரி மற்றும் திருநெல்வேலி நீங்கலாக இதர எல்லா மாவட்டங்களிலும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கடை திறக்கும் பொறுப்பு கூட்டுறவுகளுக்கு அளிக்கப்பட்டது. அதற்கிணங்க கூட்டுறவுகள், ஒதுக்கப்பட்ட மாவட்டங்களில் கடைகளைத் திறந்து திறம்பட நடத்தி வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் மக்கட்தொகை 100 உள்ள வருவாய்க்கிராமங்களில்கூட, ஒரு பகுதி நேரக் கடை திறக்கப்பட்டு



மலைப்பகுதிகளில் அரசு நிலம் ஆக்கிரமிக்கப்படுவது சம்பந்தமான பிரச்சினைகளை ஆய்வதற்காக அரசால் திரு. சி. தங்கராஜ், இ.ஆ.ப. தலைமையில் அமைக்கப்பட்ட குழுவினர் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன் அவர்களிடம் அறிக்கையைச் சமர்ப்பித்தனர். (22-10-1990)

நடத்தப்பட்டு வருகிறது. மேலும் 1984 ஆம் ஆண்டு 1000 குடும்ப அட்டைகளுக்கு மேற்பட்ட நியாய விலைக்கடை என்ற அடிப்படையில் 1000 குடும்ப அட்டைகளுக்கு மேற்பட்ட நியாயவிலைக் கடைகளைப்பிரித்து புதிய நியாய விலைக் கடைகளை எல்லா மாவட்டங்களிலும் திறக்கும் பொறுப்பு கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒப்படைக்கப்பட்டது.

தற்போது 800 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக் கடை என்ற அரசின் புதிய கொள்கையின்படி, முதற்கட்டமாக 1,200 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாய விலைக் கடைகளைப் பிரித்து 1,202 புதிய கடைகளைத் திறக்கும் பணி நடைபெற்று வருகின்றது, இத்திட்டத்தைச் செயல்படுத்த தமிழக அரசு ரூ.26.10 கோடி ரூபாய் மான்யமாக வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள மொத்தம் 21,134 நியாயவிலைக் கடைகளில், 20,198 நியாய விலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களாலேயே நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் உள்ள 128 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களில் 118 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு கூட்டுறவுக் கடைகள் மூலமே அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகிக்கப்படுகின்றன. ஏறக்குறைய 1.85 இலட்சம் மெட்ரிக் டன் எடை கொண்ட அத்தியாவசியப் பொருட்கள் ரூ.60 கோடி பெறுமானத்திற்கு மாதம் ஒன்றுக்குத் தமிழ்நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் கூட்டுறவுகளால் விநியோகம் செய்யப்படுகின்றன எனச் சொன்னால் கூட்டுறவுகள் ஆற்றும் மகத்தான தொண்டு மக்களுக்கு நன்கு விளங்கும். இத்தகைய மிகப் பெரும் செயலைத் தொடர்ந்து சீராகச் செயல்படுத்திட தேவையான நிதியுதவியினைக் கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு வங்கியிலிருந்து காசுக் கடனாகப் பெற்று நிறைவேற்றி வருகின்றன.

அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிப்பதில் முன்னின்று நடத்துவது மட்டுமல்லாமல், பிற நுகர்பொருட்கள் பொது மக்களுக்குக் கிடைக்கச் செய்யவும் முனைப்புடன் செயல்படுகின்றன. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நுகர்பொருட்களை வழங்க இரண்டு மண்டல விநியோக மையங்கள் சென்னையிலும் கோயம்புத்தூரிலும், மத்திய அரசு நிதியுதவி பெற்று நிறுவப்பட்டுள்ளன.

நுகர்வோர் கூட்டுறவுகள் விநியோகிக்காத நுகர்பொருளே இல்லை எனலாம். நுகர்வோர் கூட்டுறவுகள் மளிகைச் சாமான்கள், மருந்துப் பொருட்கள், துணி வகைகள், எழுது பொருட்கள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், இல்லத்துக்குத் தேவையான நெடுங்காலம் பயன்படும்,தொலைக்காட்சி,குளிர்சாதனப் பெட்டி, அரவை இயந்திரம், தையல் இயந்திரம் மற்றும் எரிவாயு உருளைகள் போன்ற அனைத்து நுகர்பொருள்களையும் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் மக்களுக்குக் கிடைக்கச் செய்கின்றன. மேலும், விற்கப்படும் பொருள்களின் தரத்தைப்பரிசோதனை செய்து, திருப்தியடைய தரப் பரிசோதனைக் கூடங்களை அரசு உதவியுடன் நிறுவியுள்ளன.



நுகர்வோர் நலன் காக்கும் குழுக்கள் அமைத்து, அக்குழுக்களின் கூட்டங்களைக் கூட்டி, நுகர்வோர் குறைகளை அறிந்து அவைகளை நிவர்த்திக்க உடனடியாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆக, எல்லா வகையிலும் நுகர்வோர் நலன் பேணிக்காக்க முனைப்பான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்கின்றன, நுகர்வோர் கூட்டுறவுகள்.

இத்தகைய நுகர்வோர் கூட்டுறவுகள் தமிழக மக்களுக்கு, வேலை வாய்ப்பு வசதிகளைப் பெரும் அளவுக்கு அளிக்கின்றன. பணியாற்றும் தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியத்தை அளித்து அவர்கள் நலன் பேண பல்வகை வசதிகளைச் செய்து தருகின்றன. முறையான கணக்குகளைப் பராமரித்து அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளையும் கட்டணங்களையும் முறையாகச் செலுத்துகின்றன.

இவ்வாறு, தமிழகத்தில் செயல்படும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், மக்களுக்கு அருந்தொண்டாற்றி வருகின்றன. அவைகளைப் போற்றிவளர்த்துக் காத்தல் தமிழ்ப் பெருங்குடி மக்களின் தலையாய கடமை.

# நூல் நயம்

## ஜய்ஹிந்த் செண்பகராமன்

**ஆசிரியர் : ரகமி**

**வெளியீடு:**
பூரம் பதிப்பகம்
59, ராஜூ நாயக்கர் தெரு,
மேற்கு மாம்பலம்
சென்னை-600 033.

விலை: ரூ.40 பக்கம்: 360

இந்திய நாட்டைச் சேர்ந்த கேரள மாநிலத்தில் பிறந்து, ஜெர்மனி நாட்டுக்குச் சென்று, கல்வி கற்றுத் தேர்ந்து, டாக்டர் பட்டம் பெற்று, ஜெய் ஹிந்த் என்ற வீர முழக்கமிட்டு, இட்லரையே மன்னிப்புக் கேட்க வைத்த இணையற்ற வீரர், மாவீரர் செண்பகராமனின் வாழ்க்கை வரலாற்று நூல் இது.

நூலில் அவர் அறிமுகம் செய்யப் படுவதே, ஒரு சிறப்பு மிக்க நிகழ்ச்சியாக அமைக்கப்பட்டுள்ளது. நாடகக் காட்சி போல அந்நிகழ்ச்சி நமது மனத்தைக் கவருகிறது.

வெளிநாட்டுக்குச் சென்று கல்வி, அல்லது தொழிலில் ஈடுபடும் பற்பல இந்தியர்கள் வெளிநாட்டுப் பெண் களையே திருமணம் செய்து கொண்டு திரும்புவது என்ற மரபு உருவாகியிருந்த நாட்களில், ''இந்தியப் பெண்ணையே மணம் புரிவேன்'' என்று சூளுரைத்து அவ்வாறே செயலாற்றிய பெருமை செண்பகராமனுக்கு உண்டு என்பதை நூலாசிரியர் சுவையுற எழுதியுள்ளார்.

ஜெர்மனி நாட்டின் சர்வாதிகாரியாக விளங்கி, ஆங்கில ஏகாதிபத்தியத்தையே அச்சுறுத்திய அடால்ஃப் ஹிட்லரின் அன்பைப் பெற்ற செண்பகராமன், பின்னர், இந்தியரைக் குறித்து ஹிட்லர் தவறாகச் சொல்லிய ஒரு கருத்தைத் திரும்பப் பெற வைத்த நிகழ்ச்சியைப் படிக்கும் போது நமக்கு வியப்பு மேலிடுகிறது.

இனிய எளிய நடை அருமையான நிகழ்ச்சி அமைப்பு, இவ்வாறு சுவை ததும்பும் வகையில் இந்நூல் திகழ்கிறது. செண்பகராமன் தொடர்பான புகைப் படங்களையும் பலரின் புகைப்படங்களை யும் வெளியிட்டு, அவர்களையும் நினைவு கூரும் நூலாசிரியரின் நெஞ்சம் போற்று தலுக்குரியது. பல்வேறு ஆவணங்களின் பிரதிகளை வெளியிட்டிருப்பது பாராட்டுக்குரியது.

— தமிழ்ப்பித்தன்

## காந்திஜி வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள் (பாகம்-3)

**ஆசிரியர்:விஷ்ணு பிரபாகர்**

**வெளியீடு:**
காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை-20

விலை:ரூ.4 பக்கம்:88

அண்ணல் காந்தியடிகள் வாழ்க்கை யில் நடந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறுகிறது இந்நூல்.

இத்தொகுப்பு அண்ணலின் தியாக உள்ளத்தைச் சித்திரிக்கிறது.

## காந்திஜி வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள் (பாகம்-4)

திரு விஷ்ணு பிரபாகர் எழுதிய இந்நூலையும் காந்திய இலக்கியச் சங்கமே வெளியிட்டுள்ளது. 110 பக்கங்கள் உள்ள இந்நூலின் விலையும் ரூ.4 தான்.

அண்ணல் காந்தியடிகளின் வாழ்வும் வாக்கும் இந்நூலில் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

எல்லாரும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய சுவையான நிகழ்ச்சிகளின் தொகுப்பு.

— மறைமலை

# வரப்பெற்றோம்

## எனது பூமியில்:

**ஆசிரியர் : மா.வே. இரவிச்சந்திரன்,**
**வெளியீடு:** மைதிலி பதிப்பகம்,
54, மெயின் ரோடு,
தென்பாதி-609 111.

விலை:ரூ.4

## ஒரு நூறு தத்துவங்கள்:

**தொகுப்பாசிரியர்: பசும்பொற்கிழார்,**
**வெளியீடு:** பாவலர் பதிப்பகம்,
பாளையம்பட்டி-626 112.

விலை:ரூ.5 பக்கம்:46

## ஆழ்வார்கள்:

**ஆசிரியர் : விஜயம் சரசுவதி,**
**வெளியீடு:** கமலவேணி பதிப்பகம்,
135, சாந்தி நகர்,
குரோம்பேட்டை,
சென்னை-500 044.

விலை:ரூ.5 பக்கம்:64

## மெல்ல வரும் தென்றல்

**ஆசிரியர்: தேவிபாலா**

**வெளியீடு:**
மயிலவன் பதிப்பகம்,
17, கங்கை அம்மன் கோயில் தெரு,
வடபழனி, சென்னை-26.

பக்கம்: 132 விலை ரூ.13/-

பொருத்தமற்றவனைக் கணவனாக அடைந்த ஒரு பெண்ணின் கதை. எதிர் பாராத திருப்பங்கள் பல உண்டு. கதை சஸ்பென்ஸாகச் சொல்லப்பட்டிருக்கும் முறை நன்றாக இருக்கிறது.

இந்நூலில் இரண்டாவதாக உள்ள சிறுகதை நாவலை விடச் சிறப்பாக உள்ளது.

— குமாரசாமி

## உழைப்பால் முன்னேறுவது எப்படி?

**ஆசிரியர்: மயிலைத் தொண்டன்**

**வெளியீடு:**
தமிழ்மணி பதிப்பகம்,
107-ஏ, பெரியார் பாதை (மேற்கு),
(100 அடி ரோடு அருகில்), சூளைமேடு,
சென்னை-600 094.

பக்கம்: 80 விலை ரூ.7.50

உழைப்பே உயர்வைத் தரும் என்ற உண்மையை இந்நூலில் கலீலியோவி லிருந்து இன்றைய சென்னை நகர வர்த் தகர் வரை மேற்கோள் காட்டி விவரிக்கப் பட்டிருக்கிறது.

சுவையான உண்மைச் சம்பவங்கள், சாதனைகள் கூறப்பட்டிருக்கும் விதம் நன்றாக இருக்கிறது.

## பழமொழிகளில் விலங்கினம்

**ஆசிரியர்: ரமா வேல்சாமி**

**வெளியீடு:**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
41 பி, கிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட், சென்னை-98.

விலை:ரூ.5 பக்கம்:42

'அக்கரை மாட்டுக்கு இக்கரைப் பச்சை' என்று துவங்கி 'வௌவால் அடைகிற வீட்டில் குடியிருப்பது எப்படி?' என்பதோடு முடிகிறது. இந்நூல் 445 பழமொழிகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

மிகுந்த ஆர்வத்தோடு பழமொழிகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் நாம் அறிந்தவை, அறியாதவை உண்டு.

ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் 'உங்களுக்காக...' என்ற அறிவுரை அழகாகவுள்ளது.

— குமார்

அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழா:

# கூட்டுறவு ஒரு கலங்கரை விளக்கு

**ஏ.ஜே. சீனிவாஸ்,** தனி அலுவலர்,
தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், சென்னை.

கூட்டுறவு என்பது சமூகத்தில் நலிவுற்றவர்களுக்கும் பின்னடைந்தவர்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதால் ஒரு சமூக இயல் தத்துவம் ஆகிறது. கூட்டுறவு என்பது பண்டகசாலை, விற்பனை, விநியோகம் ஆகிய துறைகளில் ஈடுபடுவதால் ஒரு பொருளாதாரத் தத்துவம் எனலாம். ஏற்கெனவே மனிதனால் மேற்கொள்ளப்பட்ட முதலாளித்துவம், பொது உடைமைச் சமதர்மம் போன்ற தத்துவங்களில் நல்ல அம்சங்களை மட்டும் எடுத்துக் கொள்வதால் கூட்டுறவு என்பது தத்துவங்களிலிருந்து பிறந்த தத்துவமாகும்.

**'தனி உடைமைக்கும், பொது உடைமைக்கும் இடையே அமைக்கப்பட்ட பாலம் தான் கூட்டுறவு' - என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்.**

**தற்போது கூட்டுறவின் கொள்கைகளாக (1) அனைவரும் உறுப்பினராகலாம் (2) மக்கள் ஆட்சி நிர்வாகம் (3) முதலீட்டுக்கு அளவான பலன் (4) உபரித் தொகையில் நியாயமான பங்கு (5) கூட்டுறவுக் கல்வி மற்றும் (6) கூட்டுறவு நிறுவனங்களிடையே கூட்டுறவு ஆகிய 6 கொள்கைகளையும் கூறலாம்.**

ஒரு கூட்டுறவு அமைப்பில் சேரவும், தொடர்ந்து நிற்கவும், விலகவும் ஒருவருக்கு முழு சுதந்திரம் உண்டு, என்பதாகும். சாதி, சமயம், அரசியல் கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்டு பொதுமையான மக்கள் நிறுவனமாகக் கூட்டுறவு அமைப்பு விளங்குவதற்கு இந்த முதற் கொள்கை துணை செய்கிறது. சாதி சமய இன வேறுபாடற்ற ஒரு ஒருமை உணர்வை இந்தக் கொள்கை உருவாக்குகிறது.

கூட்டுறவுச் சங்கங்கள் ஜனநாயக அமைப்புகள். அதனுடைய விவகாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவராலோ அல்லது அவர்களது ஒப்புதலைப் பெறக்கூடிய வகையில் நியமிக்கப்பட்டவர்களாலோ நிர்வகிக்கப்பட வேண்டும். 'ஒரு உறுப்பினர் ஒரு வாக்கு' என்கிற சம உரிமைப் பண்பு, பிற வணிகக் குழுக்களில் உள்ள 'ஒரு பங்கு ஒரு வாக்கு' என்கிற நிலைமைக்கு மாறுபட்டது. எனவே, கூட்டுறவு மனிதத் தன்மைக்கு முதலிடம் அளிக்கிறது. செல்வத்துக்கு அல்ல. இதனால் சமத்துவம் உறுதி செய்யப்பட்டு ஜனநாயகத்துக்கு நிலையான இடம் அளிக்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் முழு அதிகாரமும் சங்க உறுப்பினரைக்கொண்ட பேரவைக்கு அளிக்கப்படுகிறது. பேரவை நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுத்து நிர்வாகத்தை அதனிடம் ஒப்படைக்கிறது. கூட்டுறவு இயக்கத்தில் உறுப்பினர் கூட்டத்துக்கு வராமலேயே வாக்களிக்கும் முறை இல்லை. கூட்டுறவுச் சங்கத்தின் பேரவைதான் மக்களாட்சி மாண்பு மலரும் தொட்டில் என்று கூறலாம்.

'உபரியில் பங்கு' என்கிற கொள்கை ராக்டேல் முன்னோடிகளின் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது. இக்கொள்கை கூட்டுறவுச் சங்கங்கள் வணிக ரீதியில் இயக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

கூட்டுறவு இயக்கத்தில் முதலீட்டின் முக்கியத்துவத்தைப் புறக்கணிக்க இயலாது. பொதுவாக, கூட்டுறவுச் சங்கங்களில் வசதி குறைந்த மக்கள் அங்கத்தினர்களாகச் சேருகிறார்கள். அவர்கள் சேமித்து வைத்த சிறு தொகையைப் பங்கு முதலீடு செய்யும்போது அவர்கள் பெரும் தியாகத்தைச் செய்ய வேண்டியுள்ளது. ஆகவே, உறுப்பினர்கள் செய்யும் முதலீட்டுக்கு அளவாக வட்டிஅளிப்பது அவசியமாகும்.

கூட்டுறவுக் கல்வி என்பது கூட்டுறவு இயக்கத் தத்துவங்களில் முக்கியமான ஒன்றாகும். பொருளாதாரம், ஜனநாயகம் சம்பந்தப்பட்ட கூட்டுறவுக் கொள்கைகளிலும், தொழில் நுணுக்கங்களிலும், மக்களுக்கும், பணியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் கல்வி புகட்ட கூட்டுறவு அமைப்பு முன் வரவேண்டும். கூட்டுறவு இயக்கம் தன்னிச்சையான அடிப்படையில் இயங்குவதால் உறுப்பினர்கள் சங்கங்களின் தீர்மானங்களையும், செயல்களையும் உரிய முறையில் தெரிந்துகொள்ளத் தொடர்ச்சியாகக் கல்வி அளிப்பது அவசியமாகும். கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் தாங்கள் சார்ந்துள்ள சங்கத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளையும் சங்கத்தின் மூலம் தாங்கள் பெறவேண்டிய உரிமைகளையும் நன்கறிந்து செயல்பட கூட்டுறவுக் கல்வி உதவுகிறது. கூட்டுறவுச் சங்கத்தைப் பற்றிய தெளிவான கல்வி பெற்ற உறுப்பினர் அச்சங்கத்தில் அழியாத செல்வம் என்றே சொல்லலாம்.

**கூட்டுறவு என்பது ஒருங்கிணைந்த ஒரு கல்வி முறையாகும்**

இறுதியாகக் கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவு என்பது பரஸ்பர உதவியாகும். எல்லாக் கூட்டுறவு அமைப்புகளும் தங்களுடைய உறுப்பினர்கள், நிர்வாகக் குழுக்கள், இவர்களின் நலனைச் சீரிய முறையில் பாதுகாக்க மாநில, தேசிய, அனைத்துலக நிறுவனங்களோடு பயனுள்ள வகையில் உறவாட வேண்டும். வலிமையற்றவர்கள் எவ்வாறு கூட்டுறவின் மூலம் வலிமை பெறுகிறார்களோ அவ்வாறே நலிவுற்ற சங்கங்கள் உயர்மட்டக் கூட்டுறவு நிறுவனங்களோடு இணைந்து செயலாற்றுவதன் மூலம் வலுவான அமைப்புகளாக மாற வாய்ப்புகள் ஏற்படும். இதனால், மக்களுக்குக் கூட்டுறவின் பணிகள் வலிவும் பொலிவும் பெறுகின்றன.

**எனவே, கூட்டுறவு என்பது தத்துவம் மட்டும் அல்ல, வாழ்க்கை நெறியாகவும் திகழ்ந்து மக்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகும்.** வெற்றி முழக்கமாகவோ, கருத்துக் கோவையாகவோ, காற்றில் கரையும் கீதமாகவோ இல்லாமல், சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க உதவும் மாமருந்தாக இந்தத் தத்துவம் உதவுகிறது.

**''எல்லோர்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம் நோக்கிச் செல்கின்றதிந்த வையம்''.**

என்றார் பாவேந்தர் பாரதிதாசன். ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் அமைக்கும் பணியில் இன்று மனித இனம் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. **''எல்லோரும் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொருவரும் எல்லோருக்கும்'' என்ற சமதர்ம தத்துவ விளக்கமாக அமைந்தது கூட்டுறவாகும். அந்த நெறியில் சமதர்மச் சமுதாயம் அமைய மனித மனத்தை ஆள்கின்ற சக்தியாக, இணைப்புச் சங்கிலியாக இருப்பது கூட்டுறவுச் சங்கமாகும்.**

**''எங்கெங்கு காணினும் கூட்டுறவு''** என்ற சூழ்நிலை நாடெங்கும் உருவாகி வருகிறது. அதற்குக் கூட்டுறவுத் தத்துவம் என்ற வாழ்க்கை நெறிதான் அடித்தளமாக இருந்து வளர்க்கிறது; வழிகாட்டுகிறது; கூட்டுறவுடன் இணைந்து வாழும்போதுதான் கூட்டுறவுத் தத்துவம் எப்படியெல்லாம் மனித சமுதாய மேம்பாட்டுக்கு உதவுகிறது என்பது புரியும்.

சிந்தித்துப் பார்த்தால், கூட்டுறவு என்பது ஏறத்தாழ ஒரு விரிந்த குடும்ப வாழ்க்கை என்பது புலனாகும். மனித நேயத்தின் காரணமாகத் தங்களது குடும்ப எல்லையைக் கொஞ்சம் விரிவுபடுத்தி, விசாலப்படுத்தி உறவாடுவது என்பது வாழ்க்கையின் உயர்ந்த தத்துவத்தின் விளக்கமாகும்.

# இதயத்தை வென்றவர்

— பேரறிஞர் அண்ணா

நேரு நல்ல இதயம் படைத்தவர்; அவரிடமிருந்த அறிவாற்றல் வேறு பலரிடம் இருந்திருக்கிறது. இனியும் இருந்திடலாம்.

ஆனால், அறிவாற்றலுடன் அவருக்கு இதயம் இருந்தது. பாலைவனத்தைச் சோலைவனமாக்க, மனிதனின் கடினமான உழைப்பைக் குறைத்திட உதவும் கருவிகளைத் தொழிற்சாலைகளில் அமைக்க, நாட்டிலே புதுக்கோலம் எழுந்திடச் செய்திட அறிவாற்றல் வேண்டும். அதனைப் பெற்றிருந்த அப்பெருமகன் குழந்தையின் மழலை கேட்டதும் தானும் குழந்தையாகிவிடும் இயல்பினை, ஏழை வதைபடுவதைக் காணும்போது அவன் நிலை எண்ணிக் கண்ணீர் சிந்திடும் இரக்கத்தினை, நல்லிதயத்தைப் பெற்றிருந்தார்.

ஆட்சியிலே அவர் கையாண்ட செயல்முறைகள் குறித்துக் கருத்து மாறுபாடு கொண்டோருங்கூட அவரிடமிருந்த அந்தப் பண்பினுக்குப் பாராட்டுத் தெரிவித்திடத் தயங்கியதில்லை.

நிலை உயர-உயர- நெரித்த புருவத்தினராகி விடுவதும், அதிகாரம் குவியக்குவிய 'ஆள் மிரட்டி' ஆகிவிடுவதும் உண்டு. அரசியல் உலகில் இத்தகையோர் பலர் உளர். ஆனால் நேருவின் நிலையும், புகழும் அதிகாரமும், ஓங்க, ஓங்க அவருடைய இதயத்திலே கனிவு மிகுதியும் இடம் பெற்றது. கண்கள் கவிபாடலாயின.

என்னிடம் இத்தனை அன்பு காட்டிடும் மக்களுக்கு நான் நிரம்பச் செய்திட வேண்டுமே; முடியவில்லையே, செய்தளித்திருப்பது போதாதே என்ற கவலை கப்பிக் கொள்ளும் நிலை, அவருக்கு அடிக்கடி ஏழ்மையின் கொடுமைகளைக் காணும் போதெல்லாம்.

நிலை உயர, உயர, தலைவர்களுக்கும்மக்களுக்கும் இடையில் ஒரு பயங்கரமான இடைவெளி அமைந்து விடுவதுண்டு. பண்டித நேரு இதற்கு இடம் கொடுக்கவே இல்லை.

மக்களுடன் கலந்து உலவிட- உரையாட- அவர் உள்ளம் அறிந்திட அவர் எப்போதும் துடித்து வந்தார். மக்களும் அவரைக் காண்பதிலே தனிக்கவர்ச்சி கண்டனர்.



பாராளுமன்றத்திலே முதியவர் நேரு அமர்ந்திருந்தார். திடல்களிலேயோ, இளைஞர் நேரு உலவினார்; உற்சாகமளித்தபடி, உறுதி அளித்தபடி நம்பிக்கையூட்டியபடி.

சிறந்த ஜனநாயகப் பண்பாடு பூத்திட வேண்டும் என்பதிலே மிகுந்த அக்கறைகாட்டி வந்தார். அவர் ஏற்படுத்திவிட்டுச் சென்றுள்ள அந்தப்பண்பு, பாழ்படாமல் இருந்திடச் செய்திடல் வேண்டும். அனைவருக்கும் அதிலே பொறுப்பும் பங்கும் நிச்சயமாக உண்டு.

நிலை உயர, உயர, தலைவர்கள் எனக்கு இதற்கெல்லாம் நேரம் இல்லை என்று கூறிக்கொள்வதைப் பெருமைக்கு அடையாளமாக்கிக் கொள்வர். பண்டித நேரு அவ்விதம் இருந்ததில்லை. பார் புகழ் நிலை பெற்ற பிறகும், அவருக்கு நல்ல கவிதைகளைப் படிக்க, கேட்க, இசை நுகர, நாடகம் கண்டுகளித்திட, மலைவளம் காண்பதிலே மகிழ்ச்சி பெற, மலர் மணம் நுகர, மழலைகளைக் கேட்டு இன்புற, ஓவியம் கண்டு வியந்திட, நேரம் கிடைத்தது; நினைவு இருந்தது; காரணம், அவர் மூளை பலத்தை மட்டும் காட்டி, மக்களை வியப்படையச் செய்திட்ட தலைவர் அல்ல; தமது இதயத்தைக் காட்டி மக்களின் இதயம் வென்றவர். அதன் காரணமாகவே பல்வேறு அரசியல் கட்சியினரும் அவருடைய நினைவைப் பசுமையாகக் கொண்டுள்ளனர். அவருடைய நோக்கம் நிறைவேற தத்தமக்குச் சரியென்று தோன்றிடும் முறையில் பணியாற்ற விழைகின்றனர்.

★ மனித இனம் பல தோல்விகளைக் கண்டிருக்கிறது என்றாலும், வரலாற்றில் அது பெற்ற வெற்றிகளும் சாதனைகளும் மகத்தானவை. அரசியல் சுதந்திரம் மட்டும் உண்மையான சுதந்திரம் ஆகி விடுவதில்லை. பொருளாதாரச் சுதந்திரமும், ஆன்மீக விடுதலையும் அவனுக்கு அவசியம் வேண்டும். அப்போது தான் மனிதன் முழு வளர்ச்சி பெறுகிறான். பிறவி எடுத்த பயனை அடைகிறான். உலகில் அமைதியும் ஒழுங்கும் நிலவ வேண்டுமானால், உலக நாடுகள் எல்லாம் விடுதலை பெற்றுத் தன்னாட்சி செலுத்த வேண்டும்.

— நேரு

# மங்காத ஜோதி



அடிமையாய் இருந்த நாடு
ஆங்கிலர் பிடியைப் போக்க,
துடித்திட்ட உணர்வி னாலே
தொண்டரின் அணியைத் தேர்ந்து
கொடியதோர் தொல்லை ஏற்று
கொடுஞ்சிறை துணிந்தே நாடி
நெடியதோர் சுதந்தி ரப்போர்
நெறியினில் சேர்ந்தார் நேரு.

விடுதலை வேட்கை கொண்டே
விளங்கிய வல்லோர் எல்லாம்
படுகளம் கண்ட போதும்
பதறிடா நெஞ்சம் கொண்டார்
கடுகள வேனும் வீரம்
குன்றிடா நிலையைப் பெற்றார்;
கெடுதலே கோடி வந்தும்
கேட்டனர் சுதந்தி ரத்தை!

கல்வியிற் சிறந்த நேரு
கனலெனக் களத்தில் நின்று
வல்லதோர் போரைச் செய்தார்
வணக்கத்திற் குரியர் ஆனார்
செல்வத்தைக் கொள்ளை கொள்ளும்
தீயரை விரட்டும் போரில்
சொல்லொணாத் துயரம் உற்றும்
தொய்வினை உற்றா ரில்லை!

பூத்திட்ட சுதந்தி ரத்தால்,
புதுமைசேர் அழகு விஞ்ச
மாத்திறம் கொண்ட மேதை
மாணிக்க நேரு, ஆட்சிச்
சாத்திரத் தலைமை ஏற்று,
சட்டங்கள் பலவே ஆற்றி
நேத்திரம் போன்றே நன்மை
நித்தமும் விளைத்தார் அன்பாய்!

திட்டங்கள் பலவும் தந்தார்;
திங்களாய்க் குளிர்ச்சி தந்தார்;
பட்டமே படித்துப் பெற்ற
பண்பினால் உயர்வு பெற்றார்;
'கட்டிய கோபுரம்' ஆனார்;
கவிதைக்குத் தலைவ ரானார்;
மட்டிலாத் தொண்டி னாலே
மங்காத ஜோதி ஆனார்!



-புலவர் சி. துரைசுவாமி



# கீழ்பவானி பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

**த**மிழ்நாடு வேளாண்மைப் பொறி இயல் துறை மூலம் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், கீழ்பவானி பாசனப் பகுதிகளில் 1982-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் பாசனப் பகுதி யின் வாய்க்கால்களில் அமைந்துள்ள மதகு களில் இருந்து செல்லும் மண்வாய்க்

**ச. சவடமுத்து**
**தலைமைப் பொறியாளர்**
**வேளாண்மைப் பொறியியல் துறை**



கால்களில் நீர் விரயத்தைத் தடுப்பதற் காக அவைகள் காரை வாய்க்காலாக மாற்றி அமைக்கப்படுகின்றன. இதில் பாசன நீரை எளிதாகக் கையாள்வ தற்கு நீர் பிரிக்கும் தொட்டிகள், நீர் திருப்புத் தொட்டிகள், வண்டிப் பாதை அமைப்புகள், கால்நடைக் கடப்புகள் ஆகியவை அமைக்கப்பட்டு வருகின்றன. பூமிக்கடியில் குழாய் பதித்தும், பாசன நீர் எடுத்துச் செல்லப் படுகிறது.

கீழ்பவானிப் பாசனப் பகுதியில் பாசன நீரை எளிதாகவும், சிக்கன மாகவும் கையாள்வதற்கு ஒரு மத கின் பாசனப் பரப்பு சுமார் 40 ஏக்கருக்கு மேலாகவும், 80 ஏக்கருக் குள்ளாகவும் (விநாடிக்கு 0.70 கன அடி முதல் 1.40 கன அடி வரை யிலான நீர்வரத்து) இருந்தால் நீர்

**பாசனப் பகுதி மேம் பாட்டுத் திட்டத்தின் மூலம், நீர் விரயம் தடுக்கப்படுகிறது. அனைத்து விவசாயிகளும் ஒரே காலத்தில் பயிரிட முடி கிறது. தண்ணீர் சம்பந்த மான சச்சரவுகள் தீர்க்கப்படு கின்றன.**

உபயோகம் சிறப்பாக இருக்கும் என்பது கீழ்க்கண்ட காரணங்களி னால் தெரிய வந்துள்ளது:

1. நிலத்தின் வாட்டம்.
2. நிலத்தில் நீர் உட்புகும் தன்மை
3. பயிரின் வேர்ப்பரப்பின் ஆழம்
4. நிலத்தின் மேற்பரப்பின் தன்மை
5. நீரின் அளவு.

ஆனால், கீழ்பவானி பாசனப் பகுதிகளில் உள்ள மதகுகளின்

பாசனப் பரப்பு சுமார் 10 ஏக்கரில் இருந்து 200 ஏக்கர் வரை உள்ளது. 40 ஏக்கர் பாசனப் பரப்பை விடக் குறைவான மதகில் விடப்படும் நீரின் பெரும் பகுதி நிலத்தில் உறிஞ்சப்பட்டு வீணாவதால் தேவை யான அளவில் பாசன நீர் கிடைப்ப தில்லை. பாசனப் பரப்பு 80 ஏக் கருக்கு மேலாக உள்ள மதகுகளில் விடப்படும் நீர் எளிதாக ஒரு விவ சாயியினால் கையாள முடிவதில்லை.

மேலும், நிலத்தில் வாட்டம் அதிக மாக இருப்பதால், மேல் மண் அரித் தும் செல்லப்படுகிறது. இம்மதகு களில் மேற்பகுதி விவசாயிகள் தேவைக்கு அதிகமான பாசன நீரை எடுத்துக் கொண்டு கீழ்ப்பகுதி விவ சாயிகளுக்குத் தேவையை விடக் குறைவான நீரை விடுவதால் மதகில் எல்லாப் பாசனப் பரப்பிலும் ஒரே காலத்தில் பயிர்ச் சாகுபடி செய்ய முடிவதில்லை. இதனால், பாசனக் காலத்தினை நீட்டித்துத் தேவையான நீரை விட அதிகமாகச் செலவு செய்ய வேண்டியுள்ளது.

எனவே, பாசன நீரைச் சிக்கன மாகவும், எளிதாகவும் கையாண்டு மதகின் மேற்பகுதி விவசாயிகளும், கீழ்ப்பகுதி விவசாயிகளும் ஒரே நேரத்தில் சமமாகப் பாசன நீரைப் பெறுவதற்கு மதகின் பாசனப் பகுதிகள் 80 ஏக்கருக்கு மேல் உள்ள பாசனப் பகுதிகளை 40 ஏக்கரில் இருந்து 80 ஏக்கருக்குள்ளாக உள்ள பகுதிகளாகப் பிரித்து பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு பகுதிக்கும் தனித் தனியே காரை வாய்க்கால் அமைக் கப்படுகிறது.

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம்: 1. நீர் விரயம் தடுக்கப்படுகிறது. 2. நீரை எளி தாகக் கையாள முடிகிறது. 3. அனைத்து விவசாயிகளுக்கும் நீர் சமமாகப் பங்கிட்டுத் தரப்படுகிறது. 4. கடைகோடி வயல்களுக்கும் பாசன நீர் கிடைப்பதால் பயிர் செய்யும் நிலத்தின் பரப்பு அதிகரிக்கிறது. 5. அனைத்து விவசாயிகளும் ஒரே காலத்தில் பயிரிட முடிகிறது. 6. பாசன நீரின் சமமான பங்கீட்டி னால் விவசாயிகளிடையே பாசன நீர் சம்பந்தமான சச்சரவுகள் தீர்க் கப்படுகின்றன. 7. மதகில் மேற்



பகுதி நிலங்களில் நீர்க்கசிவு காரை வாய்க்காலினால் தடுக்கப்படுவதால் விளைச்சல் அதிகரிக்கிறது.

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் பாசன விவ சாயிகள் சங்கம் அமைக்கப்பட்டு விவசாயிகளும் இத்திட்டத்தில் முழுப் பங்கு கொள்கின்றனர். திட்டப் பணிகள் சங்கம் மூலமாகச் செயல் படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் எக்டேர் ஒன்றுக்கு ரூ.3,200 வீதம் செலவு செய்யப்படுகிறது.

**பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் விவசாயிகளுக்கு அரசு அளிக்கும் சலுகைகள்**

கீழ்பவானிப் பாசனப் பகுதி மேம் பாட்டுத் திட்டத்தின் கீழ் மதகுத் துவக்கத்திலிருந்து 5-8 எக்டேர் பிளாக்குகள் வரை செய்யப்படும் கால்வாய்க் கட்டுமானப் பணிகள் மற்றும் இதரப் பண்ணை மேம் பாட்டுப் பணிகளுக்கான செலவுத் தொகை முழுவதையும் அரசாங்கமே ஏற்றுக் கொண்டு, விவசாயிகளுக்கு அத்தொகை முழு மானியமாக வழங் கப்படுகிறது. 5-8 எக்டேர் பிளாக்கு களுக்குள் செய்யப்படும் பண்ணை மேம்பாட்டுப் பணிகளுக்கான செலவுத் தொகையில் 50% விவசாயிகளுக்கு மானியமாகக் கொடுக்கப்படுகிறது. மீதி 50 சதவிகிதம் கடனாக அனு மதிக்கப்படுகிறது.

மேற்படி கடன் தொகை வட்டி யுடன், வேலை செய்து முடித்த மூன்றாம் ஆண்டில் இருந்து எட்டாம் ஆண்டு வரை, 5 தவணைகளில் நிலவரியுடன் வசூலிக்கப்படும். முதல் இரண்டு ஆண்டுகளில் பணம் ஏதும் கட்டத் தேவையில்லை.

### அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழா:

# கால்நடைப் பராமரிப்பு



தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழாக வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற லட்சியத்துடன் நலிவுற்ற பிரிவைச் சேர்ந்த மக்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தவும், சுயமாகவே வருமானத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் மத்திய மாநில அரசுகள் பல சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

மேற்கூறிய திட்டங்களை நிறை வேற்றவும், கால்நடைகளை அபிவிருத்தி செய்யவும் இத்துறையின் மூலம் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், வாத்து வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப் பட்டுச் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றன.

வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டு, அரிய பல ஆக்கபூர்வமான திட்டங்களை அரசு ஏற்படுத்தியுள்ளது. பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மூலமாக மானிய விலையில் கறவைப் பசுக்கள், கோழிகள், வாத்து, பன்றி இனங்கள் விநியோகிக்கப் படுவதுடன், அரசின் அங்கமான மகளிர் மேம்பாட்டுக் கழகம், பிற்பட்டோர் நல மேம்பாட்டுக் கழகம், ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகம் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நிதி வசதி பெறவும் ஏற்பாடு செய்யப்படுகின்றது. கால்நடைத் தீவனப் பயிர் வளர்ப்பு, கன்றுகள் வளர்ப்பு

டாக்டர்
**தி.க.கோவிந்தராசன்**
**இயக்குநர்,**
**கால்நடைப் பராமரிப்புத்துறை**

போன்ற இதர பணிகளுக்கும் அரசு மானியங்கள் வழங்கி வருகின்றது. இத்திட்டங்களின் மூலமாக பழங்குடி யினர், மலைவாழ் மக்கள் மற்றும் வரட்சிப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் மேம்பாட்டிற்கான திட்டங்கள் மூலம் தனிக் கவனம் செலுத்தப்பட்டு நன்கு பயன் அடைந்துள்ளனர்.



பால் உற்பத்தியினை அதிகரிக்கும் பொருட்டு, சிறந்த கால்நடைப் பராமரிப்பு வசதிகளை அளிப்பதற்குக் கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டங்கள் மற்றும் கேந்திர கிராமத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

தமிழகத்தில் 30.6.90 முடிய 158 கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் 21 கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் நல்லமுறையில் செயல்படுகின்றன. கால்நடைப் பராமரிப்புத் துறையின் கீழ் 2 கோழிக் குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் மற்றும் கோழியின விரிவாக்க நிலையங்கள் மூலம் இனவிருத்திக்கான முட்டைகளும் கோழிகளும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மூலமாக மாநில உதவியுடன் கோழிப் பண்ணைகள் அமைக்கப்படுகின்றன. 1981-ஆம் ஆண்டு முதல் கோழிகளுக்கான நோய்கள் கண்டறியும் ஆய்வுக் கூடம் ஒன்று ஈரோட்டில் செயல்பட்டு வருகின்றது.

1989-90-இல் (28.2.90) புள்ளி விவர அறிக்கைகள் மூலம் தமிழகத்தில் கோழி முட்டை உற்பத்தி 2461.5 மில்லியன் ஆக உயர்ந்துள்ளது.

30.6.90 முடிய கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் தமிழகத்தில் 10,981 உறுப்பினர்களும், ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 1,72,366 உறுப்பினர்களும் பயன்பெற்று வருகின்றனர். 1971-72 முதல் தமிழகத்தில் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த வளர்ச்சி பெற்று வருகின்றன. 30.6.90 முடிய உள்ள காலத்தில் 1,666 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தேசியமயமாக்கப் பட்ட வங்கிகள் மூலம் சங்க உறுப்பினர்கள் கடனுதவி பெற்று தரமான ஆடுகளை வாங்கி, பராமரித்துப் பயன் அடைந்து வருகின்றனர். உறுப்பினர்களின் கால் நடைகளுக்கு மருத்துவ வசதி குடற்புழு நீக்கம், உண்ணி நீக்கம் மற்றும் நோய்த் தடுப்பு ஊசிகள் போன்ற பணிகளைக்



கால்நடைப் பராமரிப்புத் துறை அலுவலர்கள் கவனித்து வருகின்றனர்.

ஆடுகளுக்கு இறப்பின் மூலம் அதிக நஷ்டம் அடையா வண்ணம் காப்பீடு செய்வதற்கும் வழிவகைகள் செய்யப் பட்டுள்ளன. இது தவிர ஆடுகள் மரண நிதி என்ற நிதியினையும் ஒவ்வொரு சங்கமும் பராமரித்து வருகின்றது. சிறப்பு மத்திய உதவித் திட்டத்தின் கீழ் 1989-90-ஆம் ஆண்டு முடிய 3,570 ஆடு அலகுகள் விநியோகிக்கப்பட்டு சிறந்த முறையில் பராமரிக்கப்படுகிறது. மேற்கூறிய காலம் முடிய 106.83 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மை மறுநிதிக் கழகத் திட்டத்தின் கீழ், 39 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கென ரூ.83 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் ரூ.38.21 இலட்சம் இக்கழகம் வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசின் மூலம் ரூ.12.7 இலட்சம் அரசுப் பங்குத் தொகையாக முதலீடு செய்யப்பட்டுள்ளது

சிறப்புக் கால்நடைப் பராமரிப்புத் திட்டம் மத்திய அரசால் உருவாக்கப்பட்டு 1976-77 முதல் 1988-89 முடிய 21,975 யூனிட்டுகள் நிறுவப்பட்டுள்ளன. ஒரு யூனிட்டுக்கு (அலகு) 20 பெட்டை ஆடுகளும் ஒரு கிடாவும் ஆகும். 1988-89-இல் யூனிட் ஒன்றுக்கு ரூ.7,000 வழங்கப்படுகிறது. அதில் சிறு விவசாயிக்கு 25% நடுத்தர விவசாயிகளுக்கும் வேளாண்மைத் தொழிலாளர்கட்கும் $33\frac{1}{3}$% மானியமாக வழங்கப்படுகிறது.

மீதி உள்ள தொகை அரசுடைமை யாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்படுகிறது. 1988-89 முடிய ரூ.276.23 இலட்சம் மானியமாக வழங்கப் படுகிறது. 1989-90 ஆம் ஆண்டிற்கு 1,224 யூனிட்டுகள் வழங்கப் பெற்று ரூ.33.84 இலட்சம் மானியமாக வழங்கப் பட்டுள்ளது.

வடார்க்காடு, தென்னார்க்காடு, தர்மபுரி, சேலம், திருச்சி ஆகிய 5 மாவட்டங்களில் வாழும் 16,738 பழங்குடி மக்கள் ஒருங் கிணைந்த பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தால் பயன் அடைந்துள்ளனர். 1976-77 முதல் 1989-90 வரை இத் திட்டத்தின் கீழ் அரசு மானியமாக 263.15 இலட்சம் அளிக்கபட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கால்நடைகளுக்கு வைக் கோல் தீவனம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான போக்குவரத்துச் செலவினம் அரசு மானியமாக வழங்கப்படுகின்றது.

மேச்சேரி இன ஆடுகள் சின்னசேலம் ஆட்டுப்பண்ணையிலும் ராமநாதபுரம் மற்றும் வேம்பூர் இனம் சாத்தூர் ஆட்டுப் பண்ணையிலும் வளர்க்கப்படுகின்றன. ஒசூர் பண்ணையில் மான்டியா மற்றும் கொரிடல் இன ஆடுகள் வளர்க்கப் படுகின்றன.

செட்டிநாடு மற்றும் திருநெல்வேலி மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் 'கீழக்கரைசல்' இன ஆடுகள் வளர்க்கப் பட்டு வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டக் கால்நடைப் பண்ணையில் தலைச்சேரி இன வெள்ளாடுகளும், சின்ன சேலம் ஆட்டுப் பண்ணையில் ஜமுனா பாரி இன வெள்ளாடுகளும் வளர்க்கப் படுகின்றன.

ஐரோப்பிய சமூகப் பொருளாதாரக் குழு நிதி உதவியுடன் ஒரு ஆடு வளர்ப்புத் திட்டம், செங்கை அண்ணா, வடார்க்காடு, தென்னார்க்காடு, சேலம், தர்மபுரி ஆகிய 5 மாவட்டங்களில் செயல்படுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ.13.67 கோடி ஆகும்.

இத்திட்டத்தில் 60 உயரின டார்செட் பெட்டை ஆடுகளும், 10 கிடாக்களும் வெளிநாட்டிலிருந்து (இங்கிலாந்து அல்லது ஆஸ்திரேலியா) இறக்குமதி செய்து ஒசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் வைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. இந்த ஆடுகள் வாங்கு வதற்கு ரூ.3.50 இலட்சம் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. மேற்படி உயரின டார்செட் செம்மறிக் கிடாக்களை உள்ளூர் இன ஆடுகளுடன் இனச் சேர்க்கை செய்து, 50 விழுக்காடு கலப்பினக் கிடாக்களை உற்பத்தி செய்து, இக்கிடாக்களை விவசாயி களுக்கு விநியோகித்து அவர்களுடைய உள்ளூர் இன ஆடுகளின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதனால் உள்ளூர் இன ஆடுகளின் உடல் எடை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பாவேந்தர் நூற்றாண்டு:



எளியநடையில் தமிழ்நூல்
எழுதிடவும் வேண்டும்
இலக்கணநூல் புதிதாக
இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில், சிந்தனையில்
புதிதுபுதி தாக
விளைந்துள்ள எவற்றினுக்கும்
பெயர்களெலாம் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு
சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச்
செய்வதுவும் வேண்டும்!
எளிமையினால் ஒருதமிழன்
படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லோரும்
நாணிடவும் வேண்டும்!

## மாணவர் பக்கம்

# கூட்டுறவு

—நீரை. அத்திப்பூ

நாருபல கூட்டுசேர
நல்லகூடு அமையுது!
நாளும்சிறு குருவிகூட
நன்மைஇதை உணருது!

நூறுபேரு கூட்டுறவில்
சங்கபலம் கூடுது!
நூறில் ஒன்று குறை என்றாலும்
நொடிஞ்சு போயி வாடுது!

கடன்கிடைத்தால் வீடுகட்டிக்
கழனிவெட்டி வாழலாம்!
கண்டிப்பாக வீட்டுநலம்
நாட்டுநலம் கூட்டலாம்!

இடம் கொடுத்தால் ஏமாற்றுகிற
எண்ணம் நம்மை அழித்திடும்!
இதை உணர்ந்து கடன் அடைத்தால்
இதயவாழ்வு செழித்திடும்!



## பறக்கும் ரயில்!

பறக்கும் ரயில் ஒன்று விரைவில் வர இருக்கின்றது. இந்தப் பறக்கும் ரயிலுக்குச் சக்கரங்கள் கிடையாது. ஒற்றைத் தண்ட வாளத்தின் மீது, எலக்ரானிக் முறையிலே காந்த மண்டலம் ஒன்று உருவாக்கப்படும். காந்த மண்டலத்தின் மீது மிதந்தவாறு இந்தத் தண்டவாளத்தின் மேலாக இந்த ரயில் பறந்து செல்லும். இது மணிக்கு 480 கிலோ மீட்டர்களுக்கும் அதிகமான வேகத் தில் பறக்கக் கூடியதாகும். இந்த ரயில் தடம் புரளும் வாய்ப் புகள் மிகவும் குறைவாகும். அதற்கேற்ற விதத்தில் இந்த ரயிலின் பெட்டிகள் வடிவமைக்கப்படும்.

சக்திமிக்க காந்த மண்டலத்தின் மீது இந்த ரயில் பறப்ப தால், உராய்வினால் ஏற்படும் விரிசல்களோ, சேதமோ ஏற் படுவதற்கு வாய்ப்பில்லை. சாதாரண ரயில்களுக்குத் தேவைப் படுவதைக் காட்டிலும் குறைவான மின்விசையே இதற்குத் தேவைப்படும். இந்த ரயிலுக்கு ''மாக்லெவ்'' (Maglev) என்று பெயர்.

'மாக்லெவ்' ரயிலின் மாதிரி அமைப்புகள் ஜப்பானிலும், மேற்கு ஜெர்மனியிலும் உருவாக்கப்பட்டுப் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. அமெரிக்காவில் ஆர்லண்டோ சர்வதேச விமான நிலையத்திலிருந்து 'டிஸ்னி வேர்ல்ட்' வரையில் 30 கிலோ மீட்டர் தூரத்திற்குப் ''பறக்கும் ரயில்'' திட்டமொன்றைச் செயல்படுத்தும் பணியை மேற்கொள்ள சில ஜப்பானிய நிறுவனங்கள் உத்தேசித்துள்ளன.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

**கே:** நாய்கடிக்குப் போடப்படும் 'ராபியூர் வாக்சின்' வேறு எந்த மிருகங்கள் கடித் தால் போடப்படுகிறது?

**ப:** பூனை, குரங்கு, ஒட்டகம், குதிரை ஆகிய மிருகங்கள் கடித்தால் 'ராபியூர் வாக்சின்' போடப்படும்.

**கே:** பதநீரில் உள்ள சத்துக்கள் எவை?

**ப:** வெடியுப்பு, புரதச்சத்து, சர்க் கரைச் சத்து, உலோகம்-சாம்பல் சுண் ணாம்புச் சத்து, பாஸ்பரஸ் சத்து, இரும்புச் சத்து, வைட்டமின் 'சி' சத்து, PH ஆகியவைகள் பதநீரில் உள்ளன.

**கே:** கோபர் நிக்கஸ் என்ற விஞ்ஞானி கண்டுபிடித்தது என்ன?

**ப:** எல்லாக் கோள்களும் சூரியனைச் சுற்றிச் சுழன்று வருகின்றன என்பதைக் கண்டுபிடித்துக் கூறினார்.

**கே:** பெட்ரோலியத்தைச் சுத்திகரிக்கப் பயன்படும் அமிலம் எது?

**ப:** கந்தக அமிலம் பெட்ரோலியத் தைச் சுத்திகரிக்கப் பயன்படுகிறது.

# கேள்வியும் பதிலும்...

**கே:** சைக்கிளைக் கண்டு பிடித்தவர் யார்? அவர் எந்நாட்டைச் சேர்ந்தவர்?

**ப:** மாக்மில்லன் என்பவர் சைக்கிளைக் கண்டுபிடித்தார். இவர் ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்.

**கே:** அதிசய மண்புழுவைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

**ப:** சாதாரண மண்புழுக்கள் ஓரங்குலம் முதல் ஐந்து அல்லது ஆறு அங்குலம்வரை இருக்கும். தென் அமெரிக்காவில் உள்ள ஓர் இடத்தில் 7 அடி நீளமும் ஓரங்குல கனமும் உள்ளவை.

**கே:** பல்நோய் எதனால் வருகிறது?

**ப:** சாப்பிட்டபின் வாய்ப்பாகத்தைச் சரியாகச் சுத்தம் செய்யாமல் இருப்பது; வைட்டமின்கள், தாது உப்புகள் ஆகிய வைகள் அடங்கிய உணவுகள் சாப்பிடா மல் இருப்பது; இனிப்பான பண்டங் களையோ, அல்லது பானங்களையோ அதிகம் சாப்பிடுவதால் பல்நோய் வரும்; சாக்லெட், ஐஸ்கிரீம் ஆகியவைகள் சாப் பிடுவதால் பல்நோய் வரும்; அதிக குளிர்ச்சியான பானம் அல்லது அதிக சூடான பானங்களை உட்கொள்வதால் பல்நோய் வரும்.

புலவர் க. அண்ணாமலை

## 'தூய மகன்' நேரு!

—கவிஞர் தமிழ்முடி



காந்தி யெனும் இமயத்தில்
கங்கைநதி நேரு!-உலகச்
சாந்தியெனும் கோயிலுக்குத்
தலைவாசல் நேரு!

காலமெனும் இலக்கியத்தில்
சரித்திரம்தான் நேரு!-'பஞ்ச
சீல'மெனும் நதி உதித்த
மாமலைதான் நேரு!

உறவென்னும் மரங்களிலே
ஆலமரம் நேரு!-நட்பு
வரவென்னும் கப்பலுக்குக்
கலங்கரைதான் நேரு!

சுதந்தரப் போர் வானுக்கு
ஏவுகணை நேரு!-ஆதிக்க
மதயானை வெறியடக்கும்
மாவுத்தன் நேரு!

குழந்தையெனும் கோட்டைக்கு
கொடிமரந்தான் நேரு!-நாடு
தொழுதுநின்று போற்றுகின்ற
தூயமகன் நேரு!

மாணவர் பக்கம்

## புத்தகங்கள்

ஒரு நல்ல புத்தகத்தைப்
படிக்கும்பொழுது, நீங்கள்
பலசாலிகளாகவும்,
அறிவாளிகளாகவும்,
தூயவர்களாகவும் இருப்பதாக
உணர்வீர்கள்.

-ஜானிஸ் சுத்ராப்

எண்ணற்ற புத்தகங்களைப்
படித்த ஒருவர், பல பெரிய
மனிதர்களின்
வாழ்க்கையைவிட மேலாக
வாழ்ந்து விட்டவராவார்.

-பாவ்லென்கோவ்

புத்தகங்கள் இல்லாத வீடு
இன்பமில்லாமல்
வெறிச்சோடிக் காணப்படும்.

-மாக்ஸிம் டாங்க்

புத்தகங்களுக்கு முன்னால்,
தீயன ஒவ்வொன்றும்
வெளிறியாகிப் போகும்.

-ஆண்ட்டோன் செக்கோவ்

ஒரு நல்ல புத்தகம் ஒரு
உண்மையான விருந்து ஆகும்.

-மாக்ஸிம் கார்க்கி

## குழந்தைகளைச் செம்மையாக வளர்க்க வேண்டும்!

"இந்த நாட்டிலுள்ள குழந்தைகள் அனைவரும், நல்ல முறையில் வளர்த்து வரப்படுகின்றார்களா என்று கவனித்துக் கொள்வதில் நம் அனைவருக்குமே பொறுப்பு உண்டு என்று நான் கருதுகிறேன். ஏனெனில் குழந்தைகளேஇந்த நாட்டின் செல்வம். இந்தச் செல்வத்தை நாம் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளுகிறோம் என்பதைப் பொறுத்துத்தான், இந்தியாவின் எதிர்காலம் அமைந்திருக்கிறது.

"உலக முழுவதிலும் உள்ள குழந்தைகளின் நினைவு எனக்கு வருகிறது. அவர்களிடம் பலவிதங்களில் வெளிப்படையான மாறுதலைக் கண்டேன். பேசும் மொழிகள் எத்தனை! உடுத்தியிருந்த உடைகள்தான் எத்தனை விதம்! ஆனால் அவர்கள் அழகு முகங்களிலே காணப்பட்ட உணர்ச்சி, அதனால் தோன்றும் கவர்ச்சி, உலக முழுவதிலும் ஒன்றாகவே இருப்பதைக் கண்டேன்.

'குழந்தைகளின் பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு அறிவு போதித்து அறிவாளிகளாக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். என்னைக் கேட்டால் அவர்கள் குழந்தைகளை அதனதன் போக்கில் வளரவிட்டால், குழந்தைகள் தாங்களாகவே புத்திசாலிகளாக — அறிவாளிகளாக — விளங்குவார்கள்.

'உலகத்தின் பல விஷயங்களைக் குழந்தைகள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியந்தான். ஆனால் அவர்கள் தாங்களாகவே அவற்றைப் புரிந்து கொள்ள நாம் வசதி வாய்ப்புகள் செய்து தர வேண்டும். நாமாக நமது மனப்போக்கின்படி உலக விஷயங்கள் பற்றிய ஞானத்தை அவர்கள் மூளையிலே திணிக்க முயற்சியெடுக்கக்கூடாது.

'குழந்தைகள் செம்மையாக வளருவதற்கு வகை செய்வதுதான் நமது நாட்டின் ஒவ்வொரு அரசியல் கட்சியின் இலட்சியமாகத் திகழவேண்டும். சொல்லப்போனால் இதுதான் முழு முதற் கொள்கையாக இருக்க வேண்டும்."

— பண்டித ஜவகர்லால் நேரு



வளமான வாழ்வுக்கு
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
அளிக்கும்
விஜய்
உரங்கள்
VIJAY
COMPLEX
N P K
VIJAY
COMPLEX
N P K
17-17-17
VIJAY
UREA-N46%
மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்
VIJAY
HTA 7343




## இராமநாதபுரம் மாவட்டத்தில்...

# வளர்ச்சிப் பணிகள்

**மா**ண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் 14.10.90 அன்று இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருகை புரிந்தார். அவர், பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டங்களைச் சேர்ந்த ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் அளவிலான வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு தலைமையேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பேசுகையில்,

''மாண்புமிகு முதல்வர் அவர்கள் நலிந்தோர்க்கான வீடுகளைக் கட்ட அனுமதியளித்து அவற்றைக் குறித்த காலத்தில் கட்டி முடிக்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளார். ஆகையால் அனைத்துக் கட்டடப்பணிகள், தொகுப்பு வீடுகள், புதிய பள்ளிக் கட்டடங்கள், பேரூராட்சி மற்றும் ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் அனைத்தையும் விரைவில் முழுமையாக முடிக்கவேண்டும் என்றும், சாலை மேம்பாட்டுப் பணிகள், அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்களுக்கான பராமரிப்புப் பணிகள் ஆகியவையும் முடிக்கப்படவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அவர் மேலும் பேசுகையில்-

''மாண்புமிகு முதல்வர் அவர்கள், மேற்கண்ட திட்டங்களில் தொகுப்பு வீடுகள் கட்ட மட்டும் ரூ.6,682.64 இலட்சங்களும், புதிய பள்ளிக் கட்டடங்களுக்காக ரூ.600 இலட்சமும், பேரூராட்சி ஊராட்சி அலுவலகக் கட்டடங்களுக்காக ரூ1,333.07 இலட்சமும், தார்ச்சாலை அமைக்க ரூ.2,332.65 இலட்சமும் கற்சாலைகளுக்காக ரூ.2,106.30 இலட்சமும், பள்ளிக் கட்டடங்கள் பழுது பார்ப்பதற்காக ரூ.1,300 இலட்சமும் ஒதுக்கியுள்ளார். இவைதவிர குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக ரூ.824.23 இலட்சமும் ஒதுக்கீடு செய்துள்ளார். எனவே, அலுவலர்கள், பொதுமக்களுக்குப் பயனளித்திடும் இச்சீரிய பணிகளைச் செவ்வனே செய்திட வேண்டும்'' என்றும் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி இயக்குநர் திரு. ஆர்.ஆறுமுகம் இ.ஆ.ப., பேரூராட்சி இயக்குநர் திரு. மாயாண்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.அர.செல்லமுத்து இ.ஆ.ப. ஆகியோர் கலந்து கொண்டார்கள்

பிறகு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

'கடந்த 43 ஆண்டுகளில் ஊராட்சி மன்றங்களுக்குச் சொந்தமாக 6,160 கட்டடங்கள் மட்டுமே உள்ளன. இந்த ஆண்டில் மட்டும் 2,000 புதிய கட்டடங்கள், 13 கோடியே 33 இலட்ச ரூபாய் செலவீட்டில் கட்டி முடிக்கப்படும். 88 பேரூராட்சிக் கட்டடங்கள் தலா ரூ.1 இலட்சம் செலவில் கட்டப்படும். இன்னும் இரண்டாண்டுகளில் சொந்தக் கட்டடங்கள் இல்லாத ஊராட்சி மன்றங்கள் இல்லை என்கிற நிலையைக் கலைஞர் அரசு உருவாக்கும்.

''மத்திய அரசு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்திற்காகத் தமிழ் நாட்டிற்கு ரூபாய் 172.24 கோடி ஒதுக்கி வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கிணையாக, மாண்புமிகு கலைஞர் அவர்கள் ''ஊரக அடிப்படை வசதிகளுக்கான சிறப்புத் திட்டம்'' ஒன்றினை அறிமுகப்படுத்தி நடப்பாண்டில் ரூபாய் 27 கோடி அரசு மானியமாக வழங்கியுள்ளார்கள்.''

சாயல்குடியில் ரூபாய் 6.17 இலட்சம் செலவில் கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையத்தை மாண்புமிகு அமைச்சர் திரு.கோ.சி. மணி அவர்கள் திறந்து வைத்தார். நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அர.செல்லமுத்து தலைமை வகித்தார். விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ்.காதர்பாட்சா என்ற வெள்ளைச்சாமி திரு. எ.எம்.ஹமீது இப்ராஹீம், ஒன்றியத் தலைவர்கள் திரு.சுப.தங்கவேலன், திரு. வ.சத்தியமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்

**மா. அசோகன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**இராமநாதபுரம் மாவட்டம்**

அட்டை
சொல்லும்
செய்தி



# தீரர் மருதிருவருக்குத் திருப்பத்தூரில் நினைவகம்


மருதுபாண்டியர் வாரிசு உரிமைத்
தேர்வுக்குழுத் தலைவர்
**எஸ்.எஸ். தென்னரசு** எம்.எல்.ஏ.


**இ**ந்திய விடுதலை வரலாற்றில் மருது பாண்டியர்களுக்குத் தனி இடம் உண்டு. வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வீர வரலாறு படைத்த மாவீரர்கள் அவர்கள்.

சிவகங்கைச் சீமையை ஆட்சி செய்துவந்த முத்துவடுகநாதர் ஆர்க்காட்டு நவாபுடன் போரிட்டு வீர மரணம் எய்தியதால் அவரது மனைவி ராணி வேலுநாச்சியார் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். நவாப்-ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியார் இருவரின் கூட்டுப் படையையும் எதிர்த்துப் போரிட்டார் ராணி வேலுநாச்சியார். நாச்சியாருக்கு உறுதுணையாக இருந்து, களத்திலே போரிட்டார்கள் தளபதிகளாகிய மருது சகோதரர்கள். வேலு நாச்சியாரும் களத்திலே வீர மரணம் எய்தியதால் அவரது பிரதிநிதிகளாக இருந்து சிவகங்கைச் சீமையை ஆளும் பொறுப்பை மருது பாண்டியர்கள் மேற்கொண்டார்கள்.

பொறுப்பாளர்கள் மாறிவிட்டார்கள் என்பதால் போர் மேகம் மாறிவிடவில்லை. ஆதிக்கம் செலுத்திய ஆங்கிலக் கம்பெனியாருடன் மருதிருவர் கடும்போர் புரிய நேர்ந்தது. வெள்ளை ஏகாதிபத்தியத்தை அவர்கள் அஞ்சி நடுங்க வைத்தனர் என்றாலும் இறுதியில் தோல்வியைத் தழுவ வேண்டிய சூழலுக்கு ஆளானார்கள்.

மாவீரர்களை-மானங்காத்த மறவர்குல மாணிக்கங்களை வெள்ளை அதிகாரிகள் திருப்பத்தூரில் தூக்கிலிட்டனர். அவர்களைக் கொன்றுவிட்டால் இந்த நாட்டின் வீரத்தைக் கொன்றுவிடலாம் என மனப்பால் குடித்த வெள்ளையர்களை வெற்றி கொள்ள-இலட்சக்கணக்கான வீரர்கள் நாடெங்கிலும் உருவானார்கள். விடுதலை வேள்வியில் இறங்கினார்கள். களம் கண்டார்கள். கடமையை நிறைவேற்றினார்கள். நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்தார்கள். வெள்ளையர்களை அவர்களது இங்கிலாந்துச் சீமைக்கே திரும்பிச் செல்ல வைத்தார்கள்.

மாவீரர் மருது பாண்டியர்கள் நமது தமிழகத்து வீர மரபுக்குச் சான்றாகத் திகழ்பவர்கள் என்பதால் அவர்கள் தூக்கிலிடப்பட்ட திருப்பத்தூரில் அவர்களது திருவுருவச் சிலைகளோடு கூடிய நினைவு மண்டபம் எழுப்ப வேண்டும் என மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

மருது பாண்டியர்கள் தூக்கிலிடப்பட்ட இடம், திருப்பத்தூர் ஸ்வீடிஷ் மிஷின் மருத்துவமனை வளாகத்தில் உள்ளது. அவர்கள் தூக்கிலிடப்பட்ட அதே இடத்திலேயே நினைவகம் அமைப்பதுதான் மெத்தச் சரியானதாகவும், அந்த மாவீரர்களுக்குச் செய்கின்ற மரியாதையாகவும் இருக்கும் என முதல்வர் கலைஞர் அவர்கள் கருதுகிறார்கள். அந்த வட்டாரத்து மக்களும் இதைத்தான் விரும்புகிறார்கள்.

ஏறக்குறைய ரூ.25 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 39 அடி நீளமும் 26 அடி அகலமும்

கொண்ட நினைவு மண்டபம் எழுப்பு வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. நினைவு மண்டபம் அமையும் இடத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்கள் 30.10.'90 அன்று பார்வை யிட்டார். மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்கள், மருது பாண்டியருக்கு நினைவு மண்டபம் எழுப்பும் பணிகளை விரைவில் துவக்குவதில் ஆர்வம் காட்டி வரு கிறார்.

மருது ஆண்ட இடங்களில் ஒன்று காளையார் கோவில். அங்கு அவர் வாழ்ந்த அரண்மனை பாண்டியன் கோட்டை என்று இன்றும் வழங்கப்படுகிறது. பாஞ் சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் கோட்டை அண்மைக்காலத்தில் முதல்வர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டதுபோல - காளை யார் கோவிலில் மருது பாண்டியர் கோட்டை கட்டுவதற்குத் திட்டமிட்டு வருகிறார்.

காளையார் கோவில், கானப் பேர் எயில் என்று இலக்கியங்களில் வழங்கப்படுகிறது. இங்கே உள்ளே காளீஸ்வரர் கோவிலில் இரண்டு கோபுரங்கள் உள்ளன. இவற்றில் சிறிய கோபுரம் உள்ள பகுதியில் தான் மூலஸ்தானம் உள்ளது. பெரிய கோபுரம் உள்ள பகுதியில் மூலஸ்தானம் எதுவும் கிடையாது. இதுபற்றி கர்ண பரம்பரையாக ஒரு செய்தி சொல்லப்படுகிறது.

இந்தப் பெரிய கோபுரத்தை உருவாக்க வேலுநாச்சியாரின் கணவர் முத்து வடுக நாதத் தேவர் திட்ட மிட்டிருந்தார் என்றும், அதற்குள் அவர் வீர மரணம் எய்தி விட்டார் என்றும், மருது பாண்டியர் காலத்தில் தான் அந்தத் திட்டம் நிறைவேறியது என்றும் சொல்லப்படுகிறது. இந்த ராஜகோபுரத்தின் மேல் மாடத்தி லிருந்து பார்த்தால் மதுரை நகரம் நன்றாகத் தெரியும் என்றும் சொல லப்படுகிறது. அதுகுறித்து நாட்டுப் புறப் பாடல் ஒன்று வழங்கி வரு கிறது. அந்தப் பாடல் இதுதான்:

''சாந்துப் பொட்டு தளதளங்க
சந்தனப் பொட்டு கமகமங்க
மதுரை கோபுரம் தெரியச் செய்த
மருது வாரதைப் பாருங்கடி''


காளையார் கோயில்

மருது பாண்டியர் எம்மதமும் சம்மதமே என்ற உயர்ந்த நோக்கத் துடன் வாழ்ந்திருக்கிறார்கள். இந்து சமயத்தைச் சேர்ந்த அவர்கள், இந்து சமய ஆலயங்களை அமைத்ததுடன், மாதா கோவில்களையும், மசூதி களையும் உருவாக்கியுள்ளார்கள். மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத் தில் உள்ள திருவாச்சி மருது பாண்டியர்கள் செய்ததுதான்.

மக்கள் நெஞ்சம் கவர்ந்த மன்னர் களாக விளங்கிய மருது பாண்டியர் களின் உருவச் சிலைகள் காளை யார் கோவிலில் காளீஸ்வரர் ஆல

**பெரியமருது, வேட்டையில் பெருவிருப்பம் கொண்டவன். ஒரு சமயம் அப்படி அவன் வேட்டைக்குச் சென்றிருந்த போது புலியொன்று அவனை நோக்கிச் சீறிவந்தது; லாவகமாக அதன் வாலைப் பிடித்தான் பெரியமருது. புயல் வேகத்தில்-பொறிகலங்கும்படி அதை இருபதடி தூரம் இழுத்துச்சென்று, வாலோடு அதன் பின்னங்கால்களையும் சேர்த்து, மின்னல் வேகத்தில் தலைக்குமேலே தூக்கிச்சுழற்றித் தரையில் அடித்தான். மூங்கில் பிளப்பது போல அதன் வாயைப் பிளந்தான். அதன் கோரப் பற்களைப்பிடுங்கினான். அவற்றைக் கொண்டு வந்து தன் நண்பர்களிடமெல்லாம் காட்டி மகிழ்ந்தான்! உள்ளபடியே அவன் 'காட்டரசன்'தான்!.**

**இதை நாம் சொல்லவில்லை; ஆரம்ப காலத்தில் பெரிய மருதுவிடம் நட்போடு பழகி, நாளடைவில், நாடுபிடிக்கும் ஆசையால் அவன்மீது பகைகொண்டாடிய வெல்ஸ் துரையே வியந்து பாராட்டி எழுதியிருக்கிறார்!**

**சிவகங்கைச் சீமையைச் சுமார் இருபத்தோராண்டுக் காலம் ஆட்சி புரிந்த பெரிய மருதுவும் சின்ன மருதுவும் 1801 அக்டோபரில், திருப்பத்தூரில் ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டனர்.**



யத்திலும், குன்றக்குடி மலை மீதும், திருப்பத்தூர் திருத்தளிநாதர் ஆலயத்திலும் இடம் பெற்றுள்ளன.

1989 ஜனவரியில் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் முதல்வர் கலைஞர் அவர்கள் மருது பாண்டியர் வாரிசு உரிமைத் தேர்வுக் குழுவை உருவாக்கினார். திரு. எஸ்.எஸ்.தென்னரசு, எம்.எல்.ஏ., தலைவராகவும், திரு. தா.கிருஷ்ணன், எம்.பி., திரு. மனோகரன், எம்.எல்.ஏ., பேராசிரியர் பாலசுப்பிரமணியம், மலைச்சாமி சேர்வை ஆகியோர் உறுப்பினராகவும் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

மருதிருவரின் வழித்தோன்றல்கள் குறித்து இந்தக் குழு தனது ஆய்வைத் தொடங்கியது. ஏறக்குறைய 2000-க்கு மேற்பட்டவர்கள் இந்தக் குழுவினரைச் சந்தித்துத் தங்களது வாரிசுரிமை குறித்துத் தகவல் தெரிவித்தனர். இவர்களில் பலர் ஆவணங்களுடன் வந்து பேட்டி அளித்தனர். ஒரு சிலர் அக்காலத்து - ஆயுதங்களுடன் வந்து தகவல் தந்தனர் என்பது குறிப்பிடத்தக்க செய்தி. இவர்களில் 90 சதவிகிதத்தினர் தங்களைப் பெரிய மருதுவின் வழித்தோன்றல்கள் எனவும், 10 சதவிகிதத்தினர் தங்களைச் சின்ன மருதுவின் வழித்தோன்றல்கள் எனவும் தெரிவித்துள்ளனர்.

கடந்த 26.10.'90 அன்று அரண்மனை சிறுவயலில் மருது பாண்டியர் நினைவு நாள் தமிழக அரசின் சார்பில் கொண்டாடப் பட்டது. மருது பாண்டியர் வாரிசு உரிமைத் தேர்வுக் குழுத் தலைவர் திரு. எஸ்.எஸ்.தென்னரசு எம்.எல்.ஏ, திட்ட அலுவலர் திரு. கதிரேசன், கோட்ட வருவாய் அலுவலர் திரு. செல்லப்பன், கல்லல் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு.கருப்பையா ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர். பசும்பொன் தேவர் திருமகன் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. துரை. தாமரைச்செல்வம் அவர்கள் விழா ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

மருது பாண்டியர்கள் பயன் படுத்திய ஆயுதங்கள் இந்த விழா வின்போது காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன. அவை தேவகோட்டையைச் சேர்ந்த நகரத்தார் ஒருவர் வசம் உள்ளன என்று சொல்லப் படுகிறது. அந்த ஆயுதங்களை அவர் அரசிடம் சேர்ப்பிப்பதாக இருக்கிறார் என்றும் தெரிய வருகிறது.

மருதிருவருக்கு திருவுருவச்சிலை அமைக்கப்பட உள்ளது என்ற செய்தியை நாளேடுகளின் வாயிலாக அறிந்த சின்னாள பட்டியைச் சேர்ந்த ஓவியர் ஜெகன், தானாகவே முன்வந்து மருதிருவரின் ஓவியங்களை வரைந்து மருது பாண்டியர் வாரிசு உரிமைத் தேர்வுக் குழுத் தலைவர் திரு. எஸ்.எஸ்.தென்னரசு எம்.எல்.ஏ., அவர்களின் பார்வைக்கு அனுப்பியுள்ளார்.

ஓவியர் ஜெகன் அனுப்பிய இரு வகை ஓவியங்களில் ஒன்றுதான் இந்த இதழின் முகப்பை அணி செய்கிறது.

பேட்டி: தமிழ்ப்பித்தன்



சிவகங்கைச் சீமையை ஆண்டு வந்த முத்துவடுகநாதர் ஆட்சிக்குப் பின், அவர் மனைவி வேலு நாச்சியார் மருதிருவர் துணையோடு ஆட்சி செலுத்திவந்தார். அவர், 1800-இல் இறந்து போன பிறகு மருதுபாண்டியர்கள் ஆட்சிக்கு வந்தனர். பெரிய மருது சில காலம் ஆண்டபின், சின்ன மருதுவை அரசாளச் செய்துவிட்டுக் காடு-வேட்டை என்று போய்விடுகிறார் பெரியமருது.

சிறந்த ராஜதந்திரியான சின்னமருது, திறம்பட ஆட்சி செலுத்தலானார். வீரமும்-வள்ளல் தன்மையும் கொண்ட அவர் நாடாளும்போது நடந்ததோர் சம்பவம் குறிப்பிடத்தக்கது.

ஒரு புலவர், தன்மனைவியோடு காட்டு வழியாகச் சிவகங்கைச் சீமைக்கு வந்து கொண்டிருந்தார். வழிப்பறிக் கள்வர்கள் சூழ்ந்து கொண்டு, அந்தப் புலவரிடம் வேறேதும் இன்மையால், அவர் மனைவியாரின் தாலியை அறுத்துக் கொண்டு ஓடிவிட்டனர். இது பற்றி மன்னன் சின்ன மருதுவிடம் போய் முறையிட்டார், புலவர். நடந்தது அறிந்து வருந்தினார், அவன். ஆறுபவுனில் ஒரு தாலி செய்து வரச்செய்து - புலவரிடம் தந்து, அவர் மனைவி கழுத்தில் அணிவிக்கச் செய்து மகிழ்ந்தார்; பரிசு பல வழங்கிப் பாராட்டினார்.

இதற்காகச் சின்ன மருதுவைப் போற்றிப் புகழ்ந்த அந்தப் புலவர்- 'தாலிக்கு வேலி தமிழுக்கு உதவிய தார்மன்னனே' என்று பாப்புனைந்து பாராட்டி வாழ்த்தினார்!

( 11- ஆம் பக்கத் தொடர்ச்சி )

ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து 1990-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் நாள் வரை இத்திட்டத்தின் கீழ் 3,33,156 கருவுற்ற மகளிர் பயன் பெற்றுள்ளனர். இதுவரை ரூ.6.66 கோடி செலவிடப்பட்டுள்ளது.

அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டத்தின்கீழ் கடந்த 1989-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து 1990-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் நாள் வரையில் 952 தம்பதியினருக்கு ரூ.45.80 இலட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

ஏறத்தாழ 85 இலட்சம் சிறார் பயனடைந்து வருகின்ற ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் மேலும் சீரமைக்கப்பட்டு, இரு வாரங்களுக்கொரு முறை ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு முட்டை வழங்க வகை செய்யப்பட்டது. முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு தற்போது இத்திட்டத்தின் கீழ் சத்துருண்டை வழங்குவதால் 4.43 இலட்சம் சிறார் பயன் பெறுவர். சத்துணவுத் திட்டத்தின் செயல்பாட்டில் காணப்படுகின்ற குறைபாடுகளைக் களைந்து சிறந்த முறையில் நிர்வகித்து, மேற்பார்வையிட்டு பராமரிப்பதற்காகப் பல்வேறு துறைகளின் கட்டுப்பாட்டின்கீழ் வருகிற சத்துணவு மையங்கள் அனைத்தும் ஊரக வளர்ச்சித் துறைக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

இளம் சிறார்களின் படிப்பார்வத்தைப் பெருக்குவதற்கு சத்துணவுத் திட்டம் மாத்திரமின்றி, மாணவர்களுக்கு 8-வது வகுப்பு வரையில் இலவச பஸ் பாஸ் வழங்கப்படும் திட்டத்தை இந்த ஆண்டு அறிமுகப்படுத்தியிருக்கின்றோம். இதன்வாயிலாக பயன்பெறும் இளம் மாணவர்களின் எண்ணிக்கை 7,19,689 ஆகும்.

பொருளாதார ரீதியில் நலிவுற்ற மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு, சொந்தமாக வீடில்லாத ஏழைக் குடும்பங்களுக்கு அரசு வீட்டு மனைகளை ஒதுக்குகிறது. இவ்வாறு வீட்டுமனைகள் ஒதுக்கும்போது, ஆதி திராவிடருக்கும், பழங்குடியினருக்கும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மகளிர் நல மேம்பாட்டைக் கருத்தில்கொண்டு வீட்டுமனைகள், பொதுவாக மனைவி, குடும்பத்தலுள்ள பெண் உறுப்பினர்களின் பெயரிலேயே ஒதுக்கப்படுகின்றன. நடப்பாண்டில் 3.25 இலட்சம் வீட்டு மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1990 செப்டம்பர் வரையில் 1.44 இலட்சம் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. சாகுபடி நிலங்களும், நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட உபரி நிலங்களும்கூட ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

தமிழ்நாட்டில், 1989-90-ஆம் ஆண்டுக் காலத்தில், 500 நகரங்களில் வீடுகள் கட்டும் நோக்கத்துடன், ''ஒரு இலட்சம் வீடுகள் கட்டும் திட்டம்'' என்கிற புதிய திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, 20 மாவட்டங்களில் 101 நகரங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன; இதுவரை, நிலங்களை வாங்கியுள்ள 44 சங்கங்கள் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளன. முக்கியமாக, நிலத்தைப் பெறுவதிலும், அதற்குரிய மதிப்பை நிர்ணயிப்பதிலும் காலதாமதம் ஏற்பட்டதால், இத்திட்டப் பணி மெதுவாக நடந்தேறி வருகின்றது. இது குறித்து மாவட்ட ஆட்சியாளர்கள் விரைந்த நடவடிக்கை எடுத்து, அரசுக்குப் பணி முன்னேற்ற அறிக்கையை குறித்த காலத்திற்கொரு முறை அனுப்பவேண்டும்.

சிறப்பு ஊரக அடிப்படைப் பணித் திட்டத்தின் கீழ், 88 பேரூராட்சிக் கட்டடங்கள் உட்பட 2,000 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் மற்றும் 689 புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கும், 3,905 கி.மீ. தொலைவிற்குச் சாலை அமைப்பதற்கும் இலக்கிடப்பட்டுள்ளது; 1990 செப்டம்பர் 30-ஆம் நாள் வரை, 88 ஊராட்சி அலுவலகக் கட்டடங்களும், 19 பள்ளிக் கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன. 383 கி.மீ. தொலைவிற்கு சாலை அமைக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் நலனுக்கென கடந்த ஆண்டு 42,000 இலவச காங்கிரீட் வீடுகள் கட்டித் தரப்பட்டன. இந்த ஆண்டு 47,000 இலவச காங்கிரீட் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மீனவர்களுக்கான இலவச வீட்டு வசதித் திட்டம் என்கிற சிறப்புத் திட்டம் ஒன்றும் 8 கடலோர மாவட்டங்களில் செயலாக்கப்பட்டு வருகின்றது.

> **வேலைவாய்ப்புகளில் 30 சதவிகித இட ஒதுக்கீடு, பெண்களுக்குச் சம சொத்துரிமை அளித்தல் ஆகியவற்றுடன், மகளிர் மேம்பாட்டிற்கான பல்வேறு திட்டங்களின் செயல்பாட்டில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.**

வறுமையை அகற்றி வேலை வாய்ப்பு அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ள ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நலிந்தோர் நல்வாழ்வுத் திட்டங்கள் அனைத்தும் சரிவர செயலாக்கப்படுகின்றனவா என்று மாவட்ட ஆட்சியர்கள் அனைவரும் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்த வேண்டும். மேலும், ஒதுக்கப்பட்ட நிதி செலவிடப்படுகின்றதா என்று கவனிப்பது மட்டுமின்றி, இத்திட்டங்கள் யாருக்காக உருவாக்கப்பட்டதோ அவர்கள் இத்திட்டத்தினால் உண்மையில் பயனடைகின்றார்களா என்றும் கவனிக்க வேண்டும்.

குடும்ப நலத்தின் முக்கியத்துவம் அனைவரும் அறிந்த ஒன்று. மத்திய அரசு தமிழ்நாட்டிற்கென்று நிர்ணயித்த மக்கள் தொகைக் கட்டுப்பாடு பற்றிய இலக்குகளை 1991-92ஆம் ஆண்டிற்குள் அடைய தனி முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த இலக்கு எய்தப்படாவிட்டால், முன்னேற்றப் பணிகள் அனைத்தும் பயனற்றதாகிவிடும்.

குடிநீர் வழங்கும் பணிக்கு அரசு முன்னுரிமை அளிக்கின்றது. தெலுங்கு-கங்கைத் திட்டத்தின்கீழ் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் அனுமதிக்கப்பட்ட, 2,000 குழாய்க் கிணறுகளில் 1,914 குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

வறட்சிப்பாங்கான பகுதிகளுக்கும், குறிப்பாக

**பொருளாதார ரீதியில் நலிவுற்ற மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு சொந்தமாக வீடில்லாத ஏழைக் குடும்பங்களுக்கு அரசு வீட்டுமனைகளை ஒதுக்குகிறது.**

1991ஆம் ஆண்டின் கோடை மாதங்களில் அனைத்துப் பகுதிகளுக்கும் போதிய குடிதண்ணீர் வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும். கூடுதல் நிதி ஆதாரம் திரட்டுவதைப் பொறுத்தமட்டில் சிறு சேமிப்புகள் பெரும் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், சிறுசேமிப்புகள் மொத்த மூலதனச் செலவில் 25 சதவீதத்தை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பாண்டில் ரூபாய் 450 கோடி சிறுசேமிப்பின் வழி நிதி திரட்ட வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் வரை ரூ. 229.66 (மொத்தம்) ரூ 69.99 (நிகரம்) கோடியாகத் திரட்டப்பட்டுள்ளது.

சிறுசேமிப்புத் திட்டத்தை மக்களை ஈர்க்கும் திட்டமாக ஆக்குவதற்கு பல்வேறு ஊக்க உதவித் தொகைகள் வழங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் பணியாளர் அமைப்பு வலுப்படுத்தப்பட்டு உள்ளது. நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை எய்துவதற்கும், அதில் தொய்வு ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்கும், மாவட்ட ஆட்சியாளர்களும், பிற அதிகாரிகளும் தனி முயற்சிகள் எடுத்துக்கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**மாணவர்களுக்கு 8-வது வகுப்பு வரையில் இலவச பஸ் பாஸ் வழங்கப்படும் திட்டத்தை இந்த ஆண்டு அறிமுகப்படுத்தியிருக்கின்றோம். இதன் வாயிலாகப் பயன்பெறும் இளம் மாணவர்களின் எண்ணிக்கை 7,19,689 ஆகும்.**

தமிழகத்தின் மேம்பாட்டிற்காகவும், நலனுக்காகவும் இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இருப்பினும் இது எளிதான பணியல்ல. திட்டத்தின் பயன்கள் உண்மையிலேயே உரிய மக்களுக்குச் சென்றடையும் வகையில் அனைத்துத் திட்டங்களையும் சிறந்த முறையில் செயல்படுத்துமாறு பார்த்துக் கொள்வதே நமது பெருமுயற்சியாக இருக்கவேண்டும்.

குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்.

என்ற குறளை மறவாமல் ஆட்சிச் சக்கரத்தின் அச்சாணியாக இருப்போர் அனைவரும் மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரையில் மாசுமரு இல்லாதவகையில் செயல்படின் நாடும் சமுதாயமும் செம்மையுறும். சீர்பெறும். நமக்கு நாமே வகுத்துக் கொள்ளும் தூய்மையான இலட்சியப் பயணத்தில் வரையறுத்துக் கொண்டுள்ள இலக்குகளை எய்தவும், இது குறித்து கடந்த ஒன்றரை ஆண்களாக நாம் எய்திவரும் சாதனைகளில் தொய்வின்றித் தொடர்ந்து நிறைவேற்றவும் வேண்டும்.

நமது பணியின் பயன்கள் நாட்டு மக்களுக்கு விரைந்து கிடைத்திட செயல்படுங்கள். கண் துஞ்சாது நீங்கள் ஆற்றும் கடமையினால் எடுத்த காரியம் யாவினும் வெற்றி காண்போம்!

நன்றி, வணக்கம்.

●●

**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தின் கீழ், 1989ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல், 1990-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் நாள் வரை இந்தத் திருமண உதவி, தலா ஐயாயிர ரூபாய் பெற்று பயனடைந்த ஏழைப் பெண்களின் எண்ணிக்கை 29,925 ஆகும். இதுவரை ரூ.14.96 கோடி செலவிடப்பட்டுள்ளது.**

●●

**டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ், 1989-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து, 1990-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் நாள் வரை இத்திட்டத்தின் கீழ் 3,33,156 கருவுற்ற மகளிர் பயன் பெற்றுள்ளனர். இதுவரை ரூ.6.66 கோடி செலவிடப்பட்டுள்ளது.**

●●



மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டினைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் உயர் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர். (9.11.90)




"குறைந்த வருவாயாக இருந்தாலும் நாள்தோறும் சிறிது சிறிதாகச் சேர்த்து வைத்தால் செல்வம் வளர்ந்து பெருகும். விண்மீன்கள் ஒன்று கூடிநின்றால் இருள்நீங்கி உலகம் ஒளிபெறும். மழைத்துளிகளும் இடைவிடாது ஒன்று சேர்ந்தால் கடலைப் போல் மிகுந்த நீரைத்தரும். அதுபோல ஒருவனுக்கு வருவாய் குறைவாக இருந்தாலும் நாள்தோறும் சோர்வில்லாமல் சிறிதளவு சேர்த்தால் செல்வம் பெருகும்."

- ★ தேசிய சேமிப்புப் பத்திரம் 8 ஆம் வெளியீடு
- ★ தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு 1987
- ★ பொது சேமநலநிதி
- ★ மாதாந்திர வருமானத் திட்டம்
- ★ விவசாயிகள் சேமிப்புப் பத்திரம்
  இந்திரா சேமிப்புப் பத்திரம்
- ★ அஞ்சலகக் குறித்தகால வெளியீடு
  அஞ்சலகத் தொடர்வைப்புத்திட்டம்/
  வளரும் மாத சேமிப்புத் திட்டம்

## மாவட்டச் சிறுசேமிப்பு பரிசுக்கூப்பன் திட்டம் - 90

ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு பரிசுக்கூப்பன் (அரசு ஆணை எண்: 683, நிதித்துறை நாள் 19.6.90)

- 1.6.90 முதல் 31.12.90 வரை முதலீடு செய்து மாருதி கார் முதல் 262 பரிசுகளில் ஒன்றை வென்றிடுங்கள்.
- ஒவ்வொரு ஒரு லட்சம் பரிசுக்கூப்பன்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியாளர் முன்னிலையில் குலுக்கல் நடைபெறும்
- சென்னை நகரில் ஒவ்வொரு லட்சம் பரிசுக்கூப்பன்களுக்குச் சிறுசேமிப்பு இயக்குநர் முன்னிலையில் குலுக்கல் நடைபெறும்.

**சம்பளப்பட்டியல் திட்டத்தில் ரூ. 100/- சேமிப்பீர். 5 மாதம் சேமித்தபின் ஒரு பரிசுக்கூப்பன் பெற்றிடலாம். ரூ. 200/- சேமிப்பு. இரண்டு பரிசுக்கூப்பன்கள்! - வருமான வரிவிலக்குடன்!**

- ● மத்திய அரசுக்கு இணையாகச் சிறுசேமிப்பு முகவர்களுக்கு ஊக்கத் தொகை
- ● ரூ. 1000/-ம் அதற்கு மேலும் முதலீடு செய்யும் முதலீடுதாரர்களுக்கு ★ இக்குறியிட்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் 1% ஊக்கத் தொகை

DIPR/MS/90/ARIES

| | | |
|---|---|---|
| சேமிப்புப் பத்திரம் அனைத்து அஞ்சல் நிலையங்களிலும் கிடைக்கும். | பரிசுக்கூப்பன்கள் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் கிடைக்கும். | இயக்குநர் **சிறுசேமிப்புத்துறை,** 143, அண்ணா சாலை, சென்னை-600 002. தொலைபேசி: 840223/846209 |

# ஓய்வில்லாமல் மக்களுக்காக
# உழைக்க வேண்டும்
## முதல்வர் கலைஞர்

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, அதிகாரிகளே, நண்பர்களே,

நேற்றும் இன்றும் நம்முடைய மாநிலத்தில் நடைபெற வேண்டிய பல்வேறு பணிகள் குறித்தும் அவ்வப்போது உருவாகின்ற பிரச்சினைகளைஎப்படிச் சந்திப்பது என்பது குறித்தும் - வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும் - நலிந்த பிரிவு மக்களுடைய நல்வாழ்வுத் திட்டங்களை எப்படி நிறைவேற்றுவது என்பது குறித்தும் - மிக முக்கியமாக இன்றைய தினம் உணவுப் பிரச்சினை, விநியோகப் பிரச்சினை ஆகியவை குறித்தும் நீங்கள் அனைவரும் அரிய - ஆழ்ந்த கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறீர்கள்.

இந்த அரசு மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள ஏறத்தாழ இந்த இரண்டாண்டு காலத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், பல்வேறு துறைகளின் தலைமை அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள் அனைவருடைய ஒத்துழைப்போடு தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு, அமைதி, வேறு எந்த மாநிலங்களிலும் இல்லாத அளவிற்குக் காப்பாற்றப்படுவது மாத்திரமல்ல - வளர்ச்சித் திட்டங்களும், மற்ற மாநில அரசுகள் பார்த்து வியப்புறுகின்ற அளவிற்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவைகள் நாம் கருதியபடி தங்குதடையில்லாமல் நடைபெறுவதற்கு மத்தியிலே நேற்றுவரையிலே ஒரு ஆட்சி இருந்தது. ஆனால், இன்றையதினம் அங்கு தொடங்கியுள்ள புதிய ஆட்சி நம்முடைய மாநிலப் பிரச்சினைகளை எப்படி அணுகும் என்று இப்போதே அறுதியிட்டுச் சொல்ல இயலாது. இருந்தாலும் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டிய கட்டத்தில் இந்த மாநிலத்தின் முன்னேற்றத்தை மனதிலே கொண்டு, ஆட்சிச் சக்கரத்தைச் சுழற்ற வேண்டிய ஒரு சூழ்நிலையில் இந்த அரசு மாநிலத்தின் உரிமைகளுக்காக - நன்மைகளுக்காகச் சிந்தித்து செயல்பட்டு வருகின்றது. இப்படிச் சிந்தித்து செயல்படுகின்ற ஒரு அரசுக்குத் துணைவர்களாக - அந்த அரசை மேலும் விறுவிறுப்போடு இயக்குகின்றவர்களாக எதிரே அமர்ந்திருக்கின்ற நீங்களும், என்னோடு அமர்ந்திருக்கின்றவர்களும்தான் முக்கிய காரண கர்த்தாக்களாக இருக்க முடியும் என்பதை மறுப்பதற்கில்லை.

எனவே, ஏதோ இரண்டு நாள் சம்பிரதாயப் பூர்வமாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் - காவல் துறையினர் மாநாடு ஒன்று நடைபெற்றது; ஒரு சடங்கு போல, அதிலே கலந்து கொள்ள வேண்டியிருந்தது, ஒரு இயந்திரம் போல, கருத்துக்களைச் சொல்ல வேண்டியிருந்தது என்றில்லாமல் அனைவருமே உணர்ச்சிப் பூர்வமாக இந்த மாநிலத்தினுடைய மக்களின் எதிர்காலத்தை, அவர்களுடைய நல்வாழ்வை இதயத்திலே நிறுத்தி அரிய யோசனைகளை வழங்கியிருக்கிறீர்கள்.

நான் உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன். இங்கே பேசப்பட்டவைகள் காற்றோடு கலக்கின்ற கருத்துக்களாக இல்லாமல் அவை உங்களுடைய மூச்சோடு, உணர்வோடு கலந்து நம்முடைய மாநிலத்தில் வாழ்கின்ற தமிழ் மக்களின் எதிர்கால சீரிய முன்னேற்றத்திற்கு வழி வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களாக இருந்தாலும் சரி; காவல் துறையினரிடத்திலும் சரி, ஏனைய அதிகாரிகளிடத்திலும் சரி, முன்பு ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோதும் இந்த ஆட்சிப் பொறுப்பை மீண்டும் இப்போது ஏற்றுக் கொண்ட இந்த இரண்டு ஆண்டுக் காலத்திலும் சரி, உங்களிடத்திலே ஒரு தோழனாக - ஒரு சகோதரனாகத் தான் நான் பழகிக் கொண்டிருக்கிறேன் என்பதை நீங்கள் யாரும் அறியாதவர்கள் அல்ல. எனவே, ஒரு முதலமைச்சர்-அதிகாரிகள் என்கின்ற அளவிலே நம்முடைய அணுகுமுறை இல்லாமல் நீங்களும் நானும் இந்த அமைச்சரவையைச் சேர்ந்த அனைவரும் நம்மால் இயன்ற அளவிற்கு அயர்வில்லாமல் ஓய்வில்லாமல் மக்களுக்காக உழைக்க வேண்டும் என்ற உறுதியைப்பெறவேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக் கொண்டு, நீண்ட நேரம் நேற்றும் இன்றும் உங்களிடத்திலே பல கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கின்ற வாய்ப்பு எனக்கும் மற்றவர்களுக்கும் கிட்டியிருக்கின்ற காரணத்தால் இதற்கு மேலும் எதுவும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

இந்த அரசு, பொறுப்பேற்கும்போது சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம் என்கின்ற அந்த உறுதிமொழியோடு பொறுப்பேற்றுக் கொண்ட அரசாகும். எனவே, அந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கு நீங்கள் அனைவரும் உளத்தூய்மையோடு எங்களோடு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

**மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய முடிவுரை.**
***(10.11.90)***

# தமிழ்நாடு மின்சார வாரியம்
# மேட்டூர் அனல் மின் நிலையம்
# மேட்டூர் அணை-636 406

## ஒப்பந்த விவரங்கள்

1.0) கீழ் கையொப்பமிட்டவரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்காணும் வேலைக்கு வரவேற்கப் படுகின்றன.

| வரிசை எண் | வேலையின் பெயர் | ஒப்பந்த எண். | ஒப்பந்த பிரதியின் விலை | வைப்புத் தொகை | ஒப்பந்தப்புள்ளிகள் பெற கடைசி தேதியும் நேரமும் | ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதியும் நேரமும் | ஒப்பந்த உத்தேச மதிப்புத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1. | கொதிகலன் 1 மற்றும் அதை சார்ந்த உபகரணங்களைச் சோதித்துப் பழுது பார்த்தல். | SE/MTPS/Mechanical-I 127/90-91 | தமிழ்நாட்டிற்குள் ரூ.200/- வெளிமாநிலங்களுக்கு ரூ.220/- | ரூ.4,800/- | 29.11.90 வியாழக்கிழமை பகல் 12.00 மணி வரை | 29.11.90 வியாழக்கிழமை மாலை 3.30 மணி | ரூ.4,80,000/- |

2.0) ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் மேலே குறிப்பிட்ட தொகையினை பதிவு அஞ்சல் மூலமாகவோ அல்லது பணமாகவோ ஒப்பந்த எண்ணை குறிப்பிட்டு உதவி கணக்கு அதிகாரி/பணப் பிரிவு (Assistant Accounts Officer/Cash/Mettur Thermal Power Station/Mettur Dam) மேட்டூர் அனல் மின் நிலையம், மேட்டூர் அணை-6 அவர்களுக்கு செலுத்தி பெறப்பட்ட வாரிய இரசீதை அல்லது பண அஞ்சல் இரசீதை இணைத்து கீழே குறிப்பிட்டுள்ளவரின் அலுவலகத்திற்கு விண்ணப்பித்துக் கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். தாமதமாக பெறப்படும் ஒப்பந்தங்களும், வைப்புத் தொகையின்றி பெறப்படும் ஒப்பந்தங்களும், நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் செயலாண்மை உதவியாளர் Executive Assistant to Superintending Engineer/ Mech.I/MTPS அவர்களால் பெறப்படும். மேற்பார்வைப் பொறியாளர்/இயந்திரவியல்-1 அலுவலகத்தில் திறக்கப்படும்.

3.0) ஒப்பந்த பிரதிகள் மாற்றத்தக்கதல்ல, ஒப்பந்த பிரதிகள் 5.11.90 முதல் விற்பனைக்கு கிடைக்கும்.

4.0) ஒப்பந்த பிரதிகள் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பதிவு செய்துகொண்டு அனல் மின் நிலைய இயந்திரப் பிரிவு பராமரிப்பு வேலையின் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு மட்டுமே விற்கப்படும்.

5.0) ஒப்பந்தப் பிரதிகளை அஞ்சல் மூலம் பெற விரும்புவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூபாய் இருபது சேர்த்து அனுப்ப வேண்டும்.

6.0) அஞ்சல் மூலம் அனுப்பும் ஒப்பந்தப் பிரதிகள் காணாமல் போனாலோ அல்லது காலதாமதமானாலோ அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

7.0) குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்தவொரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்வதற்கு மின்சார வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காமல் எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்க இவ்வலுவலகத்திற்கு முழு உரிமை உண்டு. விற்பனைக்குள்ளாகும் ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்தவொரு நிபந்தனையும் தேவை எனக் கருதுகின்றபோது தளர்த்தவும் கைவிடவும் உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அல்லது இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள தகுதி பெற்ற மின்சார வாரிய அலுவலருக்கு உண்டு.

8.0) ஒப்பந்த புள்ளிகள் விற்பனை ஒப்பந்தம் பெற்றுக் கொள்ள நிர்ணயிக்கப்பட்ட இறுதி நாளின் முதல் நாள் மாலை 3.30 மணிக்கு நிறுத்தப்படும்.

மேற்பார்வை பொறியாளர்/
இயந்திரவியல்-1
மேட்டூர் அனல் மின் நிலையம்,
மேட்டூர் அணை-6

DIPR/308/SLM/90/MCS

## படமும் செய்தியும்









செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர்கள் மாநாடு, மாண்புமிகு செய்தி, தொழிலாளர் நல அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் தலைமையில் சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. (3.11.90)

# நீலகிரியில் நிவாரணப்பணிகள்

இயற்கையின் எழிலுக்குப் பெயர் பெற்றது நீலகிரி மாவட்டம். இயற்கையின் இன்னல்களுக்கு அடிக்கடி இலக்காவதும் நீலகிரி மாவட்டம். புயல், மழை, நிலச் சரிவு, பனி, குளிர் போன்ற இயற்கை உபாதைகளால் இம்மாவட்ட மக்கள் அடிக்கடி பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது!

நீலகிரி மாவட்டம் அக்டோபர் 25-ம் நாள் யாரும் எதிர்பாராத அளவுக்கு மழையினாலும், நிலச் சரிவினாலும் பெரிதும் பாதிக்கப் பட்டது.

பலத்த மழையின் காரணமாக, இம்மாவட்டத்தில் பல இடங்களில் நிலச்சரிவுகள் ஏற்பட்டன. பல கட்டடங்களும் வீடுகளும் இடிந்து விழுந்தன. பாலங்கள், சாலைகள், பழுதடைந்துள்ளன. 500-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இம்மழை யினால் பாதிக்கப்பட்டன. 44 பேர்கள் இதனால் உயிரிழந்தனர். 19 பேர்கள் காயமடைந்துள்ளனர். பல வீடுகள் இடிந்து தரைமட்ட மாயின. கட்டடங்கள் இடிந்து தரை மட்டமானதோடு மக்கள், பலரும் மண்ணோடு மண்ணாகப் புதைந்தனர்.

உதகை, குன்னூர், மஞ்சூர், கேத்தி போன்ற பகுதிகள் இக்கொடுமைக்கு ஆளானாலும், கல் நெஞ்சையும் உருக்கும் கொடூர நிகழ்ச்சிக்கு ஆளானது 'கெத்தை' என்ற கிராமம் ஆகும். இக்கிராமம் இரண்டு மலைப் பகுதிக்கும் இடையில் எழில் கொஞ்சும் பகுதியில் அமைந்துள்ளது. துள்ளி யோடும் மான்களும், பாய்ந்தோடும் அருவிகளும் இப்பகுதிக்கு வனப் பூட்டுபவை. மஞ்சூரிலிருந்து 16 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள இக்கிராமத்திற்கு, 45 கொண்டை ஊசி வளைவுகளில் வளைந்து வளைந்து செல்லும்போது ஓர் அலாதி இன்பம் உண்டாகும். இத்தகைய எழில்மிகு கிராமம் இயற்கையின் சீற்றத்தால் உருக்குலைந்து இருந்த இடம் தெரியாமல் அழிந்து விட்டது.

கெத்தையில் உள்ள மின் நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்கள் இவ்விபத்தால் பெரிதும் பாதிக்கப் பட்டனர். இக்கிராமத்தில் மட்டும் 35 பேர்கள் உயிரிழந்துள்ளனர். பலர் காயமுற்றனர். பலத்த மழை பெய்தது. வெள்ளம் பெருக்கெடுத்தது. பாறாங் கற்கள் உருண்டு வந்தன. பாலம் இடிந்தது. மரங்கள் விழுந்தன. வீடுகள் இடிந்தன. இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் அரைமணி நேரத்திற்குள் நடந்து முடிந்துவிட்டன.

தமிழ்நாட்டின் பல பகுதிகளில் மழையில்லாமல் ஏங்கிக் கொண்டிருந்த விவசாயிகளுக்கு நான்கைந்து





நாட்களாகப் பெய்த மழை மகிழ்ச்சியைத் தருவது ஒரு புறம் இருந்தாலும், அடுத்த கணமே உதகை சந்தித்த இக் கோர நிகழ்ச்சியை நினைக்கும் போது உள்ளமெல்லாம் உருகுகிறது. இக்கோர நிகழ்ச்சியைக் கேள்விப் பட்டதும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜி.எ. ராஜ்குமார் அவர்கள் மற்றும் அலுவலர்கள் விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடு பட்டனர். பல்வேறு துறையைச் சார்ந்தவர்களும் அல்லும் பகலும் அயராது அப்பகுதியில் முகாமிட்டு மீட்புப்பணிகளில் ஈடுபட்டனர். சில சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. அதன் பின்னும் சடலங்களைத் தேடும்பணிகள் தொடர்ந்தன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்குச் செய்தி தெரிவிக்கப் பட்டதும் போர்க்கால நடவடிக்கை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட பகுதி களில் நிவாரணப்பணிகள் செய்ய உத்தரவிட்டார். அவர் 5 கோடி ரூபாய் நிவாரண உதவித் தொகை யாக வழங்கவும் ஆணையிட்டார். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். துரைமுருகன் அவர்களையும், மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்களையும் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பகுதி களுக்கு அனுப்பி வைத்தார்.

மாண்புமிகு அமைச்சர் பெரு மக்கள் உதகைக்கு வந்து சேர்ந்தனர். இறந்தவர்களின் சடலங்களைக் கண்டு கண்ணீர் வடித்தனர். இறந்தவர் களின் குடும்பங்களுக்கு ஆறுதல் கூறி னர். நிவாரணப்பணிகள் துரிதமாக நடைபெற அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பித்தனர். இறந்த அரசு ஊழி யர்கள் குடும்பத்திற்கு ரூ.40,000/- வழங்கப்படும் என்று கூறினர். ஈமச்சடங்கிற்குரூ.500 - வழங்கப்பட் டது. மேலும், இத்துயரச்சம்பவத்தில் இறந்தவர்களின் வாரிசுதாரர்கள் தகுதியின் அடிப்படையில் அரசில் வேலைக்கு அமர்த்தப் படுவர் என் றும்,வீடு இழந்தவர்களுக்குப்புதியதாக குடியிருப்புக்கள் கட்டித் தரப்படும் என்றும் சாலைகள் அதிகமாகப் பழுதடைந்துள்ளதால் இதில் தனிக் கவனம் செலுத்தப்படும்-என்றும் கூறினார்கள்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பாதிக்கப்பட்ட குடும்பங் களுக்கு இலவச வேட்டி-சேலை வழங்கினார்கள். ஒவ்வொரு குடும்பத் திற்கும் 5 கிலோ அரிசியும் 5 லிட்டர் மண்ணெண்ணெயும் வழங்கப்பட்டன.

இக்கோர நிகழ்ச்சியைக் காண மாவட்டத்தின் பல்வேறு பகுதி களிலிருந்தும் மக்கள் வந்து உருகிக் கண்ணீர் வடித்த வண்ணம் உள்ளனர்.

இக்கோர நிகழ்ச்சியினால் நீலகிரி மாவட்டமே சோகக் கடலில் ஆழ்ந்துள்ளது.

மூ.நா. கிருஷ்ணசாமி,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)
நீலகிரி மாவட்டம், உதகமண்டலம்.

தமிழரசு

சந்தா விவரம்

தமிழ்
ஓராண்டு = ரூ.24
அரையாண்டு = ரூ.12

ஆங்கிலம்
ஓராண்டு = ரூ. 12
(அரையாண்டு சந்தா கிடையாது)

விவரங்களுக்கு
உதவி இயக்குநர்
(விற்பனை மற்றும் விநியோகம்)
தமிழரசு, அரசினர் தோட்டம், சென்னை-600 002.

# தமிழ்நாடு மின்சார வாரியம்
# மேட்டூர் அனல் மின் நிலையம்
# மேட்டூர் அணை-636 406

## ஒப்பந்த விவரங்கள்

0.1) கீழ் கையொப்பமிட்டவரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்காணும் வேலைக்கு வரவேற்கப் படுகின்தன.

| வரிசை எண் | வேலையின் பெயர் | ஒப்பந்த எண். | ஒப்பந்த பிரதியின் விலை | வைப்புத் தொகை | ஒப்பந்தப்புள்ளிகள் பெற கடைசி தேதியும் நேரமும் | ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதியும் நேரமும் | ஒப்பந்த உத்தேச மதிப்பு தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1. | கரி அரவை இயந்திரம் மற்றும் அதைச் சார்ந்த உபகரணங்களைச் சோதித்துப் பழுது பார்த்தல் – முதல் பிரிவு. | மே.பா.பொ/இ-1/131/ மே.அ.மி.நி. | தமிழ்நாட்டிற்குள் ரூ.200/- வெளிமாநிலங்களுக்கு ரூ.220/- | ரூ.4,000/- | 10.12.90 திங்கட்கிழமை பகல் 12.00 மணி வரை | 10.12.90 திங்கட்கிழமை மாலை 3.30 மணி | ரூ.4,00,000/- |

0.2) ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் மேலே குறிப்பிட்ட தொகையினை பதிவு அஞ்சல் மூலமாகவோ அல்லது பணமாகவோ ஒப்பந்த எண்ணை குறிப்பிட்டு உதவி கணக்கு அதிகாரி/பணப் பிரிவு (Assistant Accounts Officer/ Cash/Mettur Thermal Power Station/Mettur Dam) மேட்டூர் அனல் மின் நிலையம், மேட்டூர் அணை-6 அவர்களுக்கு செலுத்தி பெறப்பட்ட வாரிய இரசீதை அல்லது பண அஞ்சல் இரசீதை இணைத்து கீழே குறிப்பிட்டுள்ளவரின் அலுவலகத்திற்கு விண்ணப்பித்துக் கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். தாமதமாக பெறப்படும் ஒப்பந்தங்களும், வைப்புத் தொகையின்றி பெறப்படும் ஒப்பந்தங்களும், நிராகரிக்கப்படும், ஒப்பந்தங்கள் செயலாண்மை தவியாளர் Executive Assistant to Superintending Engineer/ Mechl.I/MTPS அவர்களால் பெறப்படும். மேற்பார்வைப் பொறியாளர்/இயந்திரவியல்-1 அலுவலகத்தில் திறக்கப்படும்.

0.3) ஒப்பந்த பிரதிகள் மாற்றத்தக்கதல்ல, ஒப்பந்த பிரதிகள் 19.11.90 முதல் விற்பனைக்கு கிடைக்கும்.

0.4) ஒப்பந்த பிரதிகள் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பதிவு செய்துகொண்டு அனல் மின் நிலைய இயந்திரப் பிரிவு பராமரிப்பு வேலையின் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு மட்டுமே விற்கப்படும்.

0.5) ஒப்பந்தப் பிரதிகளை அஞ்சல் மூலம் பெற விரும்புவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூபாய் இருபது சேர்த்து அனுப்ப வேண்டும்.

0.6) அஞ்சல் மூலம் அனுப்பும் ஒப்பந்தப் பிரதிகள் காணாமல் போனாலோ அல்லது காலதாமதமானாலோ அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

0.7) குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்தவொரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்வதற்கு மின்சார வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காமல் எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்க இவ்வலுவலகத்திற்கு முழு உரிமை உண்டு. விற்பனைக்குள்ளாகும் ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்தவொரு நிபந்தனையும் தேவை எனக் கருதுகின்றபோது தளர்த்தவும் கைவிடவும் உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அல்லது இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள தகுதி பெற்ற மின்சார வாரிய அலுவலருக்கு உண்டு.

0.8) ஒப்பந்த புள்ளிகள் விற்பனை ஒப்பந்தம் பெற்றுக் கொள்ள நிர்ணயிக்கப்பட்ட இறுதி நாளின் முதல் நாள் மாலை 3.30 மணிக்கு நிறுத்தப்படும்.

மேற்பார்வை பொறியாளர்/
இயந்திரவியல்-1
மேட்டூர் அனல் மின் நிலையம்,
மேட்டூர் அணை-6

DIPR/326/SLM/90/MCS

# தருமபுரியில்

# புதிய தொழில்கள்

**கா. அலாவுதீன் இ.ஆ.ப.**
மாவட்ட ஆட்சித் தலைவர்
தருமபுரி மாவட்டம்

தருமபுரி போன்ற அடிக்கடி வறட்சிக்கு உள்ளாகும் மாவட்டத்தில் விவசாயத்தைப் பெருக்கி வேலை வாய்ப்பை அதிகரிப்பதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. இந்நிலையில் புதிய தொழிற்சாலைகள் உருவானால் தான் வேலை வாய்ப்பு பெருகும். நம் வறுமையும் நீங்கும். வளர்ச்சி குன்றிய நம் மாவட்டத்தில் வேலை வாய்ப்பைப் பெருக்கும் நோக்கத்தோடு தமிழக அரசு ஓசூரில் சிப்காட்டின் மூலமாகப் பெரிய தொழிற்பேட்டையை உருவாக்கி, அதில் பெரிய தொழிற்சாலைகள் அமைய உதவி செய்துள்ளது. அதனைத் தொடர்ந்து 2-வது கட்டமாக, மின்னணுவியல் தொழிற்பேட்டையும் (Electronics Complex) அமைய இருக்கிறது. இதன் மூலம் மேலும் ஆயிரக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இத்திட்டத்தை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 25.9.90 அன்று துவக்கி வைத்தார். தருமபுரியிலும், கிருஷ்ணகிரியிலும் ''சிட்கோ'' மூலம் தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனாலும் இப்பகுதிகளில் குறிப்பாக - தருமபுரி பகுதியில் தொழில் வளர்ச்சி போதிய அளவு இல்லை. அரசு முயற்சிக்கு ஈடாக, தனியார் நிறுவனங்களும் தொழிற்சாலைகளை அமைத்து வேலை வாய்ப்பை உருவாக்கலாம். இதற்காகப் பல்வேறு சலுகைகளையும் அரசு அறிவித்துள்ளது.

படித்து வேலையில்லாத இளைஞர்கள் தொழில் துவங்குவதற்காகக் கடனுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில் 400 நபர்களுக்குக் கடனுதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் 212 நபர்களுக்கு ரூ.37.34 இலட்சம் கடனுதவி அளிக்கப்பட்டது.

புதிய தொழில்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக்கடன், விற்பனை வரி தள்ளி வைப்பு மற்றும் பென்னாகரம் வட்டத்தில் துவக்கப்படும் புதிய தொழில்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு விற்பனை வரி தள்ளுபடி போன்ற பல சலுகைகளும், வசதிகளும் உள்ளன. கடந்த ஆண்டில் 9 சிறுதொழில் நிறுவனங்களுக்கு ரூ.7.64 இலட்சம் வட்டியில்லா விற்பனை வரிக்கடன் அளிக்கப்பட்டது.

புதிய தொழில்களுக்கு முதல் மூன்று ஆண்டுகளுக்கு முறையே 30, 20 மற்றும் 10 என்ற சதவிகிதத்தில் மின் கட்டண மானியம் அளிக்கப்படுகிறது. கடந்த ஆண்டில் இதன்படி, 31 சிறுதொழில் நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்பட்டது.

தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பங்குத் தொகை (முதலீடு கடனு தவித் திட்டத்தின்கீழ், தொழில் கூட்டுறவு முறையில் துவங்கப்படும் புதிய சிறு தொழில்களுக்குப் பங்குத் தொகை முதலீடு கடனுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டில் 35 நபர்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

நலிவுற்ற சிறுதொழில் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் நலிவுற்ற சிறு தொழில்கள் மீண்டும் செயலாக்கத்திற்குக் கொண்டு வருவதற்கு நடைமுறை மூலதனத்தை நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுத்தர ரூ.50,000 வரை நடைமுறை மூலதன விளிம்புத்தொகை அளிக்கப்படுகிறது. கடந்த ஆண்டில் பல சிறு தொழில் நிறுவனங்களுக்கு நடைமுறை மூலதன விளிம்புத் தொகையாக வழங்கப்பட்டது. நடப்பு ஆண்டில் இதற்கென ரூ.2 இலட்சம் வரை ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்குத் தொழில் துவங்கிட, குறைந்த வட்டியில் கடனுதவி அளிக்கப்படுகிறது. கடந்த ஆண்டில் 41 நபர்களுக்கு ரூ.2,14,500 கடனுதவி அளிக்கப்பட்டது.

புதிய தொழில்களுக்கு அவற்றின் நிலையான முதலீட்டில் 15 சதவிகிதம் அல்லது ரூ.15 இலட்சத்திற்கு மிகாமல் மானியமாக வழங்கப்படுகிறது. தருமபுரி மாவட்டத்தில் ஓசூர் வட்டம் தவிர மற்ற 7 வட்டங்களிலும் தொடங்கப்படும் தொழிற்சாலைகளுக்கு இச்சலுகை உண்டு. ஆனாலும் ஓசூர் வட்டத்தில் சிட்கோ, சிப்காட் போன்ற அரசு நிறுவனங்களினால் ஏற்படுத்தப்பட்ட தொழில் பேட்டைகளில் துவங்கப்படும் புதிய தொழில்களுக்கு இச்சலுகை உண்டு.

நிதி நிறுவனங்களின் மூலமாகக் கடனுதவி பெற்று புதியதாக ஜெனரேட்டர் வாங்க விரும்புபவர்களுக்கு 15 சதவிகிதம் மானியம் அளிக்கப்படுகிறது. புதியதாகத் தொடங்கப்படும் கயிறுப் பொருட்கள் உற்பத்தி தொழில் நிறுவனங்களுக்குக் கயிறு வாரியம் மூலமாக 25 சதவிகிதம் முதலீடு மானியம் வழங்கப்படுகிறது.

மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் வங்கியின் மூலதனக் கடன் உதவி பெறத் தேவையான விளிம்புத் தொகையாக ரூ.25,000 அல்லது கடன் தொகையில் 20 சதவிகிதத்துக்கு மிகாமல் குறைந்த வட்டியில் மாவட்டத் தொழில் மையம் வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டில் 13 நிறுவனங்களுக்கு ரூ.2.50 இலட்சம் கடனுதவி அளிக்கப்பட்டது.

தருமபுரி மாவட்டத்தில், ஓசூர், கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி வட்டங்களைத் தவிர இதரப் பகுதிகளில் தொழில் நிறுவனங்கள் மிகக்குறைவாகவே உள்ளன. குறிப்பாக, பென்னாகரம் வட்டத்தில் சுமார் 130 சிறுதொழில் நிறுவனங்களே இருக்கின்றன. மத்திய ரக மற்றும் பெரிய தொழில் நிறுவனங்கள் எதுவுமே இல்லை. இதனால் இப்பகுதியைத் 'தொழிலில் மிகவும் பின்தங்கிய வட்டம்' என அரசு அறிவித்துள்ளது. தருமபுரி மாவட்டத்தில் மற்ற வட்டங்களில் இல்லாத 5 ஆண்டு விற்பனை வரி தள்ளுபடி சலுகை இவ்வட்டத்தில் தொழில் தொடங்குவோருக்குக் கிடைக்கும்.

புதிய தொழில்கள் உருவாக்கிட தொழில்முனைவோர் முன் வந்தால்தருமபுரி மாவட்டம் தொழிலில் ஒரு முன்னோடி மாவட்டம் ஆவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கிறோம்.

TNPSC

விளம்பர எண் 40/90

தமிழ்நாடு செயலகத்தின் வெவ்வேறு துறைகளில் (சட்டத் துறை தவிர்) தமிழ்நாடு செயலகப் பணியில் ஏற்பட்டுள்ள 66 உதவியாளர் பதவியின் காலியிடங்களில் நியமனம் செய்வதற்கு தமிழ்நாடு அமைச்சுப் பணி மற்றும் தமிழ்நாடு நீதித்துறை அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளராகப் பணியாற்றுவோரிடமிருந்து விண்ணப்பங்கள் 10.12.90 அன்று மாலை 5.45 மணி வரையில் வரவேற்கப்படுகின்றன. நியமன ஒதுக்கீட்டு விதி இத்தெரிவுக்குப் பொருந்துமாகையால் மேற்படி காலியிடங்கள் கீழே குறிப்பிட்டுள்ளபடி இனச்சுழற்சி முறையில் பகிர்ந்தளிக்கப்படும்:-

| | | |
|---|---|---|
| தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/பழங்குடியினர் | ... 12 | (4 பெண்களுக்கும்<br>1 உடல் ஊனமுற்றோருக்கும் ஒதுக்கப்பட்டது.) |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் | ... 13 | (4 பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது) |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | ... 19 | (6 பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது) |
| பகிரங்கப் போட்டி | ... 22 | (7 பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது) |
| | 66 | |

குறிப்பு:-

(1) இந்த காலியிடங்கள் எண்ணிக்கை தோராயமானவையே. தெரிவு செய்யும்போது இதில் மாற்றங்கள் ஏற்படலாம்.

(2) ஒவ்வொரு இனச்சுழற்சியிலும் தேவையான எண்ணிக்கையில் பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கவில்லையெனில் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட காலியிடங்களில் ஆண் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவர். அதேபோல உடல் ஊனமுற்றோருக்கான காலியிடத்திற்கு உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர் கிடைக்கவில்லையெனில் அந்த இடத்தில் உடல் ஊனமில்லாதவர் நியமிக்கப்படுவார்.

2. **சம்பளம்:-** ரூ.1100 - 25 - 1150 - 30 - 1660.

**குறிப்பு:-** தமிழ்நாடு அமைச்சுப்பணி மற்றும் தமிழ்நாடு நீதித்துறை அமைச்சுப்பணியின் இளநிலை உதவியாளர் இப்பணிக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவரது சம்பளம் அடிப்படை விதி 22(2)-ன் படி சரி செய்யப்படும். தேர்வு நிலை இளநிலை உதவியாளர், உதவியாளர் மற்றும் தேர்வு நிலை உதவியாளர்களைப் பொறுத்த மட்டில் அவர்களது சம்பளம், விகிதத்தின் படியில் (Stage) இருக்குமேயானால் அதேபடி நிலையில் நிர்ணயிக்கப்படும். இல்லையென்றால் கீழ் நிலையில் நிர்ணயிக்கப்பட்டு அதில் ஏற்படும் ஊதிய வித்தியாசத்தினை எதிர்வரும் ஊதிய உயர்வில் சேர்த்துக் கொள்ளும் வகையில் Personal pay ஆக அடிப்படை விதி 22(i) (b) (II) -யின்படி நிர்ணயம் செய்யப்படும்.

3. **வயது:-** 1.7.90 அன்று தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கு 35க்குக் குறைவாகவும் மற்றவர்களுக்கு 30-க்கு குறைவாகவும்.

4. **கல்வித் தகுதி:-** பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட ஒரு இளையர் பட்டம்.

இத்துடன், விண்ணப்பதாரர்கள் 1.8.90 அன்று பணியாற்றும் துறையில் (Parent Department) வகித்த அல்லது அவர்கள் வகிக்கின்ற பதவியில் தகுதிகாண் பருவத்தை முடித்தவராகவும், இளநிலை உதவியாளர் பதவியிலோ அல்லது உதவியாளர் பதவியிலோ அல்லது இவ்விரண்டிலும் சேர்த்தோ 5 ஆண்டுகட்குக் குறையாமல் பணியாற்றியவராகவும் இருக்க வேண்டும்.

குறிப்பு:- தண்டிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட மாட்டார்கள். அத்தகைய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள், சம்மந்தப்பட்ட மேலனுப்பும் அதிகாரிகளால், தேர்வாணைக்குழுவிற்கு அனுப்புதல் கூடாது. விண்ணப்பதாரர் மீது குற்றம் சாட்டப்பட்டு விண்ணப்பம் அனுப்பப்படும் நாள் வரை அக்குற்றச்சாட்டுகள் மீது தீர்ப்பு வழங்கப்படாமல் இருந்தால் அவரது தேர்வு முடிவு நிறுத்தி வைக்கப்படும். இறுதியில் மேற்படிகுற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவருக்கு ஏதாவது தண்டனை வழங்கப்படுமானால் அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படமாட்டார்.

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப்பற்றிய முழு விவரங்களும், செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களிடமிருந்து எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ, அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண், விளம்பர நாள் முதலியவற்றைக் குறிப்பிட்டு எழுதி, செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்கட்கு வழங்கக்கூடிய 1.10.90 அன்றோ அதற்குப் பின்போ வாங்கப்பட்ட ரூ.10/-க்கான (ரூபாய் பத்து) சென்னை, அண்ணாசாலை, தலைமை அஞ்சல் நிலையத்தில் செலுத்தத் தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலருக்கு வழங்கக் கூடிய 1.10.90 அன்றோ அதற்குப் பின்போ வாங்கப்பட்ட பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம் விளக்குக் கிளை, சென்னை-6-இல், செலுத்தத்தக்க ரூ.10/-க்கான கேட்பு காசோலை (Demand Draft) யுடனும் சுயவிலாசமிட்ட உறையுடனும் (26x12 செ.மீ) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அதன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/2737/MS/90/MCS

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

அதி நவீன பாலியெஸ்டர் வகைகள்




உங்கள் மனதைக் கவர்ந்தவை மலர்கள்.
அவைகளின் அற்புத வண்ண ஜாலங்களை
உங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது,
மிக நவீனமாக அழகு மிளிரும்
பாலியெஸ்டர் புடவை வகைகளில்!

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

**கோ-ஆப்டெக்ஸ்**
தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23





மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 25.10.90 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் பங்கேற்று காவலர் குடியிருப்பு, பயணியர் விடுதி ஆகியவற்றைத் திறந்து வைத்தார்; குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.




